சித்திரை - ஆவணி 2025 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 4 பாடல் 13






**C.பாஸ்கரன்** எம்.ஏ.,பி.எட்.,எம்ஃபில்.,
**R. அகிலாதேவி** எம்.எஸ்ஸி.,பி.எட்.,

# ஒரு சொல் கேளீர்

பொது உழைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய செயல்பாட்டாளர்கள் அனைவருக்கும் எமது அன்பு வணக்கம்.

சென்ற முறை கண்ணாமூச்சியில் பெரிதாக பேசப்பட்டது தலையங்கப்பகுதியான விருதும் விழைவும். அதில் அறிவு உழைப்பு கொண்டாடப்படுவதும் உடல் உழைப்பு கண்டு கொள்ளாமல் ஒதுக்கப்படுவதும் குறித்து விவாதித்திருந்தோம்.

தலையங்கத்தின் உள்ள எங்கள் ஆசிரியர் குழுவின் விழைவையும் வேண்டுகோளையும் மிகச் சரியாக உள்வாங்கிப் படித்தவுடன் உங்கள் கோரிக்கை நியாயமானது; தலையங்கத்தில் உள்ள உழைப்பாளர்கள் மீதான பார்வை; உழைப்பை மதிக்கும் உன்னதம்; விருதுகள் அவர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும்; நீங்கள் முன்னெடுங்கள்ப் என்னாலான பங்களிப்புச் செய்கிறேன் என்று அகரச்சுழி இட்டார் விடுதலைப்பாவலர் இலரா மோகன். தலையங்கத்தின் முதன்மைப் பகுதிகளை உச்சம்காட்டி வண்ணமிட்டு முகநூலில் அடையாளப்படுத்தியிருந்தார் எழுத்தாளர் பேரா.சு.இராமசுப்பிரமணியம்.

தலையங்கத்தை படித்தவுடன் எளிய மக்களுக்கான இதழ் எளிய மக்கள் குறித்து தான் பேசுகிறது என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருந்தார் கவிஞர் செழியரசு.

ஓர் இதழுக்கு தலையங்கம் எவ்வளவு முக்கியம் என்பதையும் அது எது குறித்து பேசுகிறது என்பதையும் உழைக்கும் மக்களின் மீதான கண்ணாமூச்சியின் அக்கறை குறித்தும் அவசியம் இதனை முன்னெடுக்க வேண்டும் என்று ஒரு நீண்ட பதிவை முதன் முதலில் எழுயிருந்தார் தோழர் பாரதி மோகன்.

தஞ்சாவூர் நூலகக் கூட்டத்தில் கண்ணாமூச்சியை செழியரசு அவர்கள் அறிமுகம் செய்து பேசிய பிறகு ஒருசிலர் என்னிடம் சந்தா செலுத்தி இதழைப் பெற்றுக்கொண்டனர். இரவு எட்டு முப்பது மணிக்கு மேல் ஒரு தந்தி மர வெளிச்சத்தில் நண்பர்கள் நாங்கள் நாலைந்துபேர் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு தோழர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு மிகச் சரியான செய்தியைப் பதிவுசெய்து இருக்கிறீர்கள் மிகுந்த மகிழ்ச்சி என்று தன் அன்பை வெளிப்படுத்தினார்.

பாவாணந்தம் பதிப்பக உரிமையாளர், தோழர்.திருச்சி திருநாவுக்கரசு அவர்கள் தொலைபேசி செய்து மிகவும் முதன்மையான விடயத்தைப் பேசியிருக்கிறீர்கள் கண்ணாமூச்சியின் பெயரால் நீங்களே முன்னெடுங்கள் என் பங்களிப்பு தொகையாக ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று சிறுசுடரேற்றினார்.

ஓர் எழுத்தாளன் தன் பங்களிப்பைச் செய்யவில்லை என்றால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடப் போவதில்லை. ஆனால் ஒரு துப்புரவுத் தொழிலாளி அவருடைய பங்களிப்பைச் செய்யவில்லை என்றால் ஊரும் தெருவும் நாறிப் போய்விடும். அந்த உடல் உழைப்பு மதிக்க வேண்டும். அவர்களுக்கான வெளிச்சத்தையும் அங்கீகாரத்தையும் நாம் கொடுத்தே ஆக வேண்டும். இதனை யாரோ ஒரு பெருமுதலாளியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொடுப்பதை விட மக்களுக்கான பேருழைப்புச் செய்பவர்களைப் பாராட்டுவதற்கு மக்களிடமே தொகையைப் பெற்று வழங்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளது கண்ணாமூச்சி ஆசிரியர் குழு.

அந்த வகையில் கண்ணாமூச்சி நிறுவனர் கவிஞர் பரிதிபாண்டியன் அவர்களின் பெயரால் உடல் உழைப்புச் செய்யக்கூடிய உழைப்பாளர் தோழர்களுக்கு வருடம்தோறும் ஒரு லட்சம் ரூபாய் பணம் முடிப்பும் கண்ணாமூச்சி விருதும் கொடுக்க இருக்கிறோம் என்று ஒரு மனதாக முடிவு செய்துள்ளோம். இதற்கான பங்களிப்பை சமூக அக்கறை உள்ளவர்களிடமிருந்து பெற்று வழங்குவது என்றும் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் ஒருவரிடமிருந்து ரூபாய் ஆயிரம் மட்டுமே பெறுவது. அதற்கு மேல் தேவையில்லை. ஒருவர் எத்தனை பேரை வேண்டுமானாலும் அறிமுகப்படுத்தலாம். விருதினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

தன்னைப் பற்றி தானே எழுதி விண்ணப்பிப்பது கொஞ்சம் கூச்சம்தானே..!

ஆதலால் பயனாளர்களை கண்ணாமூச்சி ஆசிரியர் குழு முடிவு செய்யும். எந்தவிதமான ஆடம்பரமும் விழாவும் இல்லாமல் அவர்களது இல்லம் தேடிச்சென்று விருதும் பணம் முடிப்பும் கொடுப்பது என்று முடிவு செய்துள்ளோம்.

விருப்பம் உடையவர்கள்தங்களுடைய பெயரைப் பதிவு செய்யலாம். தொடர்பு எண் முகவரி போன்றவற்றை பக்கம் 46-ல் தெரிவித்துள்ளோம்

இது சரியான முன்னெடுப்பாக இருக்கும் என்று தான் நினைக்கின்றோம். முகநூல், புலன, குழுக்கள், தோழமை உரையாடல்கள் என வாய்ப்புள்ள இடங்கள் எல்லாம் பகிர்ந்து கொள்ளுங்கள்.. இணைந்து நின்றால் எதுவும் சாத்தியமாகும்.

– ஆசிரியர் குழு

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ்

தனிச்சுற்று

திருவள்ளுவர் ஆண்டு 2056

சித்திரை-ஆவணி 2025

நிறுவனர்
**ப. பரிதிபாண்டியன்**

ஆலோசகர்
**அம்ரா பாண்டியன்**

ஆசிரியர்
**கோ.அருணகிரி**

ஆசிரியர் குழு
**கலைபாரதி**
**த.ரெ.தமிழ்மணி**
**சா.தமிழ்ச்செல்வன்**
**ஞா.ஜெயக்குமார்**
**சா.சிவகுமார்**
**பாலகுமரன்பரிதி**
**தமிழாதன்**
**க.சந்தானலட்சுமி**

அட்டைப்படம்
**கலைபாரதி**

இதழ் வடிவமைப்பு
**விடா பப்ளிகேஷன்ஸ்**



தொடர்பு முகவரி
**சன்மேன் டெய்லர்ஸ்**
9 அரிசிக்கடைத்தெரு, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்-614001
செல்பேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com



கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.


## உள்ளே...


**கட்டுரை**

**அம்பி** — 10
சு. இராமசுப்பிரமணியன்

**காசி ஆனந்தன் கதைகள்** — 15

**கட்டுரை**

**பாரதி படைப்புகளில் பேசாப்பக்கத்தை பேசும் ஆவணப்படம்** — 19
ரவி சுப்பிரமணியன்

**ரஷ்ய சிறுகதை**

**வாழ்க்கைப் புத்தகத்தில் எழுதப்பட்டது தமிழில்** — 24
யூமா வாசுகி

**ஆய்தல்**

**வானாந்திரம் என்னும் பொதுமைப் பூரணம்** — 34
கோ.பாரதி மோகன்



சந்தா விவரம்:

**தனி இதழ். 30**

**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட

**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட

சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# சாவுமுதல்

கோ.அருணகிரி

**வா**சலுக்கு சாணிக்கரச்சிப் போட்டுட்டு அடுப்புசாம்ப அள்ளிட்டு, ராத்திரிப்பூரா தூக்கமில்லாம பொரண்டு பொரண்டு படுத்தது தலைய ஒருபக்கமா விண்ணுவிண்ணுன்னு வலிக்குது.. பாலுக்காரனுவ வர ஏழுமணியாவும். ஒரு வரத்தண்ணிப் போடுவோமுன்னு அடுப்பப் பத்தவச்சா ஈரக்கருவமுள்ளு போல.. எரியாமப் பொகஞ்சி பொகஞ்சி எரியுது.. அணையுது.. எழவுமசுரு எங்க போனாலும் நமக்கு அதிஷ்டம் அஞ்சல்ல வருதுன்னா ஒத்திரியம் தந்தில வருதுன்னு திட்டிக்கிட்டே வெளக்க எடுத்து , அதுல இருந்து மண்ணெண்ணய ஒரு பேப்பருல ஊத்தி, நெருப்புக் குச்சியக் கிழிச்சி பேப்பருல காட்டுனதும் திகுதிகுன்னு எரிஞ்சது. மெல்ல அப்படியே முள்ள எல்லாந் தூக்கி, எரியுற பேப்பர அதுக்குக் கீழக் கொடுத்ததும் மெல்ல சுள்ளியில தீப்புடுச்சி எரிய ஆரம்பிக்கையில வெளிய ஏதோ கொரக் கேட்டுச்சி. அந்தா இந்தான்னு இப்பதா அடுப்புப் புடிச்சி எரியுது. இப்படியே விட்டுட்டுப் போனா திரும்ப வந்து இதோட மாரடிக்கனுமுன்னு ஒரு ஏனத்துல தண்ணிய ஊத்தி, அரையச்சி வெல்லத்தப்புட்டு அதுலப்போட்டு, கொதி வரட்டுமுன்னு வுட்டுட்டு வூட்டுக்குள்ளாற இருந்தமேனிக்கே குனிஞ்சி பாத்திச்சி அலமேலு. இந்தப் பொகையில உட்கார்ந்திருந்த கண்ணு எரிச்சல்லயும், வெளில பனி வெலகாம ஒரே வெள்ளேவெளேருன்னு இருந்ததாலயும் ஆளு யாருன்னு சரியாப் புரிபடல.

“ஆயி.. அம்மா நம்மள வுட்டுட்டுப் போயிட்டாயின்னு..” அழுதகொரலு மட்டும் நம்ம குடியாளு சின்னையன் கொரலுன்னு நல்லாப் புரியுது.

சின்னையண்ணே என்ன சேதியா வந்திருக்குன்னு அலமேலுக்கு நல்லா புரிஞ்சிப் போச்சி. என்னப்பெத்த அம்மான்னு கத்திக்கிட்டே ஓடியாந்த அலமேலு நெலவாசப்படியில நங்குன்னு தலமோதி மாரமல்லாக்க வுழுந்திச்சி. வாசல்ல நின்ன சின்னையன், “அம்மாவே போயிட்டு, நீயாவது பாத்துவரக் கூடாதா தாயி.. உச்சந்தலை பொடச்சிப் போயிடப் போவுது..”ன்னு பரபரன்னு உள்ளங்கைய வச்சித் தேச்சது. கட்டவிரல வாய்க்கிட்ட வச்சி தண்ணிவேணுங்குற மாரி சைகை பண்ணிச்சி அலமேலு.

நெலப்படியத் தாண்டையில ஒருநிமிசம் யோசிச்ச சின்னையன், ஆவத்துக்குப் பாவமில்லன்னு உள்ள ஓடி தம்ளரத்தேடி, தண்ணிக்கொடம் எங்கே இருக்குன்னுத் தடுமாறி, தண்ணியமொண்டு வந்து கொடுத்தப்பத்தா(ன்) அலமேலுக்குப் போன உசுரும் வந்துச்சி.



மூணு ஆம்பளப் புள்ளையையும் கடக்குட்டியா அலமேலுவையும் பெத்திச்சி அலமேலு அம்மா அருமக்கண்ணு. அது புருச(ன்) செத்ததும் அம்மாவ யாரு பாத்துக்குறதுன்னு மூணு பயலுவக்குள்ளேயும் சண்ட சிக்கிமுக்கியாடுது. செல்லத்துரை மட்டும் படிச்சிட்டு டவுனுல வாத்தியாரா இருக்காரு. மத்த ரெண்டு பேரும் ஊருல வெவசாயம் பாக்குறானுவோ.

“ஒன்னத்தா படிக்க வச்சாவோ. கவருமெண்ட்டு சம்பளக்கார(ன்). நீதான் அம்மாவப் பாக்கணும்“னு மத்த ரெண்டு பேரும் சொல்ல,

“எனக்கு ஒன்னுமில்ல. கிராமத்துல இருந்து பழகுனது. டவுனு அதுக்குச் சரிபட்டு வருமான்னு யோசிக்குறேன்னு” இழுத்தாரு செல்லத்துரை.

“ரெண்டு வூட்டு விருந்தாடி கெண்ட ஏறி செத்தாங்குறமாரி மூணு புள்ளையோளப்

பெத்தும் அம்மாவ யாரு வச்சிக்கிறதுன்னு ஏலம் போடுறியா.. அது என்ன சோறு திங்கப்போவுது? நா ஏ வூட்டுல கொண்டுப்போயி வச்சிக்கப்போறேன்"னு அலமேலு கோவமா அருமகண்ணு கையப்புடிச்சி இழுத்துக்கிட்டுப் போனிச்சி.

"யம்மா.. ஒன்னப்பெத்த வயத்துலதா நா அவனுவளயும் பெத்தேன். அவனுவ எச்சிப்பாலு குடிச்சி வளந்த ஒனக்கு இருக்குற ரோசங்கூட அவனுவளுக்கு இல்ல. நீ தான் எம்பொண்ணு? ஒ வூட்டுக்காரு...?

பெத்த தாயப் பாக்காம கொண்டாங்கொடுத்தான் வூட்டுல வந்து வுட்டுட்டான்னு ஊருசனம் அவனுவளதா(ன்) காறித்துப்பும். அந்த கெட்டப்பேரு என்னால அவனுவளுக்கு வேண்டாம். எம்புருசன் இருந்த வரைக்கும் யாருவூட்டு வாசல்லயும் என்னப்போயி நிக்கவுடல. ரோசக்காரனுக்குப் பொறந்தேன். ரோசக்காரனுக்கு முந்தி விரிச்சேன். ரோசக்காரியாவே இருந்துட்டு சாவுறேன்"னுச்சி அலமேலு.

பெரியவன் செல்லத்துரை மட்டும்,

"என்ன படிக்க வச்சிய, அதுனால இருக்குற சொத்த மூணா பிரிச்சி எனக்குத் தரவேண்டாம். குலதெய்வத்துக்குப் பூசபோட்டு கிடாவெட்டுனா கறிய எடுத்துக்கிட்டு நா டவுனுக்குப் போவ முடியாது. என்னத் தேடிவார பங்காளியளுக்கோ, மாம மச்சினனுக்கோ சமச்சிப்போட, சாமிவரயில எனக்கு எளயவனுவ வூட்டுல நின்னு நா தேங்கா ஒடைக்க முடியாது. அதனால ஒரு வூடுகட்ட மட்டும் எடம் கொடுத்தா போதும். மீதி, விவசாய நிலம் எதுவும் எனக்கு வேணாம். டவுனுல இருந்துக்கிட்டு நா பாக்ககேட்க முடியாது. ஊரோட இருக்குற தம்பியளுவோ வச்சிக்கிட்டு நல்லா இருக்கட்டும்.." என்றான்.

ஆனா, அவன் பொஞ்சாதி,

"ஊரு ஒலகத்துல கேட்குறமாரி எல்லாத்துலயும் சரிபாதியா இல்லாட்டியும் ஏதோ கொஞ் சத்துல கொஞ்சமாவது பணமா தரலாமே" ன்னு கேட்டவளையும் அசமடக்சி அழச்சிட்டுப் போயிட்டான் செல்லத்துரை.

"எத யாருகிட்ட கொடுத்தாலும், நீயும் நானும் கட்டிக்கிட்டு வந்து கொட்டாயிப் போட்டுக் குடும்பம் நடத்த ஆரம்பிச்ச மாமரத்துக் கொல்லைய மட்டும் யாருகிட்டேயும் கொடுக்க வேணாம். நாம ரெண்டு பேருல யாருமுன்னப் போறா, யாரு பின்னே போறான்னு தெரியாது. இருந்தாலும் அந்தக் கொல்லையிலேயே இருப்போம். நம்ம காலத்துக்குப் பிறகு கடேசி காலத்துல எந்தப் புள்ள நம்மகிட்ட ஒட்டுதலா இருக்கோ, அதுகிட்ட கொடுத்துட்டுப் போவோன்முனு சொன்ன மனுசன் வாக்கு தெய்வவாக்காயிட்டு. அவரு காலத்துக்கு அப்புறம் எம்பொழப்பு வண்டிமாடு மூத்தரம் போறாப்புல வளஞ்சி நெளிஞ்சிக் கெடக்கு. இன்னும் யாருக்கிட்டப் போய் நின்னு ஒருவாயி சோறுதண்ணி எப்ப கொடுப்பாவோன்னு தொன்னாந்துக்கிட்டு நிக்க முடியாது. அந்த மாமரத்துக் கொல்லையிலேயே நா கொட்டா யிப்போட்டு இருக்குறேன்னு" ரோசமாப் போன அருமைக்கண்ணு கடேசி வரைக்கும் எந்தப் புள்ளவூட்டுக்கும் போகல.

"நடவுநாத்து வேலைக்குப் போறது; ஒரு பசுமாட்ட வச்சிக்கிட்டு பால் கறக்குறது; ரெண்டுமூணு வெள்ளாட்டவச்சி வளக்குறதுன்னு ஏம்மா நீயி தனியா கெடக்குறத நெனச்சாலே எனக்கு நெஞ்சி பதறுது. ஏம்மா இந்த ஆடுமாடுவள வச்சிக்கிட்டு வேற போராடனுமா?"

"இல்லடியாயா நா நடவுநாத்துக்குப் போறது ஏ(ன்) வயிறு கழுவவே சரியா இருக்கு. நல்லது கெட்டதுக்கு ஒங்க அப்பாரு பேரப்போட்டு பத்திரிக்க கொண்டாந்து வூடுதேடி வந்து கொடுக்கையில நா வெறுங்கைய வீசிக்கிட்டா போவமுடியும்?"

"ஏன் நீ நல்லதுகெட்டதுக்கு செஞ்சி மொய்யா வாங்கப்போறே? ஊருக்கு ஆம்பளையோளா இருக்குற ஒ மொவனுவளுக்கு கொடுக்க வேண்டியது தானே?"

"நம்மள மதிச்சு வூடுதேடி வருதுவோ. எப்படியாயா மூஞ்சியில அடிச்சாப்புல சொல்ல முடியும்?. அப்படியும் எல்லாத்துக்கும் போறதில்ல. இந்தா போனமாசம் நம்ம சின்னையன், அவன் பேத்திக்கு கல்யாணமுன்னு முட்டாயி பழமெல்லாம் வாங்கியாந்து பத்திரிக்க வச்சான். ஏம்ப்பா நீ அவனுவளுக்குக் கொடுப்பா. நா வந்தா சபை நெறயப் போவுது? சின்னவனும் நடுப்பயலும் வருவானுவோ. எனக்கு அவனுவ மூஞ்சில முழிக்கிறதுக்கே பச்சநாவியா இருக்குன்னு சொல்லியும், அவன் பிடிவாதமா, நீங்க வராட்டி "நா பொண்ணு மாப்ளையக் கூட்டிட்டு வந்துருவேன்"னு சொல்லிட்டுப் போனான். நம்ம வீட்டுல குடியாளு மாதிரி இல்லாம ஒரு புள்ள மாதிரியே இருந்தவன் நா இங்குன கொட்டாயி கட்டிக்கிட்டு வந்தப்புறம், பொழுதுபட்ட பிறகும் அவன் என்னைய வந்து பார்க்காமப் போனதில்ல. எங்கையாவது வேலைக்கு போயிட்டு வாரப்ப பில்லு கெடந்தா அறுத்துக் கொண்டாந்து ஆடுமாடுவளுக்குப் போடுங்க ஆச்சின்னு போட்டுட்டுப் போவான். நேத்துகூட வெளக்குக்கு

மண்ணெண்ண இல்லப்பா, டவுனுக்குப் போனா வாங்கியாப்பான்னே, அது ரெண்டு நாளு ஆவும் நான் போறதுக்கு. அதுவரைக்கும் இத வச்சிக்குங்க ஆச்சின்னு, அவன் வூட்டுல இருந்த மண்ணெண்ணய ஒரு சீசாவுல ஊத்தியாந்து கொடுத்தான். அவன் வூட்டு விசேசத்துக்குப் போயி, காலு கும்புட்டப் புள்ளையோருக்கு ஆளுக்குப் பத்து ரூவா பணத்தவச்சிக் கொடுத்துட்டு வந்தேன். இந்த ஆடுமாடுவள வச்சிக்குறவாசி கைகூசாம செலவு பண்ணிக்குறோம். இன்னைக்கு சொல்றேண்டி யாயா நா செத்துக்கெட்டுப் போனாலும் எந்தப் பயலும் கைய அறுத்துக்கிட்டு செலவு பண்ண வேணாம். ஏஞ் சாவுமொதலுக்கு உண்டானத தலமாட்டுல வச்சிட்டுத்தான் சாவேன். ரோசக்கார அப்பனுக்குப் பொறந்தேன். ரோசக்கார புருசனுக்கு முந்திவிரிச்சேன்; அதே ரோசத்தோடவே ஏங் கட்ட காட்டுலப் போயி வேவும். ஆமா.. சொல்லிட்டேன்.

"ஏம்மா அப்பிடி சொல்றே..? அண்ணனுவோ எப்படி இருந்தாலும் நா ஒன்ன வுட்ருவேனா...?"

"அடி.. நீ என்னடி பேசுறே? கொண்டா கொடுத்தான் வந்து எனக்கு சாவுமொதல் போட்டா அது ஏம் புள்ளையோளுக்கில்ல அசிங்கம்...!"

"பாத்தியா புள்ளையோள விட்டுக்கொடுக்க மாட்டியே.. ஏம் புருசந்தா கொண்டாங்குடுத்தான். நா ஓம் பொண்ணு இல்லையா...?

"அத இல்லேன்னு சொல்லலயே. எங்க ஆயிய பாக்கல கேக்கல. தனியா கெடந்து ஆக்கித் திங்குறா.. எனக்கு வரிச ஒரு கேடான்னு, பொங்கலு தீவாளிக்கி நீயி வரிச வாங்குறது இல்லன்னு எப்ப நிறுத்தினியோ, அடுத்த வருசத்துலேந்து ஏங் கண்ணு இருக்குற வரைக்கும் ஏம் பொண்ணுக்கு நா கொடுக்குறேண்டான்னு, ஆடுமாட வித்தோ, நடவுநாத்து நட்டோ ஒனக்கு வரிச கொடுத்துட்டு இருக்கேன்."

"அத நான் இல்லேன்னா சொன்னேன்...!"

வரிச ஒனக்கு ஏ ஆயி வேணாங்குறே? அம்மாவ நாங்க பாக்கலேன்னா..? அது தனியா கெடந்து ஆக்கித் திங்குறதுக்கு நாங்க என்ன பண்ணுவோம்னு நல்ல மனுசனாயிருந்து, கூடப்பொறந்த பாசம் இருந்தா கேட்கனுமா இல்லையா?"

"எங்கே கேட்டானுவோ.. வேணானுன்னு சொன்னதும் தல வுட்டிச்சின்னு இருக்காணுவோ.. சரி அவனுவதா அப்படின்னா, கட்டிக்கிட்டு வந்த செறுக்கியளாவட்டும், நீ ஏன் வரிச வேணாங்குற? ஒங்க ஆயிஅப்பன் தேடுனதுலதானே நாங்க வாழ்ந்துட்டு இருக்கோம். பொறந்த பொண்ணு நீ மனசு கஷ்டப்பட்டா நாளைக்கு எங்க புள்ளக்குட்டிங்க நல்லா இருக்குமான்னு நல்லவளுவளா இருந்தா கேட்கனுமா இல்லையா...?

"ஏ கேட்கலையா அவளுவோ...?"

"எங்க கேட்டாளுவ.. சரி நமக்கு வந்ததும் சரியில்ல.. வாய்ச்சதும் சரியில்லன்னு நம்ம தலையெழுத்துன்னு நா பாட்டுக்கு இருக்கேன்...!"

"அவனுவ நல்லவனுவொதாம்மா வந்த செருக்கியதா சொல்லிக் கொடுத்து வச்சிருக்காளுவோ...!"

"ம்க்கும்.. மொவனுவள வுட்டுக்கொடுக்க மாட்டியே. கேவுருல நெய் வடியுதுன்னா, கேக்குறவனுக்குப் புத்தி வேணாம். இன்னக்கி மாசத்துல ரெண்டு மாசத்துல ஒரு வெட்டுக்குத் தென்னமரம் காய்க்குது. மாடுகன்னு, நெலம்நீச்சி எல்லாம் எங்கப்பன் மாட்டுத்தரவுப்பண்ணி, கெணருவெட்டி சொத்து சொகத்த தேடுனவாசிதானே இவளுவோ மஞ்சக்குளிக்கிறாளுவோ!"

"அடிபோடி நீ ஒருத்தி. மத்த ரெண்டு பயலுவோ மேலயும் எனக்கு சுத்தமா பிடிப்பு வுட்டுப்போச்சி. மூத்தவன் செல்லதொரய மட்டும் மனசு ரெண்டுல ஒருக்க, மூணுல ஒருக்க நெனச்சிக்குது."

"ஆமா.. கேட்கலாமுன்னு நெனச்சேன்.. பெரியண்ணன் எடயில எதுவும் வந்திச்சா."

"ம், போன சாலக்கெழம வந்தான். சாலனோட சாலன் எட்டு, வெள்ளி ஒம்பது, சனி பத்து நாளாச்சு அவன் வந்து போயி."

"அதாவது ஒன்ன வந்து பாத்துட்டுப் போகுதே.."

"அவன் படுற பாட்ட பாத்தா எனக்கு கும்பி கொதிக்குது."

"ஏங் கவர்மெண்டு காசு. டவுனுல வூடு. நல்லாதானே இருக்கு."

"சிங்காரி கொண்டையில தாழம்பூவாம். உள்ளாறப் பாத்தாக்கா ஈரும்பேனாமுன்னு, ஊருசனம் நெனக்குறமாரி, நீயும் நெனக்கிறப் போலிருக்கு. போனவாட்டி வந்தவன் ரெண்டுபடி கல்லயும், ஒரு பத்து கா தேங்காயும் எங்கையாவது வாங்கி கொடும்மான்னு காச நீட்டுனான். அடச்சீ கழுத காச வைடான்னு பட்டாமணியார் வூட்டுக்கு கல்லாயப் போனதுக்கு, கூலியா கொடுத்த கல்லய நா வாங்கல. நீ வந்தா புள்ளையோ அவுச்சித் திங்குமுனு நிப்பாட்டி வச்சிருந்தேன். அப்புறம் நம்ம சின்னையன வரச்சொல்லி அந்தக் கல்லய வாங்கிக்கிட்டு ஒரு பத்து கா தேங்கா கெடந்தா உறிச்சிக் கொண்டா, நா வேலைக்குப் போனா கூலியில கழிச்சிக்கட்டுமுன்னு வாங்கியாரச்

சொன்னேன். நீ போனவாட்டி வந்தப்பவே சொல்லியிருந்தா, வடசேரி சந்தையில புளியும் வாங்கியாந்து வச்சிருப்பேனே", ன்னு சொன்னேன். அதுக்கு அவன் "இல்லம்மா ஊருக்கு வந்துட்டு வெறுங்கையோட போனா, கிராமத்துவூட்டு மருமவன்னுதாம் பேரு. ஏங் கொழுந்தன் வூட்டுல ஒரு வெட்டுக்கு ஐநூறு கா தேங்கா வெட்டுவாங்க. ஆயிரம் கா தேங்கா வெட்டுவாங்கனு ஊரு சனம் சொல்லும். நா இங்க அஞ்சி காசு, பத்துகாசுக்கு தேங்காய் கீத்துவாங்கி கொழம்பு வக்கிறேன். அங்காடி வித்துவர பொண்டுவகிட்ட கல்ல ஒருபடி கொடுங்கடி, புள்ளையோருக்கு அவிச்சிக் கொடுப்பேன்னா, ஓம் மாமனாரு வூட்டுலேந்துதான் வாங்கியாந்து நாங்க டவுனுல காருவா, எட்டணா கூடவச்சி விக்கிறோம். நீ என்ன எங்கள கல்ல கேட்குறேங்குறாளுவடி. குஸ்டரோகி கையில வெண்ணெ இருந்தா எனக்கென்னடி ஆவப்போவுதுன்னு கேட்டுவுட்டேன் நல்லா'ன்னு, குத்தலா சாடபேசிக்கிட்டே கெடக்குறா. வெளியதெருவ போய்க்கிட்டு வார நமக்கு ஒருநேரம் இருந்தாப்புல ஒருநேரம் இருக்குமுல்ல. கைய நீட்டுறப்படி ஆயிடுது. அப்புறம் ரெண்டுமூணு நாளைக்கு மூஞ்சிய மொழம் அளவு நீட்டிக்கிட்டு சரியா சோறு கஞ்சி ஆக்காம இருக்கா.

சரி.. இவதான் இப்படின்னா புள்ளையோளும் நம்மகிட்ட பேசாம மூஞ்சிய தூக்கிவச்சிக்கிட்டுத் திரியுதுவோ. அதுவொ கிட்டேயும் எதுவும் சொல்லிக் கொடுத்துடுவாபோல. புள்ளையக்கிட்ட எத சொல்லணும், எத சொல்லக் கூடாதுன்னு ஒரு வெவஸ்தை வேணாம்..?

அதான் ஊருக்கு வந்துட்டுப் போறப்போ இந்த தேங்கா, கல்லயள கொண்டுபோயி தம்பியும் தம்பி பொண்டாட்டியும் கொடுத்து உட்டாவோன்னு சொன்னா அவ மூஞ்சியில ஒரு செண்டிப்பு வரும்." இப்படியெல்லாம் சொல்லிக்கிட்டு இருந்தவன், வாரயில பொண்டாட்டி, கொடுத்து வுட்டான்னு நீருருண்டைக் கொண்டாந்தான். ஆனா, அது எலையில கட்டியிருந்தது. வூட்டுலேந்து வந்தா ஏனத்துலதான இருக்கும். இது என்னடி யாயான்னு எனக்கு ரோசனை வந்துச்சு. இங்க தேங்கா, கல்ல வாங்கி கொண்டுபோயி தம்பி வூட்டுல தந்தாவோன்னு சொல்றமாரி, அங்கேருந்து கடையில நீருண்டை வாங்கியாந்து பொண்டாட்டி கொடுத்துவுட்டான்னு தர்றபோல இருக்கேன்னு கேட்டு அவன ஏன் சங்கடப்படுத்தவேணான்னு இருந்துட்டேன்."

இப்படி அம்மாவப்பத்தி பழைய யோசனையில் இருந்த அலமேலுக்கு ஏதோ பொகஞ்ச வாட வர்ற மாரி இருந்துச்சு. சின்னையன்ன கேட்டுச்சி.

"ஆமா.. ஆயி.. அடுப்புல ஏதாவது வச்சியான்னு"

நா ஒரு கூறுகெட்டவ. தலவலிக்குதுன்னு வரதண்ணி போட்டேன் குடிப்போமுன்னு. நீ வந்ததும் அத மறந்துட்டேன்"னு வூட்டுக்குள்ள ஓடுன அலமேலு, பதட்டத்துல புடிதுணி இல்லாம ஏனத்தப் புடிச்சி எடுக்க, சுளீர்னு கையச்சுட்டுச்சு. என்னப்பெத்த அம்மான்னு கத்திக்கிட்டு கைய ஒதற ஏனம் சொவுத்துல மோதி நங்குன்னு விழுந்துச்சி. கொடத்துத் தண்ணிய ஒரு கை சாச்சி, அடுப்பு அணல அணச்சிட்டு, மாத்துப்புடவ மாத்தி, தலைய அள்ளிக் கட்டிக்கிட்டு வெளிய வந்த அலமேலுவுக்கு மனசு அணையவே இல்ல.

"நீ எப்ப சின்னையா அம்மாவப் பாத்த..?"

"நேத்து பொழுதோடதான் பாத்துட்டுப் போனேன். சாப்ட்டியளா ஆச்சின்னே. வயிறு என்னமோ பண்ணணுதுன்னாவோ. வூட்டுல இருந்து பூண்டுமொளவு ரசம் கொண்டாரவான்னே. இல்லடா தண்ணிவுட்டு மோரபோட்டு கஞ்சி குடிக்கிறேன்னுச்சு. எதையாவது குடிச்சிட்டுப் படுங்க. வெறும் வவுறா படுத்துறாதிங்கன்னுட்டும் போனா.. கருக்கலோட இப்படி சேதிவருது."

ம்.. ரோசக்காரனுக்கு பொறந்து ரோசக்காரனுக்கு முந்தி விரிச்ச ரோசக்காரியத்தான் கடேசி வரைக்கும் இருப்பன்னா, சொன்னமாரியே இருந்துட்டுப் போயிட்டான்னு சொல்லிக்கிட்டே முந்தானையில மூக்க சிந்திக்கிட்டு எழுந்திருச்சிச்சி"

சரியாயி.. நானும் இன்னும் ரெண்டு எடம் துக்கம் சொல்ல வேண்டியிருக்குன்னு கிளம்பின சின்னையன ஏதோ யோசன வந்தாப்புல.. ம் சின்னையன்ன ஒனக்கு பஸ்சுக்கு, டீக்கு செலவுக்கு எல்லாம் காசு வச்சிருக்கியா..?

"ம்.. இருக்காயி.."

இரு.. இருன்னு உள்ள ஓடுன அலமேலு கடுகுடப்பாவுல பொருக்கியடிச்சி ஒரு எட்டுரூவாவக் கொண்டாந்து கொடுத்துச்சி.

"செல்லத்தொர பத்துரூவா கொடுத்துவுட்டுச்சி. நீ ஏன், வூட்டுலக் கெடந்த காச தொடச்சியெடுத்தார?"

"கூடக்கொறச்சி செலவுக்கு இருக்கட்டும் வச்சிக்க. ஆமா செலவெல்லாம் யாரு பெரியண்ணந்தா பாக்குதா?"

வாயிலப் போட்டிருந்த வெத்தல எச்ச அந்தாண்டபோயி துப்பிட்டு, வேட்டிய அவுத்துக் கட்டாம உள்ளாறக் கெடந்த அரணாக்கயிற மட்டும் வேட்டிக்கு மேல இழுத்து ஒரு மெரட்டு மெரட்டிக்கிட்டு தொண்டைய ஒரு செருமி செருமிட்டு, "ஒங்கிட்ட ஒன்னு சொல்ல வேண்டான்னு பாத்தன் ஆயி, ஆனா நீ வந்து

எப்படியும் தெரிஞ்சிக்கத்தான் போறேன்னு நெனச்சே.. நீ கேட்டேபுட்டே. நான் என்னத்த சொல்றது? அம்மாவுக்கு யாரு சாவுமொதலு போடுறதுன்னு ஒரே அமளிதுமளியா இருக்கு ஆயி.

“அய்யோ.. என்ன பெத்த அம்மா ஒம் பொழப்பு இப்படியா முடியுமு”ன்னு தலையில அடிச்சிக்கிட்டு திண்ணையை குந்திச்சி அலமேலு. “ஆயி நீ ஒன்னும் கவலப்படாத எல்லாத்துக்கும் அம்மா வழி பண்ணிட்டுத்தான் போயிருக்கு. நீ கௌம்பி ஊருக்குப் போ. நா பின்னாலயே வாரன்”னு சின்னையன் வாசல்ல வுழுந்துக் கெடந்த ஒரு மட்டதேங்காய எடுத்து திண்ணையில வீசிட்டு வேகமா போனிச்சி.

அதுவரைக்கும் காலநீட்டிப்போட்டு கத பேசிட்டு இருந்த பொண்டுவ எல்லாம் அலமேலு தலையக் கண்டதும், என்ன பெத்த அம்மா.. எங்கள எல்லாம் வுட்டுட்டுப் போயிட்டியேன்னு பெருங்குராலடுத்து அழுதுச்சிவோ. எல்லாரையும் கட்டிக்கிட்டு ஒரு பாட்டம் அழுதுதீர்த்த அலமேலு, பந்தல்ல ஏதோ வாக்குவாதம் நடக்குறதப் பாத்து வாசலுக்கு வந்திச்சி.

“தாயிக்குத் தலப்புள்ளத்தான் கொள்ளி வைக்கணும். அதனால அவரே கொள்ளி வைக்கட்டும். அவரே செலவு பண்ணட்டும்.”

“நல்லா இருக்கே கத. எங்களுக்குப் பாகம் ஏதும் வேண்டானுட்டுதானே டவுனுக்குப் போனோம்.”

“பெத்த தாய்க்கு சோறு போடவும் இல்ல. சாவுமொதலும் போடவும் மாட்டம்னா?”

“ஏ வூட்டுக்காரு கொள்ளியும் வைக்க மாட்டாரு. சாவு மொதலும் போடமாட்டாரு. நீங்க வாங்க வூட்டுக்கு.”

பெத்த தாய்க்கு சோறும் போடமாட்டானுவ. சாவுமொதலும் போட மாட்டானுவ. போட்டா போடட்டும் போடாட்டியும் போகட்டும். அனாதைப் பொணமுனு யாராச்சும் எடுத்துப் போடட்டுமுனு செல்லத்தொர பொண்டாட்டி சொல்லி வாய்மூடல, அலமேலு சாமி வந்தமாரி ஆயிட்டு.

“யாரடி சொல்ற அனாதைப் பொணமுண்ணு. ஏ ஆயிக்கு நா சாவுமொதலு போடுறண்டி’ன்னு வுட்டுச்சி சவுண்டு. தலவிரி கோலமா அது போட்ட சத்தத்துல கூட்டத்துல யாரு மூஞ்சிலேயும் ஈ ஆடல.

காலையிலேந்து நடக்குற கூத்தயெல்லாம் பாத்துக்கிட்டுத்தான் இருக்கேன்னு பட்டாமணியாரு பேச ஆரம்பிச்சதும், அவரு என்ன சொல்ல வாராருன்னு அலமேலு மொதக்கண்டு யாருக்கும் எதுவும் புரியாம ஒருத்தரு மூஞ்சிய ஒருத்தரு பாத்தாவொ.

என்னைக்கு அருமகண்ணு அக்கா இந்த மாமரத்துக் கொல்லையில கொட்டாயி போட்டு கஞ்சிகுடிக்க ஆரம்பிச்சதோ அன்னையிலேந்து ஒருநாள் தவறாம நடவுநாத்துக்குப் போயி, பால் கறந்து வித்துக் கெடைக்குறத சாப்பிட்டுட்டு, செலவுபோக அஞ்சி பத்துன்னு கொண்டாந்து கொடுத்து வைக்கும். நானும் ஒரு நோட்டுல அது கொடுக்குற காச தனியா எழுதி வைப்பேன். ஒரு தொக சேர்ந்தவுடனையே கூப்புட்டுக் கொடுத்தா, இல்லே இத நான் வாங்கிக்க கொடுக்கலன்னுச்சி. ஒன்னும் புரியா முழிச்ச எங்கிட்ட,

நான் யாருக்கும் தொல்லதராம வாழ்ந்துட்டேன். நா செத்துக்கெட்டுப் போனா ஏஞ் சாவுமொதலுக்கு இது இருக்கும். இன்னொரு வார்த்தையும் சொன்னிச்சி. இது ஊருசனம் யாருக்குந் தெரிய வேணாம். ஏ மொவனுவ செஞ்சதாகவே இருக்கட்டுமுன்னிச்சி. அப்பேர்பட்ட மனுசிடா ஒங்க அம்மா. எல்லோரும் கவுருவமா வாழத்தான் கஷ்டப்படுவாங்க. ஆனா அருமகன்னு அக்கா கவுருவமா சாவ ஒவ்வொரு நாளும் கஷ்டப்பட்டு காசு சேத்துச்சி.

இதகேட்ட அத்தனையும் ஊருசனம் கண்கலங்கி நின்னுச்சி. நா அப்பவே சொன்னேனுல்ல என்பது போல் அலமேலுவை பார்த்துக் கண்ணத் தொடச்சிக்கிட்டார் சின்னையன்.

ம்.. மானம் இருட்டிக்கிட்டு வருது. சட்டுமுட்டுன்னு ஒரு கைப்பாட கட்டுங்கன்னார் பட்டாமணியார். அதெல்லாம் முடியாது. ஆச்சிய பல்லாக்குக் கட்டி ஜெகஜோதியா கொண்டு போவோன்னாரு சின்னையன்.

“நேரமாவது மழை வந்துருமுடா சின்னயா..”

“மழை வரட்டும் நா சாவுறன்னைக்கு மழை பெய்யுண்டா சின்னையான்னு ஆச்சி சொல்லிக்கிட்டு இருந்துச்சி.”

ரோசக்காரனுக்குப் பொறந்து, ரோசக்காரனுக்கு முந்திவிரிச்சி, ரோசக்காரியாவே அருமகன்னு அக்கா போவுதுன்னு ஒரு கெழவி சொன்னிச்சி. அம்மா அடிக்கடி சொல்ற வார்த்தைய ஊருசனத்து வாயில இருந்து கேட்கயில அலமேலுவுக்கு மறுபடியும் அழுகையும் ஆத்திரமுமா வந்திருச்சி.

பிரேதம் தெரு மொணங்குபோயி திரும்பையில கொட்டுதே மழை. மானம் இடிஞ்சி வுழுந்தாப்புல சோ..ன்னு ஊத்துது. கண்ணு தண்ணிக்கும் மழத் தண்ணிக்கும் எடையில அசைஞ்சி அசைஞ்சி போற அம்மாவின் பூப்பல்லக்க பாத்துக்கிட்டு நின்னுச்சி அலமேலு. ●

# ‘அம்பி’
# மறைந்தும் மறையாத நீர்ச்சுவடுகள்

சு.இராமசுப்பிரமணியன்

***ஏணி, தோணி, அண்ணாவி, நார்த்தங்காய்:***

இப்படி ஒரு சொலவடை எங்கள் ஊர்ப்பேச்சுவழக்கில் உண்டு. ஏணியானது பலரையும் பள்ளத்திலிருந்து மேட்டிற்கு ஏற்றிவிடும். அப்படி ஏறுபவர்கள் பல உயரங்களையும் தொட்டுவிடுவர். ஆனாலும் அந்த ஏணி அதே இடத்தில்தான் நிற்கும்.

தோணி ஆற்றைக்கடக்க உதவுவது. இக்கரையிலிருந்து, அக்கரைக்கு ஆட்களைக் கடத்தும். அக்கரைக்குச் செல்பவர்கள் பல தொலைதூரங்களுக்கும் சென்றுவிடும்போதிலும் அந்தத்தோணி அதே இடத்தில்தான் மிதந்துகொண்டிருக்கும்.

அண்ணாவி என்னும் சொல் கல்வி கற்பிக்கும் ஆசிரியரைக் குறிப்பது. பள்ளி ஆசிரியர்களை மட்டுமல்லாது, சிலம்பம், ஓவியம், சிற்பம் , இசை போன்று பலவிதமான கலைகளையும், பல்வேறு கைத்தொழில்களையும் கற்றுத்தரும் ஆசான்களையும் அண்ணாவி என்றே அழைப்பர். அந்த அண்ணாவியிடம் பாடம் கற்பவர்கள் பல உயர்ந்த நிலைகளுக்குச் சென்றுவிடுவர். ஆனாலும் அந்த அண்ணாவி அங்கு, அதே எளியநிலையில்தான் இருப்பார்.

நார்த்தங்காயை ஊறுகாயாக பயன்படுத்துவதுண்டு என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். வேதியியலில் ‘வினையூக்கி’ **(catalyst)** என்று உண்டு. வேதியியல் வினையில் பங்குகொள்ளாமல், அதேவேளையில் அந்த வினை விரைந்து நிகழ்வதற்கு எந்த வேதிப்பொருள் துணைசெய்கிறதோ, அது ‘வினையூக்கி’ என்று சொல்லப்படும். நார்த்தங்காயும் அப்படி ஒரு உணவு வினையுக்கியே. மற்ற உணவுகள் செரிப்பதற்கு துணைசெய்யும் நார்த்தங்காய் , செரிக்காது.





இந்த நான்கில் ஆழமான ஆற்றைக் கடப்பதற்கு பயன்பட்ட தோணிபற்றிய நினைவுகளை, மூளைமடிப்புகளில் இருந்துத் தோண்டிஎடுத்து வாசகர்களுக்கு விளம்புவதே இக்கட்டுரையின் நோக்கம். ஆற்றைக் கடப்பதற்குத்தோணி, பரிசல் போன்றவை பயன்பட்டிருக்கின்றன. தண்ணீரின் ஆழத்தைப்பொறுத்து, கழையைக்கொண்டோ, துடுப்பைக்கொண்டோ தோணியை இயக்கலாம்.

தோணியில் இரண்டு வகை உண்டு. ஒன்று ஒற்றைத்தோணி. அதனை துடுப்புப்போட்டு தண்ணீரில் செலுத்தலாம். இன்னொன்று இரட்டைத்தோணி. இரண்டு ஒற்றைத் தோணிகளை இறுக்கமாக பிணைத்துக் கட்டிவிட்டால், அது இரட்டைத்தோணி. ஒற்றைத்தோணியை செலுத்துவதில் ஆபத்து உண்டு. அனுபவம் இல்லாதவர்கள் துடுப்புப்போட்டால் கவிழ்ந்துவிடும் வாய்ப்பும் உண்டு. அப்படிக்கவிழ்ந்தால் நீச்சல் தெரிந்தவர்களையும் தோணி அமுக்கி உயிரிழக்க செய்துவிடும். அனுபவம் உள்ளவர்கள் பக்கவாட்டில் நீந்தி, மேலெழுந்து தப்பித்துவிடுவார்கள். இதற்கு மாறாக இரட்டைத் தோணி பாதுகாப்பானது. கூடுதலாக பாரம் ஏற்றலாம்.

“ஆள் எளச்சாப்புல இருந்தா, தோணி மெதந்தாப்புல போகும்” என்று ஒரு சொலவடை உண்டு. ஒருவன் அப்பாவியாக இருந்தால், மற்றவர்கள் அவனை மேலாதிக்கம் செய்வார்கள் என்பது உட்பொருள். தோணியில் பாரம் மிகவும் குறைந்திருந்தாலும் ஆபத்து நிகழ வாய்ப்புண்டு. ஆற்றுத்தண்ணீர் தோணிக்குள் வரும் அளவுக்கு அதிகமாக பாரம் ஏற்றினாலும் ஆபத்து உண்டு.

**இரட்டைத்தோணியும், மக்கள் வாழ்வாதாரமும்:**

எங்கள் ஊரான சிவந்திபுரம், (பாபனாசம் , நெல்லை மாவட்டம்) தலையணைக்கால்வாய் பாசனப்பகுதியில் அமைந்திருக்கும் ஊர். ஊருக்குத் தெற்கில் பாபனாசம் தலைணை யிலிருந்து பிரியும் வடக்குக் கோடைமேல் அழகியன் கால்வாய் ஓடுகிறது. அதற்குத் தெற்கில் நெல்வயல்கள். இவை திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமாக இருந்தன. விளைந்தாலும், கரிந்தாலும் பாட்டம் அளக்கவேண்டும்.

வயற்காட்டிற்குத் தெற்கில் தாமிரபரணி ஆறு மேற்கிலிருந்து கிழக்காக ஓடுகிறது. ஆற்றைக்கடந்தால் மீண்டும் நெல்வயல்கள். இவை பட்டா நிலங்கள். அவற்றிற்குத் தெற்கில் பாபனாசம் தலையணையிலிருந்து பிரியும் தெற்குக் கோடைமேல் அழகியன் கால்வாய் ஓடுகிறது. வாய்க்காலைக் கடந்தால் பொதிகை மலையின் அடிவாரம் வந்துவிடும்.

ஊருக்கு மேற்கில் மூன்று கி.மீ. தொலைவில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் பாபனாசம் மில் ( ஹார்விமில், மதுரா கோட்ஸ்) என்னும் பஞ் சாலைஅமைந்திருந்தது. அந்தப்பஞ்சாலைக்குச் செல்வதற்காக ஓர் இரும்புப்பாலம் நூறு ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்டிருந்தது. ஆற்றைக்கடந்து, சாலைவழியாக தென்கரைக்குச் செல்லவேண்டுமானால் இந்தப் பாலத்தைத்தான் பயன்படுத்தவேண்டும். அதனைத் தவிர்ப்பதற்காக, ஊரின் தெற்கில் தாமிரபரணி ஆற்றைக் கடப்பதற்கு தோணியைப் பயன்படுத்தினர்.

நரியணை என்னும் தடுப்பணை கொஞ்சம் கிழக்கில் இருப்பதால் இந்தப்பகுதியில் ஆற்றின் ஆழம் மிக அதிகம். களைபோட்டுத் தோணியைத் தள்ளமுடியாது. ஆற்றில் நீரின் இழுப்பும் அதிகம். அதனால் துடுப்புப் போடுவதும் முடியாததாக இருந்தது. இதற்கு ஒரு மாற்றுவழி கண்டுபிடித்தார்கள். ஆற்றின் தென்கரையில் ஒரு வில்வ மரம் நின்றது. அதன் அடிமரத்தையும், வடக்குக்கரையில் ஒரு பனைமரத்தின் அடிமரத்தையும் வலுவான வடத்தால் இணைத்துக் கட்டியிருப்பார்கள். இரட்டைத்தோணியில் நின்றுகொண்டு, அந்தக் கயிற்றைக் கொஞ்சம்கொஞ்சமாக இழுத்தால் தோணி முன்னோக்கி நகரும். இதற்கும் அனுபவம் வேண்டும் இல்லையென்றால் ஆளைத்தூக்கி ஆற்றில் வீசிவிடும். இப்படித்தான் தாமிரபரணி ஆற்றைக்கடந்து தென்கரைக்குச் சென்றார்கள்.

தென்கரைக்குச் செல்லவேண்டிய உழவர்கள், நடுகைக்கு ஆட்கள், களைபறிக்கவும், அறுவடைக்கும் ஆட்கள் என்று அனைவரும் தோணியைப் பயன்படுத்தித்தான் கடந்துசெல்லவேண்டும். அப்போதெல்லாம் இயற்கையான சாணி உரம்தான். அந்த உரம் தென்கரையில் இருக்கும் வயல்களுக்குத் தோணிவழியாகவே கடத்தப்படும். உழவர்களும், உழுகருவிகளும் தோணியில் கடத்தப்படும். உழவுமாடுகள் நீந்தி ஆற்றைக் கடந்துவிடும்.




தோணி அக்கரையில் கிடக்கும்போது, மாடுகளை மட்டும் இறக்கிவிடமுடியாது. காரணம் அவை தென்கரையில் உள்ள நெல்வயல்களில் மேய்ந்துவிடும். அதனால், ஒரு காளைமாட்டின் அடிவாலைக் கெட்டியாக பிடித்துக்கொண்டு, தலையை தண்ணீருக்குமேல் உயர்த்திக்கொண்டால், நாம் நீச்சல் அடித்து, களைத்துப்போகாமல் , மாடுகளுடனேயே அக்கரை சென்று சேர்ந்துவிடலாம்.

அறுவடையின்போது நெல்மூட்டைகளும், வைக்கோல்கட்டுகளும் தென்கரையிலிருந்து வடகரைக்கு இரட்டைத்தோணி வழியாகவே கடத்தப்படவேண்டும். நெல்லும், வைக்கோலும் இந்தக்கரைக்கு வந்துசேரும் வரையிலும் விவசாயின் உயிர் ஊசலாடும்.

நடுகை, அறுவடைக்காலங்கள் தவிர்த்து ஆண்டு முழுவதும், தென்கரையிலிருந்து மாட்டுக்குப்புல், ஆட்டுக்குத்தழை தென்கரை யிலிருந்து வடகரைக்குக்கடத்தப்படும். அப்போதெல்லாம் மண்பானை சமையலும், விறகு அடுப்பும்தானே. பொதிகை மலைச்சாரலில் உள்ள மரங்களை உடைத்து விறகுக்கட்டைகளை அடுக்கிக் கட்டுகளாக்கி, தலைச்சுமையாக ஆண்கள் கொண்டுவருவார்கள். பொதிகை மலையில் 'உறிஞ்சி' என்று ஓர் விறகு அப்போது இருந்தது. அதனைப் பெண்கள் பிடுங்கி எடுத்து, கட்டுகளாக்கித் தலைச்சுமையாகக் கொண்டுவருவார்கள். ஆண்கள் கொண்டுவரும் 'சிறா' விறகும், பெண்கள் கொண்டுவரும் 'உறிஞ்சி' விறகும் தினமும் தோணிவழியாகவே வடகரைக்குக் கடத்தப்படும்.

பாபனாசம் பஞ்சாலையில் வேலைபார்த்தவர்கள் ஓரளவு வசதியாக வாழ்ந்தார்கள். அடுத்த நிலையில் விவசாயம் இருந்தது. மூன்றாவதாக விறகுவெட்டிப் பிழைப்பது என்னும் கடினவாழ்க்கை இருந்தது. இப்படி விவசாயத்திற்கும், அதனோடு தொடர்புடைய தொழில்களுக்கும், ஆடுமாடு வளர்ப்பவர்கள் புல்லும், தழையும் கொண்டுவருவதற்கும், விறகுக்கட்டுகள் கடத்துவதற்கும் அந்த இரட்டைத்தோணி பயன்பட்டது. ஒருவகையில் அன்றைய மக்களின் வாழ்வாதாரம் அந்த இரட்டைத் தோணியைச் சார்ந்திருந்தது.

எங்கள் ஊரில் இரண்டு தோணித்துறைகள் இருந்தன. ஒன்று பூசத்துறை. மற்றது பொட்டல்குளத்துத் துறை. இரண்டாவதில்தான் ஆற்றின் ஆழம் அதிகம். தோணியைப் பராமரிப்பதற்கு ஒருவர் இருந்தார். அவர் அந்தத் தோணிக்கரையிலேயே கூடாரம் அமைத்துக் குடும்பத்துடன் தங்கியிருந்தார். விவசாயிகள் அறுவடைக் காலத்தில், அவரவர் நிலத்தின் அளவிற்கேற்ப நெல் கொடுப்பார்கள். விறகுக்கட்டுகளைக் கொண்டுவருபவர்கள் காசு கொடுப்பார்கள்.

நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது, எங்கள் மாமாவுக்குத் தென்கரையில் கொஞ்சம் வயல் இருந்ததால் ஆண்டுமுழுவதும் தோணியில் பயணிக்கவேண்டிய அவசியம் இருந்தது. பள்ளி இறுதி வகுப்புப் படிக்கும்போது, இறுதித் தேர்விற்காக விடப்பட்ட படிப்பதற்கான விடுமுறையில் கூட ஒரு பித்தளைத் தூக்குச்சட்டியில் பழைய சோற்றை எடுத்துக்கொண்டு, தென்கரையில் இருந்த உளுந்து விதைக்கப்பட்ட வயலுக்குக் காவலுக்குச் சென்றிருக்கிறேன். ஆடு, மாடு, குரங்குகளை விரட்டிக்கொண்டு, எனது பள்ளி இறுதித் தேர்விற்கும் படித்திருக்கிறேன். அது வரமா அல்லது சாபமா என்று இன்றுவரையிலும் எனக்குத் தெரியவில்லை.

**சங்க இலக்கியங்களில் தோணி:**

ஆற்றைக் கடப்பதற்கும், கடலில் மீன்பிடிப்பதற்கும் தோணிகள் சங்ககாலத்திலேயே பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

**தோணி :**

“கடல்பாடு அவிந்து தோணி நீங்கி”

*(அகநானூறு, பாடல் 50, வரி 1)*

அம்பி:

சங்க இலக்கியங்களில் , தோணி ‘அம்பி’ என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.

“‘வடிக்கதிர் திரித்த வன்ஞாண் பெருவலை
இடிக்குரல் புணரிப் பௌவத்து இடுமார்
நிறையப் பெய்த அம்பி காழோர்
சிறையருங் களிற்றின் பரதவர் ஒய்யுஞ்
சிறுவீ ஞாழல் பெருங்கடற் சேர்ப்பனை..”

*(நற்றிணை 74)*






பரதவர், மீன்பிடிக்கும் பொருட்டு திருத்தமாக செய்யப்பட்ட பெரிய வலையை, இடிபோல் முழங்கும் கடலில் வீசுவதற்காக, தரையில் யானையைச் செலுத்துவதுபோல் தோணியைக் கடலில் செலுத்தினர் என்று பொருளாகிறது. இப்பாடலில் ‘அம்பி’ என்பதற்கு தோணி என்பது பொருளாகும். .

“பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை
துறைபடி அம்பி அகம்அணை ஈனும்
தண்ணந் துறைவன் நல்கின்
ஒண்ணுதல் அரிவை பாலாரும்மே “

*(ஐங்குறுநூறு 168)*

தலைவியை மாற்றார் பெண்கேட்டு வருகின்றனர். அதனால் கவலையுற்ற தலைவி ஊண், உறக்கம் இன்றி தவிக்கிறாள். காரணம்கேட்ட செவிலித்தாய்க்குத் தோழி தலைவியின் காதலை வெளிப்படுத்துகிறாள். காதலனுடன் மணம்செய்வித்தால் தலைவி பால் அருந்துவாள் என்றும் சொல்கிறாள்.

பெருங்கடலின் கரையில் தண்ணீர் சொட்டும் ஈரம்கொண்ட தோணியில் சிறிய காக்கை முட்டையிட்டு, குஞ்சுபொரிக்கும். அதுபோலவே தலைவனும் தலைவியைக் கண்போல் காத்துக் குடும்பம் நடத்துவான் என்று தலைவனைப்பற்றிக் கூறி, தலைவியின் திருமணத்திற்குப் பரிந்துரைசெய்கிறாள்.

*‘மரம்’ :*

“ இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித்து இழிதரும் போக்கு அருங்

கங்கைப்

பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒருமரப் பாணியில் தூங்கி யாங்கு“

(பெரும்பாணாற்றுப்படை , வரிகள் 429-33)

மன்னன் தொண்டைமான் இளந்திரையன் தன்னை நாடிவருபவர்களுக்குப் பாதுகாவலாக இருப்பான். தன்னை எதிர்ப்போரை அழிக்கும் ஆற்றல்பெற்றவன். அதனால் பல மன்னர்கள் அவனது நட்புவேண்டி வந்து அவன் முற்றத்தில் பரிசில் பொருட்களுடன் காத்திருப்பர். இதற்கு ஓர் உவமையைக் கூறுகிறார் புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

தேவர்கள் வாழும் உயரமான இமைய மலையிலிருந்து மிகுந்த அலைகளோடும், ஒளியோடும் பாய்ந்துவரும் கங்கை ஆறு தன்னுடன் பொன்னையும் இழுத்துவருகிறது. அந்தக் கங்கை ஆற்றைக் கடப்பதற்குப் பலரும் அஞ்சி ஓடுவர். என்றாலும், கங்கையைக் கடக்க ஒரேஒரு தோணி உண்டு. அத்தோணியின் துணைகொண்டு கங்கையைக் கடக்கலாம். அத்தோணியோ அக்கரையில் உள்ளது. அத்தோணியின் வருகைக்காக, கங்கை ஆற்றைக் கடக்க விரும்புவோர் இக்கரையில் காத்திருப்பதுபோல , பிறமன்னர்கள், மன்னன் தொண்டைமான் இளந்திரையனைச் சந்திக்கக் காத்திருக்கின்றனர்.

இப்பாடல் வரிகளில் வரும் ‘ஒருமரம்’ என்னும் சொல்லில் ‘மரம்’ தோணியைக் குறிக்கும் சொல்லாகும். மரம் ஆற்றுநீரில் மிதக்கும் என்பதால் தோணிகள் மரப்பலகைகளைச் சேர்த்தே கட்டப்படுகின்றன. கடலில், அருகாமையில் மீன்பிடிப்பதற்குப் பரதவர் ‘கட்டுமரங்களை’ப் பயன்படுத்துவார்கள். கட்டுமரம் என்பது, உயரம் குறைவான தோணிதான். இங்கும் மரம் என்பது தோணியையே குறிக்கிறது. கட்டுமரம் என்பது பலமரங்களைச் சேர்த்துக்கட்டிய தோணி என்று பொருள்கொள்ளலாம்.

மேலும் ஒரு செய்தியாக, ‘ஒருமரப் பாணியில் தூங்கி யாங்கு’ என்னும் வரியில் ‘தூங்கி’ என்னும் சொல்லுக்கு உறக்கம் என்று பொருள்கொள்ளல் கூடாது. மாறாக தங்கி, காத்திருந்து என்று பொருள்கொள்ளல்வேண்டும். சங்க இலக்கியங்களில் எங்குமே ‘தூங்கி’ என்னும் சொல் ‘உறக்கம்’ என்னும் பொருளில் பயன்படுத்தப்படவில்லை.

**புணை:**

ஆறுகளில் மிதந்துசெல்வதற்குப் பயன்படும் தட்டையான ‘தெப்பம்’, புணை ஆகும்.

‘குன்றுதலை மணந்த மலிபிணித் தியாத்தமண்
பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்
மாண்ட அன்றே யாண்டுகள் ; துணையே
வைத்தது அன்றே வெறுக்கை ; வித்தும்
அறவினை அன்றே விழுத்துணை ; அத்துணைப்



புணைகை விட்டோர்க்கு அரிதே, துணையழத்

தொக்குயர் வெளவும் காலை

இக்கரை நின்றுஇவர்ந்து உக்கரை கொளலே"

*(புறநானூறு, பாடல் 357, பிரமனார்)*

வெள்ளம்பாயும் ஆற்றைக்கடக்கப் பயன்படுவது 'புணை' . அப்புணையைக் கைவிட்டவர், அவர் விரும்பியவண்ணம் அக்கரை சேரமாட்டார். ஆற்றுநீரில் மூழ்கி , நீரோட்டத்தில் அடித்துச்செல்லப்படுவார்.

வாழ்க்கையும் ஆற்றுவெள்ளம் போன்றதுதான். பெருநில மன்னர்கள், குறுநில மன்னர்கள் என்று எவராயினும் வாழ்க்கை என்னும் பெருவெள்ளம் பாயும் ஆற்றைக்கடந்து மேலுலகம் செல்ல அவர்களது எந்த வளமும் துணைசெய்யப்போவதில்லை. வாழ்க்கை என்னும் ஆற்றைக் கடந்துசெல்வதற்குப் புணையாக பயன்படுவது அவர்களது வாழ்நாளில் அவர்கள் செய்த நல்வினையே ஆகும். நல்வினை ஆற்றாதவர்கள், ஆற்றில் புணையைக் கைவிட்டவர்களைப்போல மேலுலகம் சென்று சேரமாட்டார்கள்.

**நாவாய்:**

"தாம்வேண்டும் காதற் கணவர் எதிர்ப்படப்

பூமேம்பாடு உற்ற புனைசுரும் பின்சேம

மட நடைப் பாட்டியர்த் தப்பித் தடையிறந்து

தாம்வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேறும்

ஏமுறு நாவாய் வரவுஎதிர் கொள்வார்போல்


யாம்வேண்டும் வையைப் புனல்எதிர்கொள் கூட்டம்"

*(பரிபாடல், 10. வையை, வரிகள் 35-40)*

மலையில் மழைபெய்து வையை ஆற்றில் வெள்ளம் வருகிறது. ஆற்றுவெள்ளம் பார்க்கவும், புதுப்புனல் ஆடவும் சிறியவர் முதல் முதியவர் வரை மதுரைநகர் விழாக்கோலம்பூண்டு, மக்கள்வெள்ளம் வையைக் கரைநோக்கிச் செல்கிறது. ஓர் இளமங்கை, தனக்குப் பாதுகாப்பாக வந்த , பையபைய நடக்கும் (மடநடை) பாட்டியின் கண்ணிலிருந்துத் தப்பி, கண்காணிப்பு வளையத்திலிருந்து விடுபட்டு விரைந்து நடந்து வையைக் கரையை அடைந்து தனது காதலனுடன் கூடிக்களிப்பதற்காக அவனது வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறாள். எப்படி என்றால், துறைமுகப்பட்டினத்தின் கரையில் 'நாவாயின்' வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் வணிகர்போல்.

எனது சிறுவயது காலத்தில் வயதுக்குவந்த இளம்பெண்கள் ,இரவில் வெளியில் செல்லும்போது பாட்டிமார்கள் துணைக்குப் போகும் வழக்கம் இருந்தது. இந்தப் பழக்கம்கூட ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்ட ஒன்று என்று இப்பாடலின்வழியே அறியும்போது வியப்பாகவே உள்ளது.

பண்டைத்தமிழர் கடலில் மீன்பிடிக்க சிறிய தோணிகளையும், பிறநாடுகளுடன் கடல்வணிகம்செய்ய 'பெரிய நாவாய்களையும் பயன்படுத்தியிருக்கின்றனர்.





**தோணித்துறை இன்று:**

அன்றைய காலகட்டத்தில், ஒரு விவசாயி என்றால் அவர் வீட்டில் ஓர் உரக்குண்டும், ஒரு வைக்கோற்போரும் அடையாளமாக இருந்தன. பெருநில விவசாயி என்றால் நிறைய உழவுமாடுகளும், ஏர்க்கலப்பைகளும் இருந்தன. அப்போதெல்லாம் பெரிதும் இயற்கைவிவசாயமே. அதனால் உரம் கடத்துவதற்கும் தோணிதேவைப்பட்டது. ஆனால் உழவுக்கும், அறுவடைக்கும் இயந்திரங்கள் வந்துவிட்டபிறகு, களைக்கொல்லிகள் என்னும் வேதிப்பொருட்களும் வந்துவிட்டபிறகு விவசாயம் முற்றிலும் மாறிவிட்டது. ஆட்களும், மாடுகளும், உரங்களும் செல்லவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. விவசாயமுறைகளும் முற்றிலும் மாறி முழுவதும் இயந்திரமயமாகிவிட்ட சூழலில் தோணி அவசியம் இல்லாமல் ஆகிவிட்டது.

சமையலுக்கு எரிவாயு உருளைகள் வந்துவிட்டபிறகு விறகடுப்பும் இல்லை, மண்பானை சமையலும் இல்லை, பழையசோறும் இல்லை, சுண்டக்கறியும் இல்லை. எனவே தோணியும் இல்லை. திருவிழாத்திடல்போல் காட்சியளித்த தோணித்துறை இன்று ஆள் அரவம் இன்றி அச்சுறுத்தும் அமைதியில் அமிழ்ந்துகிடக்கிறது. கோடியர் ஊரைவிட்டு நீங்கியபிறகு அவ்வூர்ப்பொதுமன்றம் எப்படி வெறிச்சோடிபோயிருக்குமோ அப்படி இருக்கிறது தோணித்துறை. ஊருக்கு வந்திருந்தபொழுது, காலை நடைப்பயிற்சியில் தோணித்துறைக்கு வந்தேன். பழைய நிகழ்வுகள் ஞாபகங்களாக வரிசைகட்டிவந்துவிட்டன. ●

குறுங்கதை

# காசி ஆனந்தன் கதைகள்



## மனிதன்

"உன்னை மிதித்து கொண்டே போகும் மனிதர்களுக்கு வழிகாட்டி நிற்கிறயே உனக்குச் சினமாக இல்லையா?" என்று தெருவைப் பார்த்துக் கேட்டது மின்கம்பம்.

"என்ன செய்ய முடியும் என்னால்?" என்றது தெரு.

மனிதனின் கைகள் என்னை உருவாக்கின. மனிதன் கால்கள் என்னை மிதிக்கின்றன"

தெரு சொன்னது 'இவன்தான் மனிதன்'.

•

## தெளிவு

நஞ்சு இல்லாத தண்ணீர்ப் பாம்பின் குட்டி தாயைப் பார்த்துக் கேட்டது:

"என்னை போல் தானே நாகப் பாம்பு இருக்கிறது. அதன் பக்கத்தில் போக வேண்டாம் என்று எச்சரிக்கிறாயே ஏன்?

தண்ணீர்ப் பாம்பு சொன்னது

"அது நச்சுப் பாம்பு உன்னைக் கொத்திப் போடும். அதுதான்.."

புரியும்படி அது சொன்னது;

உன்னைப் போல் இருக்கிறவன் எல்லாம் நீ அல்ல.

•

## கைம்மாறு

ஆலமரக் கிளையில் தொங்கிய விழுது நிலத்தின் கால் ஊன்றி ஆலமரத்தின் கிளையைத் தாங்கி நின்றது.

"பாரமான ஆலமரத்தின் கிளையைத் தாங்கி நிற்கிறாயே_இது உனக்குத் தேவையா?"என்று விழுதைப் பார்த்துக் கேட்டது ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த காகம்.

விழுது சொன்னது

"கிளை என்னைத் தாங்கியது. நான் கிளையைத் தாங்குகிறேன்".

•

## மண்

மண்ணுக்கு வந்த ஆமையைப் பார்த்துக் கடற்கரையில் இருந்த கொக்கு கேட்டது முட்டை இடுவதற்கும் குஞ்சு பொரிப்பதற்கும் மட்டும் எங்கள் மண்ணுக்கு வருகிறாய் என்று மீண்டும் கொடிய கடலுக்கு திரும்பி விடுகிறாய் இது ஏன்?

அமைதியாய் பதில் சொன்னது ஆமை: "என்னுடைய கடலிலும் கொடியது உன் மண் "

ஒற்றைச் சொல்லோடு முடித்துக் கொண்டது ஆமை .

•

## முட்டாள்தனம்

தூண்டில் புழுவை விரும்பித் தூண்டிலில் மாட்டிக் கொண்ட மீன் துடியாய் துடித்துத் அத்தூண்டிலோடு போனதை ஏனைய மீன்கள் பார்த்தன.

இரண்டாவது தடவை ஆற்று நீரில் புழுவோடு தூண்டில் விழுந்த போது ஏனைய மீன்கள் அனைத்தும் தூண்டிலை நோக்கி ஆசையோடு பாய்வதைக் கண்ட குளத்துத் தவளை மீன்களுக்காக இரங்கி நின்றது.

அது சொன்னது

"ஒரு தடவை ஏமாற்றப்படுவது முட்டாள்தனம் அல்ல. ஆனால். ..?"

தலையில் அடித்துக் கொண்டது தவளை.

சிறுகதை

# தேனீக்களின் நடனம்

நெய்வேலி பாரதிக்குமார்

அன்பின் வாசு

என்னை இப்பொழுது நீ தேட வேண்டாம். உன்னை விவாகரத்து செய்யும் எண்ணமும் எனக்கில்லை. அப்படி இருந்தால் என்னுடைய வழக்கறிஞரிடமிருந்துதான் உனக்கு கடிதம் வந்திருக்கும். நான் இப்பொழுது இருக்கும் இடத்தை வர்ணிப்பது எனக்கு உவப்பானதாக இருக்கிறது. இதற்கு மேல் இந்தக் கடிதத்தை வாசிப்பாயா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இந்த இடம் கொய்யா மரங்கள் அடர்ந்து கிடக்கின்றன. செம்மண் நிரம்பிய இந்த நிலம் ஒரு தாயின் மடியைப்போல பாதங்களில் படும்பொழுது இளஞ்சூட்டுடன் உடலெங்கும் பரவிப் பெருகுகிறது..

கொன்றை மலர்களுக்கு இணையாக அழகு கொய்யாப் பழங்கள் கைகளுக்கு எட்டும் மஞ்சள் நிலவைப் போல கிளைகளில் ஆடிக் கொண்டிருப்பதை நான் கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருக்கிறேன் வாசு. ஒரு அணிலாகப் பிறந்திருந்தால் அதோ அந்த கொய்யாப்பழத்தின் மீதேறி மெல்லச் சுவைத்துக்கொண்டு இருக்கலாம்.



இந்தப் பண்ணை வீட்டிற்கு நாங்கள் அடிக்கடி வருவோம். மாம்பழங்களின் பெரும்பான்மை வகைகள் இங்கே இருக்கும் ‘அனானா’ என்கிற அபூர்வ ரக மாம்பழங்கள் காய்க்கும் இரண்டே இரண்டு மரங்கள் கோவாவில் கன்சௌலியம் என்கிற கிராமத்தில்தான் இருக்கின்றன என்று கேள்விப்பட்டு அப்பா அங்கே ஆளனுப்பி. அதிலேர்ந்து ஒரு செடியைக் கொண்டுவந்து இங்கே நட்டார். இந்த வகை மாமரம் உலகத்துல வேறு எங்கேயும் கிடையாது அப்படின்னு இங்கே வருகிறவர்களை எல்லாம் அழைத்து வந்து பெருமையாகக் காண்பிப்பார். யோசித்துப்பார் வாசு இந்த இரண்டு இடங்களில் உள்ள மரங்களும் அழிந்துவிட்டால் அவ்வளவுதான் அந்த வகை மா இனமே உலகில் இல்லை என்றாகிவிடும். அப்பா உயிரோடு இல்லை. ஆனால் இன்று வரைக்கும் இங்கே உள்ள தோட்டக்காரர்கள் இதை வைரம் மாதிரி பத்திரமாகப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள், எனக்கு இந்த சொர்க்கம் நரகம் மேல் எல்லாம் பெரிதாக நம்பிக்கை எதுவும் இல்லை. ஆனால் பவிஷோத்திர புராணம்னு அப்பா அடிக்கடி சொல்வார் அது ஞாபகம் இருக்கு. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் 5 மாமரங்களையாவது நட்டால் அவன் நரகத்தை காணவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படாது அப்படிம்பார். அதுக்காகவாவது நான் சொர்க்கத்தையும் நரகத்தையும் நம்ப வேண்டியிருக்கிறது .

அக்பர் ஒரு மாம்பழப் பிரியராம். அவர் பீஹார்ல இருக்கற தர்பங்கா அப்படிங்கற இடத்துல ஒரு லட்சம் மாமரக்கன்றுகளை நட்டு அந்த இடத்துக்கு லக்ஷ்பாஹா அப்படின்னு பெயர் வைத்தார் என்று ஏதோ ஒரு புத்தகத்துல படித்தேன். நான் எம்.எஸ்சி பாட்டனி என்று சொன்னபொழுது நீ நமட்டுச் சிரிப்பு சிரித்தது நினைவில் இருக்கிறது வாசு. எங்க அப்பாவுக்கு இருக்கும் பணத்துக்கு என்னை டாக்டருக்கு படிக்க வைத்திருக்கலாம். ஆனால் நான் விருப்பப்பட்டுப் படித்தது தாவரவியல்.

அமெரிக்கர்கள்தான் உலகின் தலைச்சிறந்த வணிகர்கள். அவர்களின் குருதி முழுக்க வணிகம் நிறைந்தது. ஆனால் அவர்களால் வாழைப்பழம் என்கிற ஒரு எளிய கனி இல்லாமல் ஒரு நாள் நகராது. வாழைப்பழங்களின் தேவைக்காகவே பல நாடுகளைப் பிடித்தவர்கள் அவர்கள். வாழைப்பழத்துக்காகவே ஒரு இசைப்பாடல் அங்கு பாடப்படுவதுண்டு. ஃபிராங்க் சில்வர் என்னும் பாடகர் இர்விங் கோஹனுடன் சேர்ந்து பாடிய “Yes we have no bananas” என்கிற பாடல் மிகப்பிரசித்தம். இன்றைக்கும் கூட அமெரிக்காவில் வாழைப்பழங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டால் இந்தப் பாடல் அமெரிக்காவெங்கும் மிக அதிகமாக துயரத்துடன் பாடப்படுகிறது

வியாபார உலகில் இன்றைக்கு நீ கொடி கட்டிப்பறக்கிறாய் அந்த ஆச்சரியத்தில்தான் அப்பா உன்னை எனக்காகத் தேர்ந்தெடுத்தார். நீ மிக அன்பானவன். என் மீது அளப்பரிய காதல் உனக்கு உண்டு என்று எனக்கு நன்றாகத் தெரியும். உன் மீது வெறுப்பு வர ஒரு காரணம் கூட அகப்படவே இல்லை. உண்மையில் இன்றிரவு எனக்கு கண்ணீர் இரவாகத்தான் இருக்கும். என் கோபமெல்லாம் நீ என் மீது ஏன் இத்தனை அன்பாக இருந்தாய்? உன்னுடைய முகத்தைப்

பார்த்து என்னால் ஒரு எதிர் கருத்தைக் கூட சொல்ல முடியவில்லையே என்பதுதான். உன் காதல் நிறைந்த கண்களின் முன் என் வார்த்தைகள் அனைத்தும் வலுவிழந்து கரைந்து விடுகின்றன. ஆனாலும் உன் பிடிவாதமான கொள்கைகள் மீது எனக்கு கடும் விமர்சனங்கள் உண்டு

அன்பு கொண்ட மனதிற்கு பதிலாக இன்னும் அதிகமான அன்பைப் பரிசளிக்கலாம். ஆனால் உன் வியாபாரக் கணக்குகள் முற்றிலும் அறத்துக்கு எதிராக இருக்கின்றன. கூடலின் போது கிறங்கிக் கிடப்பது போல நான் என் கண்களை எப்பொழுதும் மூடிக்கொள்ள முடியாது வாசு. உன் இலட்சிய வேட்கையின் எல்லைகள், நகரும் மேகத்தின் நிழலைத் துரத்திச் செல்வது போல முடிவற்றதாகவே இருக்கின்றன.

நமக்குத் திருமணமாகி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன இன்னமும் நாம் கொஞ்சி விளையாட ஒரு மழலை இல்லை. வேடிக்கையான விஷயம், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து பானங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களின் சொந்தக்காரன் நீ.... ஒவ்வொரு வருடமும் விதவிதமான சுவைகளில், விதவிதமான டப்பாக்களில் புதிதுப் புதிதாக அறிமுகம் செய்துகொண்டே இருக்கிறாய். உன்னுடைய நிறுவன பானங்கள் பால் பவுடர்களுக்கான விளம்பரங்களில் அழகழகான குழந்தைகள் சிரித்துக்கொண்டும் தவழ்ந்துகொண்டும் கண்களை நிறைக்கிறார்கள். ஆனால் நாம் இருவரும் பூங்கரங்கள் தீண்டாத இரவுகளை மென்று தின்று கொண்டிருக்கிறோம்.

போட்டிக்கு வேறு நிறுவனங்கள் வராமலும், தயாரிக்கும் பானங்களை எவரும் கேள்வி கேட்டுவிடாமல் இருக்கவும், நாளும் புதிய புதிய சாணக்கியத்தனங்களை பயன்படுத்திக்கொண்டே இருக்கிறாய்.

ஆண்டுக்கு 120 கோடிக்கு மேல் லாபம் சம்பாதிக்கிறாய். ஆனாலும் இன்னமும் போதாது என்று எல்லா தீய உபாயங்களையும், வழிகளையும் எப்பொழுதும் யோசித்துக்கொண்டு இருக்கிறாய். புறவழிச்சாலை ஓரங்களில் இருபுறமும் இலவசமாக நிழல் தரும் மரங்களை ஆங்காங்கே நடப்போகிறேன் என்று நீ அறிவித்தபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் அதிலும் உன் வியாபார மூளை மிகத்தந்திரமாக வேறொன்றைத் திட்டமிட்டிருக்கிறது என்று தாமதமாக அறிந்தபோது என்னால் கோபப்படாமல் இருக்க முடியவில்லை.

தேனீக்களின் நடனம் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? வேலைக்காரத் தேனீக்கள் சிறு குழுவாக பூக்கள் இருக்கும் இடத்தில் தேன் தேடிச் செல்லும். தேன் இருக்கும் பூக்களைப் பார்த்துவிட்டால் அவ்வளவுதான் அந்தப் பூக்களைச் சுற்றி நடனமாடத் தொடங்கிவிடும். அதன் இறக்கைகள் படபடவென அடிக்கும் இசையும் நடனமும் அவற்றின் இயல்பு. அத்தனை அழகாக கலையுணர்வுடன் தங்கள் உணவு வேட்டையைச் செய்யும் ஆனால் யாராவது ஒரு மனிதனைக் கொட்டிவிட்டால் போதும் மனிதன் சில நிமிட வலிக்குப்பிறகு இயல்பாகிவிடுவான். ஆனால் தேனியின் கொடுக்கு கொட்டிய இடத்திலேயே தங்கிவிடும் அப்படி பிரியும்போது அந்தக் கொடுக்கில் இருக்கும் விஷப்பை உடைந்து கொட்டிய தேனியின் மீதே பரவி அந்தத் தேனீ செத்துப் போய்விடுமாம். வாசு எல்லா தீயச்செயல்களும் அப்படித்தான் பெரும்பாலும் எய்பவர் பக்கமே திரும்பிவிடுகின்றன. மனிதர்கள் தவறுகள் செய்யும்போது எதைப்பற்றியும் கவலைப்படாமல் களிப்பில் உக்கிரமாக நடனம் ஆடுகிறார்கள் ஆனால் அவர்களின் தீமைகள் அவர்களின் வாழ்வில் விஷப்பை போலத் தங்கி உடைந்து பரவி அவர்களின் வாழ்வை கொன்று தின்கின்றன.

நீ ஏன் உன்னி மரங்களையும், வெறும் அழகுக்காக மட்டுமே பூக்கும் பூச்செடிகளையும், அழகான இலைகளை மட்டுமே துளிர்க்கும் குரோட்டன்களையும் மிக அதிகமாக சாலை ஓரங்களிலும் பூங்காக்களிலும் நடத்துடிக்கிறாய் என்று புரிந்துவிட்டது. அவை பிற மரங்களை அருகில் வளர விடாது. அதிலும் பழங்கள் என்கிற ஒரு பதமே எதிர்கால சந்ததியருக்கு தெரிந்துவிடக் கூடாது. அவை மரங்களில் விளைகின்றவை என்கிற எண்ணமே தோன்றிவிடக் கூடாது என்பதில் மிகக் குரூரமாக இருக்கிறாய். லேபிள் ஒட்டியப் பழங்களும் பிளாஸ்டிக் கவர்களில் அடைபட்ட பழங்களும் மட்டும்தான் இனி அவர்களின் கண்களில் பட வேண்டும் என்று திட்டமிட்டு உன் காய்களை நகர்த்துகிறாய்.

ஊட்டச்சத்து வேண்டும் என்றால் அது நீ விற்கும் டப்பாக்களிலும், பாட்டில்களிலும் மட்டும்தான் கிடைக்கும் அவற்றை மிஞ்சிய ஊட்டச் சத்து இயற்கையின் கொடையான பழங்களாக இருந்துவிடக் கூடாது என்று மிக குயுக்தியாகத் திட்டமிட்டு சாலைகளில் நிழல் தரும் மரங்களே இல்லை என்று உனக்கு அனுசரணையான பத்திரிகைகளில் தொடர்ந்து உனது ஆட்கள் பிரச்சாரம் செய்துகொண்டே இருக்கிறார்கள். நீ

மிகச்சரியாக உன் கையில் நிழல் தரும் மரங்களை கருணைப் பொங்க சமூக அக்கறையுடன் எடுத்துக்கொண்டிருக்கிறாய்.

சாலையின் ஓரங்களில் கனி தரும் மரங்களை நடவே கூடாது என்று எந்த அறிவியலாவது, சட்டங்களாவது சொல்கின்றனவா என்ன? இல்லை கனி தரும் மரங்களை நட்டால் மழை பெய்யாது என்று வானியல் நிபுணர்களோ, தாவரவியல் அறிஞர்களோ சொன்னார்களா?

நிழல் தரும் ஒய்வுக் கூடங்களை அரசு கட்டட்டும். அல்லது சுங்க வரியை கொள்ளைக் கொள்ளையாக வசூல் செய்யும் வழிப்பறியர்கள் கட்டட்டும். உங்களைப் போன்ற பரோபகாரிகள் கனி தரும் மரங்களை நட்டால். இயற்கையின் சத்துணவாய் இருக்குமே.. ஆனால் வழியெங்கும் கனி தரும் மரங்கள் இருந்தால் லேபிள் ஒட்டப்பட்ட பழங்களை விற்கும் கடைகள் எப்படிக் கொழிக்கும்? உங்கள் ஊட்டச்சத்துதான் எப்படி கோடிகளைக் கொட்டும்?

வாசு உனக்கும் எனக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை.. நீயும் நானும் இன்னமும் உயிருக்கு உயிராய் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றோம் வணிகம் செய்வது பிழையில்லை. வணிகம் இல்லாமல் இந்த உலகம் ஜீவிக்க முடியாது. கைகளுக்கு எட்டாதவற்றையும் வியாபாரம் செய்பவர்கள்தான் விரலருகே சாத்தியமாக்குகிறார்கள். ஆனால் ஒன்றை விற்கவேண்டும் என்றால் இன்னொன்றை அழித்துவிட்டுத்தான் சாதிக்கமுடியும் என்றால் நாம் உண்ணும் உணவு எப்படி அறமாகும்.? நம் பேரக் குழந்தைகளுக்கு ஏ ஃபார் ஆப்பிள் என்பது போல பாடப்புத்தகங்களில் மட்டும்தான் இனி பழங்களைக் காண்பிக்க முடியுமா? இல்லாதப்பட்டவர்களுக்கு எட்டாக்கனி என்கிற சொல் இனி எழுதப்படாத சட்டமாகிவிடுமா?

பறவைகளின் சங்கீதம் இல்லாமல் சாலை இங்கு இறந்து கிடக்கிறது. கனிகள் தொங்கும் கண்கொள்ளா காட்சி எதுவும் இல்லாமல் வெற்றுச் சாலையைக் காணச்சகியாமல் ஜன்னல் சாத்திய வாகனங்கள் அதிவேகத்தில் பறக்கின்றன. உடலில் உயிர் என்று ஒன்று இருந்தால்தான் நிழலின் அருமையில் இளைப்பாறலாம்.

உன்னுடைய மேஜையின் இழுப்பறையில் டாக்டர் சதாசிவம் தந்த உன்னுடைய மெடிக்கல் ரிப்போர்ட் இருக்கிறது அதை நிதானமாகப் பார். எத்தனை கோடிக்கு வேண்டுமானாலும் வியாபாரம் செய் ஆனால் அதில் ஒரு உயிருக்கு கூட நகமளவு சேதாரம் இருக்கக் கூடாது. தேனீயின் நடனம் தேன் சேகரிக்கும் போது அத்தனை ஆன்ந்தம்தான் ஆனால் கொடுக்கை செலுத்தினால் விஷப்பை எப்பொழுது வேண்டுமானாலும் தெறிக்கலாம்.

நான் உன்னை விட்டுப் பிரிந்து செல்வது தற்காலிகமாகத்தான். நீ எப்பொழுது அழைத்தாலும் அப்படியே எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவரத் தயாராக இருக்கிறேன். அன்பு செழிக்க இந்தப் பிரிவு நமக்குள் தேவையாக இருக்கிறது. உணமையில் இந்தப் பிரிவு நமக்குள்ளான பிணக்கில் ஏற்பட்டதில்லை. அன்பு என்பது நீ என்னை உச்சி முகர்வதற்கும் நான் உன்னைக் கொண்டாடுவதற்கும் மட்டுமில்லை. அறம் மிக்க வாழ்வை நீ எனக்கு அளிப்பதற்கும் நான் உனக்கு தருவதற்கும் கூட

மெல்ல யோசி நீ மரக்கன்றுகளை தாராளமாக நடு ஆனால் அவை கனி தரும் மரங்களாக இருக்கட்டும் ஏதேனும் ஒரு வறிய வயிற்றின் பசியை அவை கொல்லட்டும். அவற்றின் விதைகள் இன்னும் பல வனங்களை உருவாக்கட்டும். நம் பிள்ளைகளாக பழமரங்கள் இருக்கும் எனில் அது எத்தனை ஆனந்தமானது. பூக்களாய்ச் சிரிக்கும்; இலைகளால், கையசைக்கும்; துளிர்களால் ஆசீர்வதிக்கும் ; கனிகளால் நம்மை உயிர்ப்பிக்கும். அவை தரும் நிழல்களில் ஒரு வனமும் விதைகளாக சிதறிக் கிடக்கும். பறவைகளின் இசையில் அவ்வனம் மெல்ல மெல்லத் துளிர்க்கும். யாரேனும் ஒருவர் நம் கண்ணெதிரே மனம் நெகிழ வயிறு நிரம்பிய நிம்மதியோடு வாழ்த்தலாம். இனி சரித்திரங்களில் சாலையோரம் நிழல் தரும் மரங்களை நட்டார் என்பதைவிட கனிதரும் மரங்களை நட்டார்கள் என்கிற வரிகள் பெருமிதத்துடன் பதியப்படலாம். ஒருவேளை உன் வியாபாரம்தான் உனக்கு முதன்மை என்றால் நான் இந்த மரங்களுடனே, கனி தரும் மரங்களுடனே எஞ்சிய நாட்களை வாழ்ந்து விடுகிறேன்.

காத்திருக்கிறேன் வாசு நாம் அந்த கனி தரும் மரங்களின் அருகே நின்று உன்னுடன் புகைப்படம் எடுக்கும் நாளை ஆவலுடன் எதிர் நோக்குகிறேன்

காதல் நிரம்பி வழியும்
உன் கனிமொழி

கடிதத்தை மூடி வைத்துவிட்டு பெருமூச்சு விட்ட வாசு இழுப்பறையைத் திறந்து டாக்டரின் மெடிக்கல் ரிப்போர்ட்டை எடுத்துப் படித்தான். அது மூன்றாவது முறையாக மூன்றாவது ஆய்வகத்தில் எடுக்கப்பட்டது. வாசுவுக்கு உயிரணுக்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருப்பதாக அது குற்றம் சாட்டியது. திறன்பேசியைக் கையில் எடுத்து கனிமொழியின் எண்களை ஒற்றினான் வாசு. ●

# பாரதி படைப்புகளில் பேசாப்பக்கத்தைப் பேசும் ஆவணப்படம்

ரவிசுப்பிரமணியன்

பாரதியின் பேரனிடம் பாரதி தனி நபர்கள் பற்றி எழுதிய பாடல் குறைவாயிற்றே. நான் பாரதியின் ஒரு அபூர்வமான கவிதையின் இடை யிலிருந்து "தமிழ் மணக்கும் நின் நாவு" என்ற ஒரு பாராவை எடுத்து, அதை ஒரு விருத்தப் பாடலாக சைவத் தமிழறிஞர். டி. என். ராமச்சந்திரன் குறித்த ஆவணப்படத்திற்காக மெட்டமைத்தேன். இந்த பாடல் பின்னணி பற்றி எனக்கு முழுவிபரம் கொஞ்சம் தெரிந்தால் சொல்ல முடியுமா என்று கேட்டேன். நீங்கள் மெட்டமைத்த பாட்டை அனுப்பி வையுங்களய்யா. நான் தேடி அனுப்புகிறேன் என்றார். நான் அவரிடம் சொன்னது இரவு 9 : 30க்கு. அவர் எனக்கு தேடி அனுப்பியது கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்தில், இரவு

11 : 25.க்கு.

நான் அதை மறுநாள் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் நாலே காலுக்கு இந்த கட்டுரையை எழுத அமர்ந்த போது, அவர் அவ்வளவு துரிதமாக தேடி எடுத்து ஒளியச்சு செய்து அனுப்பிய அந்த விபரங்களைப் படித்து அசந்து போனேன். அனுப்பியது மட்டுமல்ல நான் எல்லா பக்கங்களையும் தேடிப் படிக்கச் சிரமப்படுவேனென நினைத்து அவர் அனுப்பிய கட்செவி அஞ்சல் குரல் செய்தி இது.

"சார். இந்த புத்தகத்துல, பாரதியின் பாட்டுத்தலைவன் என்ற 7ம் அத்தியாயத்தை, பாருங்கள் சார். 83ம் பக்கம் அதுல நீங்க எனக்கு அனுப்பியிருந்த பாடல் பற்றிய மேலதிக விபரங்கள் இருக்கு"

இந்த காரியத்தை செய்த பாரதியின் எள்ளுப்பேரன் நிரஞ்சன் பாரதிதான் பாரதியின் ஆன்மீக பரிமாணங்களைச் சொல்லும் "சக்திதாசன் கடவுளைக் கண்ட கவிஞன்" என்ற ஆவணப்படத்திற்கான ஆய்வு, வசனம், வர்ணனை போன்றவற்றை எழுதியவர்.

பாரதியைப் பற்றி, அவர் கவிதைகளைப் பற்றி எவ்வளவு தெரிந்துகொண்டாலும், அய்யோ இதை படிக்காமல் விட்டுவிட்டோமே, இதை இப்படி புரிந்து தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோமே என்று நமக்குள் தோன்றும்படியாக அவரது கவிதைகளின் அர்த்த விஸ்தீரணங்களும், அவரது வாழ்வின் மேன்மைமிகு பக்கங்களும் விரிந்து



விரிந்து சென்றபடியே இருக்கின்றன. அப்படி சில பக்கங்களை தயாரிப்பாளர் சௌந்தர்யா சுகுமாரும், இயக்குநர் உஷா ராஜேஸ்வரியும் நமக்கு காட்சி மொழியில் தந்துள்ளனர்.

1882க்கும் 1921க்கும் இடைப்பட்ட இந்த 38 ஆண்டு கால வாழ்க்கையில், 228 கவிதைகள், 1259 கட்டுரைகள், 69 மொழிபெயர்ப்புகள், 55 சிறுகதைகள் போன்ற படைப்புகளைத் தந்து சில பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவும் இருந்தவர் பாரதி. கவிஞர், கதாசிரியர், தேசபக்தர், கார்ட்டூன் உருவாக கருத்துரு கொடுத்த காரியகர்த்தா, மொழிபெயர்ப்பாளர் என்று அவர் ஆளுமையின் அத்தியாயங்கள் நீண்டாலும்,

**"பக்தி உடையார் காரியத்தில்**
**பதறார்! மிகுந்த பொறுமையுடன்**
**வித்து முளைக்கும் தன்மையைப்போல்**
**மெல்லச் செய்து பயனடைவார்!**
**சக்தி தொழிலே அனைத்துமெனில்**
**சார்ந்த நமக்கு சஞ்சலமேன்?"**

என்று கவிதையிலும்

"எல்லாம் கடவுள் மயம் அன்றோ? எவ்வுயிரினும் விஷ்ணு தானே நிரம்பியிருக்கிறான், ஸர்வமிதம் ப்ரஹம்! பாம்பும் நாராயணன், நரியும் நாராயணன். பார்ப்பானும் கடவுளின் ரூபம், பறையனும் கடவுளின் ரூபம், இப்படியிருக்க ஒரு ஜந்துவை எக்காரணம் பற்றியும் தாழ்வாக நினைத்தால், அது அஞ்ஞானத்திற்கு லட்சணம். அவ்விதமான ஏற்றத்தாழ்வு பற்றிய நினைப்புகள் உடையோர், எக்காலத்தும் துக்கங்களிலிருந்து நிவர்த்தியடைய மாட்டார். வேற்றுமையுள்ள இடத்தில் பயமுண்டு, ஆபத்துண்டு, மரணமுண்டு, எல்லா வேற்றுமைகளும் நீங்கி நிற்பதே ஞானம். அதுவே முக்திக்கு வழி."

என்று பகவத் கீதைக்கான தனது உரையின் முன்னுரையிலும் இன்னும் தனது பலப்பல படைப்புகளிலும் மானுட நேயம் மிக்க சமூக உணர்வோடு ஆன்மீகத்தையும் எழுதிய பாரதியின் அந்த பகுதிகள் மட்டும் அதிகம் பேசப்படவே இல்லை என்ற குறையை இப்படம் நிவர்த்தி செய்கிறது.

அடிமைப்பட்டுகிடந்த இந்தியாவின் அவலத்தைக் கண்ட பாரதியின் மனதில் எப்படி சுதந்திர போராட்டச் சிந்தனை உருவெடுத்தது, அதே வேளை அவருக்குள் இயல்பாயிருந்த ஆன்மீக உணர்வை எந்தெந்த நிகழ்வுகளும், சம்பவங்களும் கிளர்ந்தெழச்செய்தன, அவரது அரசியல் ஆன்மீக வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்திய ஆளுமைகள் யார் யார், இன்றும் பாரதி ஏன் நமக்கு தேவைப்பட்டுக்கொண்டே இருக்கிறார் என்பன போன்ற சில விஷயங்களை இந்த ஆவணப்படம் பேசுகிறது.

உலகப்போரின் போது, அல்சாஸ் மலைமீது குண்டு மழை பொழிந்த இடத்திலிருந்து திரும்பிய சிப்பாய் ஆல்பர்ட்க்கு, பாலும் வெந்த மரவள்ளிக்கிழங்கும் தந்து உபசரிக்கிறார் பாரதி. 1918 ஜனவரியில் தன் நண்பன் போன் ஜான் இறந்ததையும், தான் விடாமல் ஜபித்துக்கொண்டிருந்ததையும், போரின் உக்கிர கணங்களில் பாரதி சொல்லித்தந்த, ஓம் சக்தி மந்திரத்தையே உச்சரித்தேன் என்பதையும் சொல்லி மரியா, மாரி, ஈசன் எல்லோரும் ஒன்றுதானே என்று கேட்கிறார் சிப்பாய். சொல்லும் பொருளும் நடிப்பும் பொதிந்த இந்த அழகான காட்சியோடுதான் படம் துவங்குகிறது.

ஒளிப்பதிவு, காட்சிகளின் கோணங்கள், ஒலித்துல்லியம், படத்தொகுப்பு, பின்னணி வசனம் மற்றும் குரல், ஓவியங்கள், அரிய வரலாற்றுச்செய்திகள், திகைக்கச்செய்யும் அபூர்வ புகைப்படங்கள், புதிய தகவல்கள், நிறுவும் சான்றுகளென ஒரு ஆவணப்படத்துக்கான பரிபூரண சாமுத்ரிகா லட்சணங்களோடு துலங்குகிறது ஆவணப்படம்.

காசி, கடையம், பாண்டிச்சேரி என பல ஊர்களுக்கும் அலைந்து திரிந்து மலை, குளம், வயல்வெளி, தென்னந்தோப்பு, கடல் போன்ற இயற்கைக் காட்சிகளையும் கருத்துக்கு வலு சேர்க்கும் வகையில் ஒளிப்பதிவாளர்கள் ஆனந்த் தியாகராஜனும் எஸ். வி. ரோஷனும் மிகக்குளுமையாக, திரைமொழியின் லிபியோடு பதிவு செய்துள்ளனர்.

மிகுந்த பிரயத்தனத்தோடு பல இடங்களுக்கு சென்று அவர்கள் படம் பிடித்த இடங்களும் மிக மிக முக்கியமானவை. இன்றைய எட்டயபுரம் ஜமீன் மாளிகையின் வெளிப்புறம், புதுச்சேரியில் பாரதி வாழ்ந்த இல்லம், அரவிந்தர் முதன் முதலாக ஒன்பது மாதம் தங்கியிருந்த பாரதியின் நண்பர் சங்கர செட்டியார் வீடு, இப்படி பல அரிய இடங்கள் படத்தில் பதிவாகியுள்ளன. படத்தில் உபயோகிக்கப்பட்ட டெஸ்க், பேனா, பாத்திரங்கள் போன்ற பொருள்களும் உடைகளும் அவ்வாறே சிரத்தையுடன் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பாரதியை அவமதிக்கும் நோக்கில் 'பாரதி சின்னப்பயல்' என ஈற்றடி தந்து அவரைப்பாட வைத்தவர் காந்திமதிநாதன் எனும் புலவர் என்பதை நாம் அறிவோம். ஆனால், அப்படி பொறாமைப்பட்ட அவரே, பிற்காலத்தில், "இளசை ஒருபா ஒரு பஃது" என்ற பிரபந்த வகையில் கடினமான வெண்பா யாப்பில், பாரதி தன் பதினாறாம் வயதில் முதல் முதலாக எழுதிய பக்திப் பாடலைப் படித்ததும், "பாலா கற்கண்டா பழம் பொருந்தும் இன்னமுதால் ஆகும் பாகா" என்று துவங்கும் பாடலால் பாராட்டி மகிழ்கிறார் என்பதை இப்படத்தின் வழியே நானறிந்தேன். அது போலவே பாரதியை மகாகவி என முதலில் அழைத்தவர் இலங்கை ராமகிருஷ்ணா இயக்கத்தில் இணைந்து கல்விப்பணி ஆற்றிய விபுலானந்தர் என்பதையும். அவரே 1927ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துகல்லூரியில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்ற தலைப்பில் பேருரை நிகழ்த்தியுள்ளார் என்பதையும் இந்து சாதனம் என்ற இலங்கை இதழ் பதிவு செய்த செய்தியும் எனக்குப் புதியது.

கல்கட்டா காங்கிரஸ் மாநாட்டில் தமிழக பிரதிநிதியாகச் செல்கிறார் பாரதி. அங்குதான் சகோதரி நிவேதிதாவைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு வாய்க்கிறது. 1867 இல் அயர்லாந்தில் பிறந்த மார்கரெட் எலிசபத் நோபிள், விவேகானந்தர் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு 1898இல் இந்தியாவுக்கு வருகிறார்.

அவருக்கு விவேகானந்தர் பிரம்மச்சர்ய தீட்ஷை வழங்கி, நிவேதிதாவெனப் பெயர் சூட்டுகிறார். அதன் பின் இந்தியாவிலேயே தங்கி கல்விப் பணியிலும் பொதுநலத் தொண்டிலும் சுதந்திர போராட்டத்திலும் தீவிரமாக கலந்துகொள்கிறார் நிவேதிதா. அவரோடான சந்திப்பு பாரதியின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துகிறது.

உன் கவித்திறமையை இந்த நாட்டுக்காக அர்ப்பணம் செய்ய வேண்டுமெனக் கூறிய நிவேதிதாவின் போதனைகள் பாரதிக்குச் சில வெளிச்சங்களைத் தருகிறது. வீதியில் வந்தே மாதரம் என முழங்கிவிட்டு வீட்டில் பெண்களை அடிமையாக நடத்துகிறோம். பெண் விடுதலையின்றி மண் விடுதலை இல்லை என்றெல்லாம் பாரதிக்குத் தோன்றுகிறது. அவரோடு நடந்த உரையாடல் பாரதிக்கு பெண் விடுதலை குறித்த ஒரு புதிய பரிமாணம் கிடைக்கிறது. இனி, சகோதரி நிவேதிதா என் குருதேவி என்று ஊர் திரும்பும் பாரதி, செல்லம்மாளிடம் பேசும் இந்த வசனங்கள் காட்சி ரூபத்தில் படத்தில் வருகின்றன.

**பாரதி :**

அப்பறம், இன்னொரு விஷயம் செல்லம்மா. என்னை மன்னிச்சிரு.

**செல்லம்மா :**

என்னண்ணா இது.பெரிய வார்த்தையெல்லாம் சொல்றேள். நீங்க என்ன தப்பு பண்ணேள். நான் உங்கள மன்னிக்கறத்துக்கு.

**பாரதி :**

நான் பல தடவை உன்னை கடுமையா பேசிருக்கேன். ஒண்ணு ரெண்டு தடவை உன்னை அடிக்கக் கூட செஞ்சிருக்கேன். ஆனா, அந்தப் பழைய பாரதி இப்ப செத்துவிட்டான் செல்லம்மா. இப்ப நான் புது பாரதியா வந்துருக்கேன். என்னை ஏத்துக்கோ செல்லம்மா.

இப்படி பெண் நிலை குறித்து பாரதியின் வாழ்விலும் "காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர். கடவுள் நிலை அவளாலே எய்தல் வேண்டும்" என்று அவர் படைப்புகளிலும் மாற்றங்கள் நிகழ்த்திய நிவேதிதாவுக்கு 1908இல் அவர் எழுதிய சுதேச கீதங்கள், 1909இல் எழுதிய ஜென்மபூமி, 1910இல் எழுதிய ஞானரதம் போன்ற நூல்களைச் சமர்ப்பணம் செய்கிறார் பாரதி. பாரதிக்குள் விவேகானந்தரை ஆன்மீக லட்சியமாய் முன்னிலைப்படுத்தியிருக்கிறார் நிவேதிதா. அந்த தடத்தின் வழியேதான், அவர்1906ம்ஆண்டு ஜூன் சக்கரவர்த்தினி இதழில் பரமஹம்சர் பற்றியும் 1915 இல் சித்தா Siddha and Superman போன்ற கட்டுரைகளையும் அவர் எழுதுகிறார். சாக்தம் என்கிற சக்தி வழிபாட்டுக்குள் வந்ததும் அவ்வழியேதானென்றும் உணர முடிகிறது. பாரதியின் ஆன்மீக பரிமாணம் ரூபம் கொள்ளும் விதமாக, நிவேதிதாவுடனான சந்திப்பை அந்த உரையாடல்களை அர்த்தப்பூர்வமாக க் காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர்.

இப்படத்தில் குறிப்பிட வேண்டிய இன்னொரு முக்கிய விஷயம். ஷாயாஜி ஷிண்டேவுக்கு பிறகு, கார்த்திக் கோபிநாத் தன் நடிப்பின் மூலம் பாரதியை நம் கண்முன் நிறுத்தியது. மிகையற்ற உணர்ச்சி வெளிப்பாடு உடல் மொழி இவற்றோடு, பாரதியின் கனவை, சோகத்தை, கையறு நிலையை, ரௌத்திரத்தை, பரவசத்தை அவர் கண்களால் வெளிப்படுத்திய விதம், சிலர் குரலில் த்வனிக்கும் நாடகத் தன்மையற்ற இயல்பான வசன உச்சரிப்பு போன்றவை குறிப்பிடப் படவேண்டியவை. எட்டயபுர சமஸ்தானத்தை விட்டு வெளியேறுகையில் காட்டும் விடுதலை உணர்வு, பாரதியின் ஒரு பித்து நிலையை நடனம் மூலம் வெளிப்படுத்தி கீழே விழும் காட்சிகள் போன்றவை அனுபவம் மிக்க ஒரு நடிகனே நிகழ்த்தும் விஷயங்கள். அதுபோலவே செல்லம்மாவாக நடித்துள்ள விஜ்னா தேர்ந்த சதுர் மரபில் வந்த நாட்டியமணியைப் போல உணர்வுகளுக்கேற்ப முகபாவங்களை ஷணத்தில் மிகையின்றி அனாயாசமாக வெளிப்படுத்தியிருந்தார். ஆங்கிலேயர்க்கு காட்டிக்கொடுக்க முயன்ற ஒருவர் பாரதி காலில் விழுந்து மன்னிப்பு கேட்க, பாரதி அதை மன்னிக்க, அவர் செல்லம்மாவை நோக்கியும் மன்னிப்பை கோருகையில் செல்லம்மாவான விஜ்னா வெளிப்படுத்தும் முகபாவம் அவ்வளவு இயல்பு. அவருக்கு இப்படி தன்னை நிரூபிக்க சில கணங்களே போதுமானதாக இருக்கின்றன.

பாரதிக்குள் ரௌத்திரமாய் கனன்ற தேசிய நெருப்பில் ஆன்மீக உணர்வேற்றி அதை சுடராக ஒளிரச்செய்து பரிமளிக்க வைத்தவர் அரவிந்தர். அவரே பாரதிக்கு யோகம் தியானம் போன்றவற்றை கற்றுத்தருகிறார். அதன் பின்தான் பாரதி பகவத்கீதைக்கு உரை எழுதுகிறார். ரிக் வேதத்தின் சில ஸூக்தங்கள், கேனோபநிஷத், ஈஷா வாஸ்ய உபநிஷத் போன்றவற்றை தமிழில் மொழி பெயர்க்கிறார்.

ஆவணப்படங்களில் இசையமைப்பு சரியாய் அமைவதென்பது ஒரு நல்லூழ். அது இந்த படத்திற்கு பாரதியின் கொள்ளுப்பேரன் ராஜ் குமார் பாரதியால் சித்தித்திருக்கிறது. படத்தின் ஒழுங்கை குலைக்காமல் அடக்கமாய் இருந்து,

படத்தை இசை ஏந்தி தருவது ஒரு நல் அம்சம். சிக்கில் குருசரண், அபிஷேக் ரகுராம், ராஜ்குமார் பாரதி, போன்றோர் பாடிய பாடல்கள் பின்பாதி படத்தை

விறுவிறுவென நகர்த்திச் செல்ல உதவுகின்றன.

***அன்பு கனிந்த கனிவே சக்தி, சாமி நீ, கடவுள் நீயே,***

***தத்துவமஸி, நீயே அஃதாம்.***

***பூமியிலே நீ கடவுள்,***

***இல்லையென புகல்வது மனத்துள்ளே புகுந்த மாயை.***

***சாமி நீ, அம் மாயயை தன்னை நீக்கி,***

***நீதான் கடவுள் என்று உணர்ந்துகொள்.***

***தீய எண்ணங்களே மாயை."***

அந்த மாயைக்கெல்லாம் மாற்று நல்ல எண்ணங்களை அதற்கு ஈடாக வளர்த்தலே என்கிறார் பாரதி.

எவ்வளவோ லௌகீக சிரமங்களை எதிர்கொண்ட பாரதியை எந்த சந்தர்ப்பத்திலும் சிந்தை தடுமாறாமல் காத்தது அவரது சக்தி உபாசனையே.

**"இடரினுந் தளரினும் எனதுறு நோய்**
**தொடரினும் உன்கழல் தொழு தெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே"**

என காந்தார பஞ்சமப் பண்ணில் ஓதுவார் பெருமக்கள் பாடும் ஞானசம்பந்தர் பதிகமே என் நினைவுக்கு வருகிறது. அப்படி வாய்த்த ஒரு மனநிலையால்தான் அவ்வளவுக்கும் பிறகும் பாரதியால், எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என பாட முடிந்திருக்கிறது.

பாரதி தேடியதும் கண்டதும் என்ற தலைப்பில் கரிச்சான் குஞ்சு வேதாந்த பரமாக பாரதியை பார்த்து எழுதிய நூலும்,

திருலோக சீதாராமின் கட்டுரைகளும், 'மந்திரச்சொல்' என்ற தலைப்பில் அவர் பாரதியை வேதாந்த நோக்கில் பார்த்து பேசிய உரைகளும், ந. சுப்புரெட்டியார் எழுதிய கண்ணன் பாட்டுத்திறன் என்ற நூலும் எனக்கு பாரதியின் ஆன்மீக பக்கங்களைச் சொன்னவை. அந்த வரிசையில் இப்போது இந்த ஆவணப்பட காட்சி பனுவலும் சேர்கிறது. ஆன்மீகத்தில் உடன்பாடு கொண்டவர்கள், கொள்ளாதவர்கள் இரு தரப்பினரும் பார்க்க வேண்டிய அரிதான பக்கங்கள் இவை. பராசக்தியின் அருள் பெற்ற பாரதி தன் அனுபவத்தை இப்படி சொல்கிறார். பேசுவதால் பயனில்லை, அனுபவத்தால் பேரின்பம் எய்துவதே ஞானம்

* கட்டுரையில் இடைவெளி விட்டு வைக்கப்பட்ட கடைசி முற்றுப்புள்ளி பேரின்ப தொடக்கமான மௌனத்துக்கான குறியீடு.

Link https://www.youtube.com/watch?v=icSRo0sXMZM

●

## கவிதை

மனிதர்களை
தொலைத்த இந்த வீடு
முகவாய் முழுவதும்
முளைத்திருக்கும்
கரடுமுரடான தாடியுடன் நிற்கிறது

மனம் பிறழ்ந்தவரின்
தோற்றத்தை ஒத்துத்
தனித்துக் கிடக்கிறது இங்கே..
தொலைந்தவர்களும் எங்கோ..?

வண்ணமும் வனப்பும்
தொலைத்த தோற்றமுமாக
ஐயோ பாவம்
ஐயோ பாவம் என்று
தனக்குத்தானே யாரும்
சொல்லிக் கொள்வதில்லை

தொப்புள்கொடி சுற்றிய சிசு
கர்ப்பத்திலேயே மடிந்து
கிடக்கிறது
ஆயுள் முடிந்தும்
கவனிக்கப்படாமல்

இந்த வீடும்
ஒரு நாள் அப்படி
தொலைந்து போகும்.



- குடந்தை அனிதா

# கவிஞர் குகை மா.புகழேந்தி கவிதைகள்

மழையைச் சுமக்கும்
மேகத்தின் கருவறைதான்
மீன்களையும் சுமக்கிறது

கூழாங்கற்களின் கன்னத்தில்
மீன்கள் இடும் முத்தங்களைத்தான்
ஓடிக்கொண்டே பாடுகின்றன
நீரோடைகள்

அநாதியாய் நிற்கும்
ஒற்றைத் துளியில்
மொத்த பூமியும் தெரிகிறது

ஐநூறுக்கும் ஆயிரத்திற்கும்
ஏலம் போடுகிறார்கள் மீன்களை
கூர்ந்து கேட்கும் கடலலைகள்
ஐயோ ஐயோ என்றடித்துக்
கொண்டு திரும்புகின்றன

நீருக்கு எண்ணற்ற பெயர்கள்
எந்தப் பெயரில் இருந்தாலும்
மாறாத ஒற்றைக் குணம் அதற்கு

குளத்தில் மூழ்கும் சிறுவன்
இலை நுனியில் இருந்தபடி
வேடிக்கை பார்க்கிறது
பனித்துளி

அதே பூமி
அதே நிலா
சிந்தனைதான் புதிதாக்குகிறது
இன்றை

இறந்த மீனின் மீது
புயல்மழை அடிக்கிறது
உடைந்த மீன் தொட்டி
அப்படி அழுகிறது



கனவுகளின் பாதை
சிறுவனோடுப் போகும்
நெகிழிப்பையில்
மீன்குஞ்சுகள்

நடுக்கடல்
எல்லாத் திசைகளையும்
தொலைத்துவிட்ட
வானம்
நிரம்பி நிற்கிறது.

## விஜயபாரதி கவிதைகள்

குவளையில் மதுவென மரணத்தை
நிரப்பியிருக்கிறது
காலம்.

பருகுகிறான்
நீரோ சோடாவோ
தேவைக்கு சேர்க்கப்படாத அதன் கசப்பு
தொண்டையை இறுக்குகிறது

விழிகளை மூடி
பின் திறந்து
உச்சுக்கொட்டியபடி
துரோகத்தைச் சுவைக்கும் அவன்
கண்களால் ஒருமுறை
யாவரையும் அளக்கிறான்
உலர்ந்த சொற்களோடு
நான் இந்தக் கவிதையுடன்
மன்றாடிக் கொண்டிருக்கிறேன்.

வெப்பம் அலைவுறும் இவ்விரவில் கண்ணயர
எரிச்சலூடே வியர்வை பூத்து
புழுங்கிப் புரள்கிறது காலம்.

ஊருக்குழைத்தவனின் நிம்மதிக்கு உலை வைக்க
பேரம் முடித்து
பயனுற்றவர்களுக்கு ஊற்றிகொடுக்கத்
தலைக்கேறுகிறது சாதிபோதை

புலரத் தொடங்கிய காலையில்
கதவைத் தட்டிப் பின் கழுத்தை பிடித்திழுக்கிறது
மஃப்டியில் வந்த துரோகம்

பிணை மீள நினைத்திருந்தவனின்
தாகத்திற்கு தொண்டை நனைக்கக் கிடைத்த
தெங்கம் பழத்தை
உருட்டி உருட்டி விளையாடுகிறான்
மீட்பன் வேடமிட்ட நரி

வன்மத்தின் நஞ்சு தேக்கிய நாவை நெஞ்சுவரை
நீட்டிக் கொண்டிருக்கிறது
அகாலம்

# வாழ்க்கைப் புத்தகத்தில் எழுதப்பட்டது

மிகாய்லோ கோட்ஸுபின்ஸ்கி
தமிழில்: யூமா வாசுகி

*1864ல் சோவியத் யூனியன் உக்ரைனில் பிறந்த மிகாய்லோ கோட்ஸுபின்ஸ்கி (Mykailo Mykhailovych Kotsiubynsky), கொஞ்சம் காலம் மதக் கல்வி பயின்றார். பிற்பாடு ஒரு கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். உக்ரைன் விவசாயிகளின் துன்ப துயரங்களைப் பற்றி குறுநாவல்களும் கதைகளும் எழுதினார். அவரது படைப்புகளின் உளவியல் அணுகுமுறையால் அவை கவனிக்கப்பட்டன. புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் எப்போதும் அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டார். 1882ல் சிறிது காலம் சிறையிலிடப்பட்டார். மக்சீம் கார்க்கியுடன் நெருக்கமான தோழமை கொண்டவர். 'சாலையில்' (On the road), 'பிறந்தநாள் பரிசு' (A birthday present), 'குதிரைகளின் மீது குற்றமில்லை' (Horses are not to blame) ஆகியவை இவரது புகழ் பெற்ற நூல்கள். 'வாழ்க்கைப் புத்தகத்தில் எழுதப்பட்டது' (Written in the book of life) எனும் இந்தக் கதை, அவரது மிகச் சிறந்த கதைகளில் ஒன்று.*

●

பாட்டி படுத்திருந்த இடத்திலிருந்து சூட்டடுப்பை மாற்ற வேண்டி வந்தது. அவள் பேரப்பிள்ளைக்கு உடம்புக்கு முடியவில்லை. வெப்பம் கிடைக்க வேண்டியது பிள்ளைகளுக்குத்தானே. அவர்கள் எல்லோரும் அந்தக் குடிலில் இட நெருக்கடியுடன் வாழ்ந்தார்கள். பெஞ்சில் இடம் காலியாக இல்லை. அதனால் பாட்டி தரையில் படுக்கை விரித்தாள். மகனும் மருமகளும் அதைக் கவனிக்கவில்லை. பாட்டி அப்படித் தரையில் படுத்தாள்.

கதவுக்கும் பீங்கான் பொருட்கள் வைத்திருக்கும் அலமாரிக்கும் இடையிலுள்ள மூலையில்தான் அவள் படுத்திருந்தாள். வயதாகிவிட்டது. மரணத்தை எதிர்பார்த்துப் படுத்திருக்கிறாள். இப்போது, பார்ப்பதெல்லாம் விகாரமாகத் தெரிகின்றன. முன்பு பாட்டி, அடுப்புத் திண்ணையில் உள்ள படுக்கையில் படுத்திருந்தாள். அதனால் அவள் எல்லாவற்றையும் உயரத்திலிருந்து பார்க்கப் பழகியிருந்தாள். குழந்தைகளைப் பார்த்தால் அவர்கள் மிகவும் சிறியவர்களாகத் தோன்றினார்கள். பார்வை மங்கிய பாட்டியின் கண்கள், குழந்தைகளின் சணல் நார்களைப்போன்ற தலைமுடியில் பதிந்தன. அந்த வழியே மகனும் மருமகளும் நடப்பார்கள். சினமும் துயரமும் கொண்ட அவர்களின் முகங்களை பாட்டி பார்த்திருந்தாள். அடுப்பின் பின்புறத்திலிருந்து வரும் முணுமுணுப்புகளையும் அவள் கேட்டிருந்தாள்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. எல்லாம் பெரிது பெரிதாகத் தெரிகின்றன. அலமாரியின் முன்னால் தலையுயர்த்தி நிற்கும் பிள்ளைகள். பாட்டியை நோக்கி அவர்கள் அப்பத் துகள்களை சிந்துகிறார்கள். வீட்டுப் பொருட்கள் தாறுமாறாகக் கிடக்கின்றன. அவள் மகனின், பனி அப்பியிருந்த பழைய மூடுகாலணிகள் பெரிய மலைகளைப்போலத் தோன்றின. பாட்டியின் முன்னால் முழு உலகத்தையும் மறைத்துக்கொண்டு நிற்கும் மருமகளின் வெற்றுப் பாதங்கள். இப்போது, அடுப்பின் விறகுச் சுள்ளிகளை ஆவலுடன் விழுங்கும் தீயின் ஒளிர்வைப் பார்க்கலாம். நெருப்புக்குத் திருப்தி ஏற்படவில்லை. சுள்ளிகள் இன்னும் வேண்டும். பெஞ்சின் கீழே உள்ள மூலைகள் பற்களற்ற வாயைத் திறந்து வைத்ததுபோன்றிருக்கின்றன. அவை ஈரத்தைச் சுவாசிக்கின்றன. அந்த நேரத்தில் வெண்புகை மூடுபனிபோலப் படர்ந்திருந்தது. அது, வீட்டில் உள்ள எல்லாவற்றையும் மறைத்தது. மரணம் இப்படித்தான் இருக்குமென்று பாட்டிக்குத் தோன்றியது. வெளிச்சமில்லை. தெரியவுமில்லை. காலில் குளிர் அரிப்பதுபோன்று மரணம்.

மரணம் எங்கே? அது ஏன் வரவில்லை? பாட்டி யாசித்தாள். ஆனால் பதில் கிடைக்கவில்லை. மரணம் அவள் கணவனை முன்பே பறித்துச் சென்றிருந்தது. மரணம் அவளது ஏழு பிள்ளைகளையும் கழுத்தை முறித்துக் களைந்திருந்தது. அது எந்த நொடியும் பேரனையும் விழுங்கலாம். மரணம் எல்லோரையும் வெட்டி வீழ்த்தியது. ஆனால், அது பாட்டியை அழைத்துப் போக மட்டும் மறந்துவிட்டது. அது ஆச்சரியமாக இருந்தது, பயங்கரமாகவும் இருந்தது. இறப்பது பெருங் கஷ்டம்போல.



நீண்ட பகல்களில், அவற்றைவிடவும் நீண்ட இரவுகளில் அழுகிய உருளைக் கிழங்குகள் மீதும் தன் உடலின் மீதும் எலிகள் கலவரப்பட்டு ஓடுவதைப் பார்த்தாள். கரப்பான்கள், அடுக்களையின் பழந்துணித் துண்டில் அரிப்பதுபோலத் தன் உடலில் அரிப்பதைப் பார்த்துப் பார்த்து பாட்டி சாந்தமாகப் படுத்திருந்தாள். அவளது காய்ந்து வறண்ட தொண்டையிலிருந்து சில நேரம், அப்போதுதான் பிறந்து விழும் நாய்க்குட்டிகளின் மெல்லிய அழுகையொலிபோல துன்பப் பெருமூச்சு எழும்.

"ஓ, என் மரணமே, நீ எங்கே போய்விட்டாய்?"

"நீங்கள் எங்கே சாகப்போகிறீர்கள்? நீங்கள் ஒருபோதும் எங்களை நிம்மதியாக இருக்க விடமாட்டீர்கள்!"

மருமகள் கோபத்துடன் சொன்னாள். அவள் உடல் பாரத்தைச் சுமக்கும் பெஞ்சின் முனகல் கேட்டது.

"எனக்கு யாருமில்லை, எனக்கு யாருமில்லை" என்று பாட்டி மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த நேரம் அவள் நாக்கு பற்களற்ற ஈறுகளில் பட்டு, வறண்டு துவண்ட உதடுகளை நக்கியது.

பாட்டிக்கு இனிப்பு அடை பிடிக்கும். ஊறுகாய்ச் சாறும் பிடிக்கும். நடப்பையும் மறதியையும் இழைகளாக்கி அவள் கனவுகள் நெய்துகொண்டிருந்தாள். பழம்புராணங்களின் கதைத் துணுக்குகளை நினைத்துப்பார்த்தாள். தேவாலயத்தின் ஆராதனைப் பாடல்களை நினைவுகூர்ந்தாள். மகனின், மலைபோன்ற மூடுகாலணிகளையும் அவற்றில் தோய்ந்து பற்றியிருந்த ஈரச் சேற்றுக் கட்டிகளையும் நினைத்துப்பார்த்தாள்.

பாட்டியின் கனவுகள், நீர்ப்பெருக்கில் அடித்துச் செல்லப்படுவதுபோலக் காணாமல் போகும். அந்த நேரம் அவள் குளிரில், கரடுமுரடான தரையில், கனம் குறைந்த விரிப்பில், நனைந்த மூலையில் கிடக்கும் தனது பலவீன உடலைக் குறித்துப் பிரக்ஞை கொள்வாள்.

வாழ்வது எதற்கு? அவள் யாருக்குத் தேவை? வாழ்க்கை அவள் சக்தியைப் பிடுங்கித் தின்றிருந்தது. பிறகு அவளை உருளைக்கிழங்குத் தோல்போல மூலையில் எறிந்திருந்தது. ஆயினும் ஆன்மா அதன் கூட்டை இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறது. அதை விடுவதாகத் தெரியவில்லை.

பாட்டிக்கு பூமியில் அதிக இடமொன்றும் வேண்டாம். பீங்கான் பொருட்கள் வைக்கும் அலமாரிக்குக் கீழுள்ளதைப்போன்ற சிறிய மூலை போதும், தாராளம். அவள் மற்றவர்களின் வழியை முடக்குகிறாள். உண்பதற்கு அவளுக்குக் கொஞ்சம் போதும். ஆயினும் குடிலில் பட்டினிதான். அதனால் கொஞ்சம் உணவுகூட அதிகமாகத் தோன்றியது. பாட்டியின் உதடுகள் காய்ந்த சருகுகள்போன்று அசைந்தன.

"மரணமே, என் மரணமே நீ எங்கே இருக்கிறாய்?"

ஆயினும் பாட்டியின் ஆசை தீரவில்லை. அவள் எலும்பும் தோலுமாக இருந்தாள். என்றாலும், அவளது காய்ந்த வயிற்றிலிருந்தும் வெற்று நெஞ்சிலிருந்தும் அடக்க முடியாததும் விசித்திரமுமான ஆசைகள் எழுந்தன.

"பால் வேண்டும். எனக்குப் பால்."

அதைக் கேட்டு மருமகள் பொங்கிச் சிரித்தாள். அவள் பதில் சொல்லவில்லை. அவள் நெஞ்சும் முகமும் அடிவயிறும் எல்லா உடல் உறுப்புகளும், வாயிலிருந்து உதிரும் சிரிப்பில் மின்னிப் பிரகாசித்தன.

பாட்டி பெருந்துயருற்றாள். பாட்டிக்கு அவள் பால் கொடுக்கவில்லை. பாட்டிக்குப் பால் மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டது. ஆனால், அங்கே பால் இல்லை. நோயுற்ற குழந்தைக்குக்

கொடுப்பதற்குக்கூட பால் இல்லை. பாட்டிக்கும் அது தெரியும். ஆயினும் பால் குடிக்கப் பேராசை.

மருமகளுக்குக் கோபம். அவள் துடைப்பத்தை எடுத்துப் பெருக்கி, பாட்டியின் மீது தூசு தும்பட்டைகளைப் பரத்தினாள்.

"காலை மடக்கி வையுங்கள். இல்லையென்றால் நான் குப்பையுடன் அதையும் கூட்டித் தள்ளிவிடுவேன்!"

பாட்டி காலைக் குறுக்கி வைத்தாள். வெகு நேரம் யாரும் காணாமல் அலமாரியின் கீழே காலை மடக்கி வைத்திருந்தாள்.

குழந்தைகள் பகல் நேரத்தில் பாட்டியைத் துன்புறுத்தினார்கள். மஞ்சள் அலகுள்ள ஐந்து குருவிகளைப்போல எதிர்பார்ப்புடன் அவர்கள் பாட்டியை உற்றுப் பார்த்தார்கள்.

"எங்களுக்கு ஒரு கதை சொல்லுங்கள்."

மறுவார்த்தை சொல்ல, ஒரு காலி பர்ஸ்போல பாட்டி வாய் திறப்பாள். வார்த்தைகள் வெளியே தாவும். ஒரு இளவரசனைப் பற்றிய, தங்கத்தைப் பற்றிய, அழும் உணவு மேசையைக் குறித்தான வார்த்தைகள். ஆனால், அவள் நாக்கு கட்டுப்படுத்த முடியாததாக இருந்தது. ஆரம்ப வார்த்தைகளை நாக்கே நக்கிக் களைந்துவிடும். பிறகு அவள் சொல்வது வேறு எதைப் பற்றியதாகவோ இருக்கும். பெண் குதிரையின் தலையைப் பற்றியோ, வயதான காட்டுப்பூனையைப் பற்றியோ சொல்வாள். அவள் பழைய வார்த்தைகளைத்தான் பயன்படுத்துவாள். அவை குழந்தைகளுக்குப் புரியவில்லை. அவர்கள் சலிப்புற்றார்கள்.

"பாட்டி, நீங்கள் எப்போது இறப்பீர்கள்?"

அவர்கள் பாட்டியின் சுருக்கம் விழுந்த கழுத்தில் விரலால் குத்திப் பார்ப்பார்கள். சுருக்கங்கள் மடிப்புகளாகக் கிடந்தன. அவளது, பைபோன்று ஒட்டிய முலைகளையும் அவற்றிற்கிடையில் தொங்கிக்கொண்டிருக்கும் பித்தளைச் சிலுவையையும் அவர்கள் பார்ப்பார்கள். அவளது தலைத் துணியைப் பிடுங்கி எறிவார்கள். அவளது மெலிந்த காலைப் பிடித்து இழுப்பார்கள். நரம்புகள் புடைத்த கால்கள், அம்மா தீ எரிக்க எடுக்கும் மரக் கம்புகளைப்போன்ற கருப்புக் கால்கள்.

குழந்தைகளுக்கு உற்சாகம். பாட்டியின் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்து செல்வதைப் பார்ப்பதற்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

பாட்டியின் மரணத்தைப் பற்றி மகனும் மருமகளும் பேசிக்கொள்வார்கள் கொடுக்காத வரியைப் பற்றிப் பேசுவதுபோல.

"கிழவி இறந்துபோனால் நாம் எப்படி சாவுச் சடங்குகளைச் செய்வது?"

இதைக் கேட்டு மகன் உறுமுவான். வெறுப்புடன் மூலையைப் பார்ப்பான். இந்த நேரத்தில் பாட்டி மரணத்துக்குப் பயந்தாள். மரணம் வந்தால் என்ன செய்வது? சவ அடக்கத்துக்கான பணம் எங்கிருந்து கிடைக்கும்? பாதிரிக்குக் கூலி கொடுக்க வேண்டுமே? சவப் பெட்டி செய்யும் பலகைகளெல்லாம் என்ன விலை விற்கின்றன! சாவுச் சடங்குக்கு வரும் உற்றார் உறவினர்களுக்கெல்லாம் சாப்பாடு கொடுக்க வேண்டுமே, ஒயின் கொடுக்க வேண்டுமே, அதற்கெல்லாம் பணம் வேண்டாமா?

பாட்டியின் ஆறுதலுக்கென்று ஒரு வழிதான் இருந்தது. குழந்தைகள் கதவைச் சாத்த மறந்தால், ஒரு சிறிய புள்ளிக்கோழி தத்தித் தாவி வரும். அது கழுத்தை நீட்டி தலையை ஒருபுறமாகச் சாய்த்து வட்டக் கண்ணால் பாட்டியைப் பார்க்கும். கோழி ஒரு காலுயர்த்தும். பாட்டி தன் உள்ளங்கையில் அப்பத் துண்டுகள் வைத்து, தன் மெலிந்த கரத்தை நீட்டுவாள். புள்ளிக்கோழி அவற்றைக் கொத்தி எடுத்து விழுங்கும்.

அதற்கான கூலி கோழிக்குக் கிடைத்தது. மருமகள் அதை உதைத்து விரட்டினாள். அது பறந்து சென்று விழும்போது சாப வசவுகளை எறிந்தாள்:

"மூன்றுமுறை சபிக்கப்பட்ட கோழீ நீ செத்துப்போ!"

கோழியைச் சபிப்பதைவிட தன்னைச் சபிப்பதுதான் நல்லது. பாட்டி சிந்தித்தாள். அப்படிச் செய்தால், தான் விரைவில் சாகக்கூடும்.

சிந்திப்பதற்குப் பாட்டிக்கு நிறைய நேரம் கிடைத்தது. இரவும் பகலும் தனியாக அமர்ந்து சிந்தனை செய்வாள். பாட்டியின் வாய் திறந்தது. கண்கள் உள்ளமிழ்ந்தன. வார்த்தைகளை உதிர்ப்பதற்கு உதடுகள் அசைந்தன. உதடுகள் பட்டென்று தயங்கி நிலைத்தன. அவளுக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஒருக்கால், அவள் முனகினாள். "மகனே" சட்டென்று முனகல் நின்றது. தன் மகன் அதைக் கேட்டிருப்பானோவென்று பயந்தாள். அவளது தளர்ந்த கைகால்கள் வியர்த்துக் குளிர்ந்தன. உடைகள் உடலுடன் ஒட்டிப் பிடித்துக்கொண்டன. அவள் உயிர்ப் பிணமாகக் கிடந்தாள்.

கடைசியில் அச்சம் அவளிடமிருந்து அகன்றது.

"மகனே"

அவன் ஏதோ சரிசெய்துகொண்டிருந்தான். அம்மா அழைத்ததை அவன் கேட்கவில்லை.

"போதாப்பு!"

பெயர் சொல்லி அழைத்தாள்.

"என்ன?"

"இங்கே வா."

"எதற்கு?"

"வா, வந்து என் பக்கத்தில் உட்கார்."

விருப்பமற்று அவன் எழுந்தான். அலமாரிக்குப் பக்கத்தில் உள்ள பெஞ்சில் அமர்ந்தான். பெரிய, நனைந்து பருத்த ஒரு மூடுகாலணி பாட்டியின் கண்ணெதிரே தெரிந்தது. அது அவள் முகத்தில் நிழல் வீசியது.

"இறப்பதற்கான நேரம் வந்துவிட்டது."

"என்ன, மீண்டும் தேவாலயத்திலிருந்து பாதிரியை அழைக்க வேண்டுமா? முன்பும் நீங்கள் என்னிடம் இப்படிச் சொன்னீர்கள். அன்றும் நான் பாதிரியை அழைத்து வந்தேன். அவர் செய்யாத வேலைக்கு நான் அவருக்கு சும்மா பணம் கொடுத்தேன்."

அவன் எரிச்சலுடன் முகம் திருப்பிக்கொண்டான்.

"ஏ பாட்டிஞ்" அவன் தன்னைத் திருத்திக்கொண்டான், "அம்மா..." சொல்ல நினைத்த ஏதோ விஷயத்தை மறைத்து வைத்ததுபோன்று அவன் உதடுகள் உறுதியாக மூடிக்கொண்டன ஒரு அழுத்தமான கோடுபோல.

"தேவாலயப் பாதிரி வேண்டாம். அவர் இல்லாமலேயே நம் பாவங்களைக் கடவுள் பொறுத்துக்கொள்வார். நான் இறக்கவில்லையே."

"நீங்கள் சொன்னதையெல்லாம் கேட்டேன், இப்படியெல்லாம் நீங்கள் முன்பும் சொன்னீர்கள்."

"மரணம் என்னை மறந்துவிட்டிருக்கிறது. ஒரு எல்லை தெரியவில்லை. நீ ஒரு உதவி செய்."

பாட்டி தரைப் படுக்கையில் அசைந்தாள். அசைந்தபோது அவளது எலும்புக்கூடு நெரிசலுற்று முனகுவது கேட்டது. அவளுக்கு மூச்சுத் திணறியது. நெஞ்சு குறுகியது.

அவனது கவலை தொண்டையின் வழியே தெறித்து விழுந்தது.

"என்ன?"

அப்போது பாட்டியை மறதி ஆட்கொண்டிருந்தது. கனவு காண்பவளைப்போலப் பேசினாள்:

"மகன் சறுக்கு வண்டியை எடுத்தான். கிழவனை அதில் வைத்தான். வண்டியை ஓட்டினான். கால்வாய்க்கு"

போதாப்பு புருவத்தை உயர்த்தினான்.

"என்ன சொன்னீர்கள்?"

"நான் இப்போது ஒரு பாரம். மற்றவர்களுக்கு வழி மறித்துக்கொண்டிருக்கிறேன். குடிலில் நான் நிறைய இடத்தை எடுத்துக்கொள்கிறேன். குழந்தைகளுக்குத் தேவையான அப்பத்தை நான் தின்று தீர்க்கிறேன். நான் எல்லோருக்கும் பாரமாக இருக்கிறேன். எனக்கே நான் பாரம்தான். என்னைக் காட்டுக்குக் கொண்டுபோ"

அவனுக்குப் புரியவில்லை. அவன் சந்தேகத்துடன் அம்மாவைப் பார்த்தான்.

"எனக்கு உதவி செய், மகனே. என்னைக் காட்டுக்குக் கொண்டுபோ. இப்போது குளிர்காலமல்லவா. நான் சீக்கிரம் இறந்துவிடுவேன். ஒரு கிழவிக்கு இனி என்ன வேண்டும்? ஒன்றிரண்டு பெருமூச்சுகள் மட்டும்தான். அது மட்டும்தான்."

இந்த அற்புத வார்த்தைகள் அவனிடம் ஏதோ வீசியடித்தன. முன்பே மறந்த ஒரு கனவின் நினைவுகள். அது அவனது பிரக்ஞையை மிருதுவாகத் தழுவியது, கடந்து சென்றது.

தேவையில்லை என்றாலும் அவன் கேட்டான்:

"என்னைப் பாவம் செய்யச் சொல்கிறீர்களா?"

"இதில் எந்தப் பாவமும் இல்லை. காடு சுத்தமானது. வெளுத்திருக்கிறது. மரங்கள், தேவாலயத்தின் மெழுகுவர்த்திகள்போல ஆகின்றன. நான் தூங்கிவிடுவேன். பிறகு விழித்தால் நான் சொல்வேன்: தெய்வ மாதாவே, என் மகனை நிந்திக்காதே. மனிதனின் துன்பம்தான் எங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்தது. மற்றவர்கள் சொல்வதை நீ கேட்காதே. கஷ்டம் வந்தபோது அவர்கள் எங்கே இருந்தார்கள்? இங்கே இல்லை. உங்களின் மரணத்துக்கு நீங்கள் தனியாகத்தான் போகிறீர்கள்!"

உழுத நிலத்தில் விதை விழுந்ததைப்போல அம்மாவின் வார்த்தைகள் அவன் மனதில் ஆழ்ந்து இறங்கின. கருணையான வார்த்தைகள். அவை பொய்யான, பழக்கமற்ற, மனப்பூர்வமற்ற வெறுப்பை அவனில் எழுப்பின.

அவன் பெஞ்சிலிருந்து சடபடவென்று எழுந்தான். கோபத்துடன் கத்தினான். அது அம்மாவுக்கானது அல்ல. தனக்கானது.

"புலம்பாதீர்கள். எல்லாம் கடவுளுக்குத் தெரியும். கடவுள்தான் உயிர் கொடுத்தார். கடவுள் மரணமும் தருவார். தூங்குங்கள்.

அதுதான் நல்லது."

விளக்கை அணைத்தான். எல்லோரும் படுத்தார்கள். அவன் எண்ணங்கள் அந்த அறைக்குள் அலைந்தன. அவை சுற்றித்திரிந்தன, பிறகு ஒன்றுக்கொன்று முரண்பட்டன. புயற்காற்றின் கார்மேகம்போல இருளவும், இடையிடையே மனதில் வெளிச்சத்தின் மின்னலாட்டங்களை உருவாக்கவும் செய்தன.

கடவுள்?

நீ சொர்க்கத்திலிருந்து பார்க்கிறாயா? அப்படியென்றால் பார்.

அவன் எண்ணங்கள் கொடூரமாகவும் குளிர்ந்துமிருந்தன.

பாவம்?

உலகம் பாவத்தில் மூழ்கியிருக்கிறது. அவனின் பசிதான் தின்று களிக்கின்றவர்களின் பாவம்.

அவன் தன் எண்ணங்களுடன் போராடினான். அம்மாவின் வார்த்தைகள் அவனைப் போருக்கு அழைத்தன. அம்மா சொன்னதிலிருந்து ஒரு கருத்து அவன் நினைவில் பதிந்து நின்றது. பாட்டி சொன்னதோ, முன்பொருமுறை, பழங்காலத்தில் பிள்ளைகள் தாய் தந்தையரைக் கொன்றார்கள். அவர்கள், கொல்லப்பட வேண்டியவர்களைக் காட்டில் எறிந்தார்கள். அல்லது வயல்வெளிகளில் போட்டு வந்தார்கள். அப்புறம் அவர்கள் மரணத்துக்கு இரையானார்கள். அவர்கள் வாழ்வதில் அர்த்தமில்லாதிருந்தது.

முதுமை இறக்க வேண்டும், இளமை வாழ வேண்டும். இதுதான் உலகத்தில் உள்ள எல்லாவற்றிலும் நடக்கிறது. காய்ந்த இலைகள் உதிர்கின்றன; தளிர்கள் வளர்கின்றன. குளிர்காலம் வசந்தகாலத்துக்கு வழிவிடுகிறது. மண்ணின் அடியில் விதைகள் சேர்ந்து அழுகிப்போகின்றன. புது முளைகள் மேலெழுந்து வருகின்றன. உலகத்தின் ஆரம்பம் முதல் அதுதான் எப்போதும் எங்கும் நடக்கிறது.

கிழவி வெகு காலமாக வாழ்ந்துவருகிறாள். அவளால் இறக்க முடியவில்லை. அவள் மரணத்தை யாசிக்கிறாள். கடவுள் அதை மறுக்கிறார். அவளுக்கு உதவி செய்வது எப்படிப் பாவமாகும்?

சதுப்பு நிலத்திலிருந்து நீராவி எழுவதுபோல அவனுக்குள்ளிருந்து துயரம் எழுந்தது. அவனது சிந்தனைகள் வழுக்கி விலகின. உணர்வு மரத்துப்போனது. தலை குளிர்ந்தது. வெறுப்பூட்டும் வியர்வை துளிர்த்தது. அடக் கடவுளே உயிருடனுள்ள அம்மா இறப்பதற்காக அவளைக் குடிலிலிருந்து தள்ளி வெளியேற்றுவதா

இருண்ட இரவின் கனம் முழுக்க அவன் நெஞ்சில் இறங்கியது. அவனுக்கு மூச்சுத் திணறியது. எண்ணங்கள் தந்திரமாக மனதுக்குள் புகுந்தன. அவை அசைகின்றன. வளர்கின்றன.

அவன் அவற்றைத் துரத்த முயன்றான். 'என்ன நடந்தாலும் எது வந்தாலும் ஆட்கள் என்ன பேசுவார்கள்? மக்கள். அவர்கள் அவனை இகழ்ந்து பேசுவார்கள். ஆனால், நீங்களும் உங்கள் குழந்தைகளும் பட்டினி கிடந்து சாகும்போது, சுருக்கில் சிக்கிய நாயைப்போலக் கதறும்போது, உங்களைச் சித்திரவதை செய்யும்போது மனிதர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். பூமியின் காடுதான் மற்றவர்கள். மக்கள். அடச்சே!'

போதாப்புக்குத் தூக்கம் வரவில்லை. அவன் இப்படியும் அப்படியும் புரண்டு படுத்தான். அடிக்கடி தலை தூக்கிப் பார்த்தான். அலமாரியின் கீழுள்ள மூலையிலிருந்து ஏதும் ஓசை வருகிறதா என்று செவிகூர்ந்தான். அங்கே அமைதி. எல்லாம் முடிந்துவிட்டிருக்கிறது. சட்டென்று அவனுக்குத் தோன்றியது, அவன் அம்மா இப்போது காட்டில் இருக்கிறாள். குடிலில் இப்போது தாராளமாக இடம் இருக்கிறது. முனகல் கேட்கவில்லை. இப்போது கொஞ்சம் பேருக்குத்தான் உணவு வேண்டும். மரணச் சடங்குக்கு எப்படிப் பணம் ஏற்பாடு செய்வதென்று இனி கவலைப்படத் தேவையில்லை.

ஆனால், எலிக் கூட்டம் அலமாரியின் கீழிருந்து சகிக்க முடியாதபடி சந்தடி செய்துகொண்டிருந்தன. மூலையிலிருந்து வழக்கமான சப்தம் மட்டும் மீண்டும் எழுந்தது:

"மரணமே நீ எங்கே இருக்கிறாய்?"

அன்று அவன் தாமதமாகத்தான் எழுந்தான். ஆகாயத்திலிருந்த சாம்பல் நிறம் பூமியையும் இருட்டாக்கியிருந்தது. மூடுபனியின் அலைகள் துயரற்ற ஆன்மாக்களைப்போல அலைந்துகொண்டிருந்தன.

உரம் எடுத்துச் சென்று வயலில் போட வேண்டியிருந்தது. அவன் அதைச் சேர்த்து வைத்திருக்கிறான். சறுக்கு வண்டியில் காலெடுத்து வைத்தான். அவனும் மூடுபனியைப்போல இருண்டான். அவனில் ஊர்ந்து வீழ்ந்த, இப்போதும் அங்கே உறுதியாக நிற்கின்ற இரவின் சிந்தனைகள், மீண்டும் மனதில் மேய்கின்றன.

என்னவென்று சரியாகத் தெரியவில்லை. அவன் இருளும் முன்பே முன்னேரத்திலேயே வயலிலிருந்து வந்துவிட்டான். குடிலுக்குள் புகுந்து ஓசையெழுப்பாமல் நடந்தான். மீண்டும் வெளியே சென்றான். மீண்டும் குடிசைக்குத்

திரும்பி வந்தான். வாயிற்படியில் நின்றான். அம்மா கிடக்கும் மூலையை அவன் பார்க்கவே இல்லை. அவனுக்கு என்னவெல்லாமோ பேச வேண்டுமென்றிருந்தது. வார்த்தைகள் வரவில்லை.

அம்மா அமைதியாக இருந்தாள்.

வேதனையுடனும் கோபத்துடனும் அவன் கடைசியில் அந்த மூலையைப் பார்த்தான். அம்மாவிடம் கேட்டான்:

"உங்களுக்கு ஸ்திர புத்தி வந்துவிட்டதா?"

"என்ன? ஏன் இப்படிக் கேட்கிறாய்?"

"இரவில் பேசிய முட்டாள்தனமான பேச்சுக்களையெல்லாம் மறந்துவிட்டீர்களா?"

"ஓ எனக்கு உதவி செய், மகனே..."

"மீண்டும் நீங்கள் பிடிவாதம் ;செய்கிறீர்கள்."

"என்னைக் காட்டில் கொண்டுபோய் விட்டுவிடு, மகனே"

சட்டென்று அவன் அம்மாவின் அருகில் அமர்ந்தான். தன் முகத்தை அம்மாவின் முகத்துடன் நெருக்கினான்.

அவனது வெப்பமான மூச்சுக் காற்றை அம்மா உணர்ந்தாள். அவன் சொல்லி முடித்தான்:

"சொல்லுங்கள். உங்களுக்கு உண்மையிலேயே அதுதான் வேண்டுமா?"

"ஆமாம்."

"நீங்கள் இதைப் பற்றி நன்றாக யோசித்தீர்களா?"

"ஆமாம்."

அவன் முரட்டுத்தனமாகத் துள்ளியெழுந்து மேசைக்கு முன்னால் அமர்ந்தான். ஒரு துண்டு ரொட்டியைப் பிய்த்தெடுக்க ஆசைப்பட்டு அதற்கு முடியாமல் ரொட்டியை அதனிடத்தில் வைத்ததுபோன்ற ஒரு அனுபவம்.

அவன் யாரையும் பார்க்கவில்லை. ஆனால், எல்லோருக்கும் விஷயம் தெரியும் என்று அறிந்திருந்தான். அவன் மனைவி சாந்தமாகச் சொன்னபோது அவனுக்கு வியப்பு ஏற்படவில்லை.

"நமக்குக் கொஞ்சம் சுடுதண்ணீர் தேவைப்படும்."

அவன் ஆர்வமற்று சுற்றிலும் உள்ள களேபரத்தைக் கவனித்தான். மனைவி எவ்வளவு பரபரப்பாக வேலை செய்கிறாள். அவள் அடுப்பில் வைக்கோல் கற்றைகளைத் திணிப்பதை அவன் பார்த்தான். குழந்தைகள் மூலையில் நின்று சலசலத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சந்தோஷம். "கடைசியில் அப்பா, பாட்டியைக் காட்டுக்குக் கொண்டு செல்கிறார்."

பாட்டி அலமாரி மூலையிலிருந்து ஒரு கை நீட்டினாள்.

"எனக்கு சுத்தமான ஒரு சட்டை கொடு, ஒரு மெழுகுவர்த்தியும்."

"நம்மிடம் மெழுகுவர்த்தி இருக்குமென்று தோன்றவில்லை."

அவனே தெய்வ உருவங்கள் வைத்த இடத்துக்கு ஏறினான். அங்குதான் அவர்கள் ஞாயிற்றுக் கிழமை பிரார்த்தனைக்குப் பயன்படுத்தும் மெழுகுவர்த்திகளை ஒளித்து வைப்பார்கள்.

அம்மாவை ஆயத்தம் செய்வதைத்தான் பார்த்துக்கொண்டிருப்பது சரியல்லவென்று அவனுக்குத் தோன்றியது. அவன் வெளியே சென்றான்.

அவன் திரும்பி வந்தான். அம்மா தயார் செய்யப்பட்டு பெஞ்சில் கிடத்தப்பட்டிருந்தாள். அவள் எலும்புகள் துருத்திக்கொண்டிருந்தன. அவை சிறிதாக இருந்தன. இறகுகள் களையப்பட்ட கோழியைப்போன்றிருந்தாள். அம்மாவின் மார்பில் சிலுவை வைக்கப்பட்டிருந்தது. அவளது குதிகால்கள் சுத்தம் செய்யப்பட்டிருந்தன. அவை ரோமச் சட்டைக்குள்ளிலிருந்து வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. பாட்டி உயிரற்றதுபோலக் கிடந்தாள்.

ஆயத்தங்கள் எல்லாம் முடிந்துவிட்டனவா என்று கேட்க வேண்டும் என அவன் நினைத்தான். ஆனால் முடிவில்லை. காரணம் இருந்தது. அவர்களெல்லாம் அவனுக்காகக் காத்திருந்தார்கள்.

அவன் பெஞ்சை நோக்கி நகர்ந்தான்.

"ஒருக்கால் நீங்கள்"

பாட்டி சோர்ந்து தலையாட்டினாள். அவள் முகத்தில் புதிய நிழல்கள் பரவியிருந்தன.

பிறகு அவன் திடமாக அடி வைத்தான். பாட்டியின் கையிலும் உதட்டிலும் முத்தமிட்டான். பாட்டி தன் மெலிந்த கரங்களால் அவனை ஆசீர்வதித்தாள். அந்தக் கரங்கள் குளிர்காலத்துக் கம்புகள்போன்றிருந்தன.

பிறகு ஒவ்வொருவராகப் பாட்டியின் அருகே சென்றார்கள். முதலில் மருமகள், பிறகு பிள்ளைகள். அவர்களும் பாட்டியை முத்தமிட்டார்கள்.

பாட்டி மெதுவாக முனகினாள். வெப்பமான உதடுகள் முகத்தில் பட்டபோது அவளுக்கு இதமாக இருந்தது.

மருமகள்கூட ஏங்கி அழுதாள். போதாப்பு ஒரு விரிப்பு கேட்டான். சட்டென்று மருமகளின் தொனி மாறியது. அவள் கேட்டாள்:

“விரிப்பு எதற்கு?”

“அம்மாவைப் போர்த்த வேண்டும்.”

“சரி. அதைத் திருப்பி எடுத்து வர வேண்டும்.”

போதாப்பு அம்மாவை அன்புடன் கைகளில் தூக்கி வெளியே கொண்டு வந்தான். கதவைத் திறந்தபோது குளிர் காற்றின் அலைகள் உள்ளே புகுந்தன. புகையில் இருண்ட வாயிற்படியை அவன் கடந்து சென்றான்.

குழந்தைகள் ஓசையிட்டார்கள்.

சறுக்கு வண்டியில் வைக்கோல் விரிக்கப்பட்டிருந்தது. போதாப்பு அதில் அம்மாவை வசதியாகக் கிடத்தினான். விரிப்பால் போர்த்தினான். கடிவாளத்தைப் பிடித்தபடி அவன் கேட்டான்:

“பாட்டி! நன்றாக இருக்கிறீர்களா?”

மீண்டும் பாட்டி! அம்மாவை. அவன் நினைத்தான். தவறைத் திருத்துவதற்கான தைரியம் அவனுக்கு இல்லை.

“போர்வையைத் திரும்பக் கொண்டு வர மறக்காதீர்கள்.” மனைவி மீண்டும் சொன்னாள். அவன் சறுக்கு வண்டியில் ஏறினான்.

குதிரை சென்றது. பாட்டி வழுக்கிச் சென்றாள்.

குடிலிலிருந்து ஏறத்தாழ மூன்று வெர்ஸ்ட் தூரம் அவர்கள் கடந்து செல்ல வேண்டியிருந்தது. சட்டென்று இரவு வந்துவிட்டது. அடிவானம் இருண்டது. வெளியே, பக்கத்திலிருந்த பனிப்படலங்களின் வெண்ணொளிர்வு. ஊர்ந்திறங்கும் மூடுபனி மரங்களை மறைத்திருந்தது. இரவு தூசுப் பனியின் பூஞ்சை மரங்களில் இறுகிக் கிடந்தது.

அவர்கள் மௌனமாக இருந்தார்கள். அவர்கள் பேசுவதற்கு என்ன இருக்கிறது. முன்னரே வறுமை அவர்கள் உதடுகளை மூடி முத்திரை வைத்துவிட்டது. அவனால் தன் இதயத்துடன்தான் பேச முடியும். எல்லாவற்றுக்கும் மேலான ஒரு உணர்ச்சி. வண்டியிலிருக்கும் உயிருள்ள அம்மாவின் உடலிலிருந்தும் அவனிடமிருந்தும் உருவாகும் பயங்கரமும் மர்மமானதுமான ஏதோ ஒன்று அவனால் வார்த்தைகள் கொண்டு துரத்த முடியாத ஏதோ ஒன்று

பனித்துகள் படிந்த குதிரையின் வால் உலைந்தது. அது உயர்ந்து அசையத் தொடங்கியது. அவன் அதை உற்றுப் பார்த்தான். அந்த நேரத்தில் அவன் மனது எங்கோ மேய்ந்துகொண்டிருந்தது. வைக்கோல் அறுக்க வேண்டும். மிதித்த கற்றைகளை வைக்கோல் அறுப்புக்காரனிடம் கொண்டு செல்வதற்கு ஏற்ற நல்ல நேரம் எது? திரும்பி வந்த பிறகா? அல்லது நாளையா? பிறகு அவன், தான் கையுறைகள் எடுக்க மறந்ததை நினைவுகூர்ந்தான். கையில் ஒட்டி இறுகியிருந்த உரத்தைக் கழுவ மறந்துவிட்டது.

பாட்டி ஏதோ முணுமுணுப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவன் திரும்பிப் பார்த்துக் கத்தினான்:

“என்ன வேண்டும்?”

பாட்டி பேசுவது தெளிவாகக் கேட்கவில்லை. அவன் கூர்ந்து கேட்டான். கடைசியில் அது அவனுக்குப் புரிந்தது. மைகைத்தாவின் வயலின் வழியாகவா நாம் செல்கிறோம்?

“மைகைத்தாவின் வயலா? ஹாஞ் ஹாஞ் ஹா! மைகைத்தா இறந்து எவ்வளவு காலமாகிறது! அவரின் பிள்ளைகள் சொத்துக்களை விற்றுவிட்டார்கள்.

“அவர்கள் யாருக்கு விற்றார்கள்?”

“ஓ, அது ஒரு பெரிய கதை.”

அந்த நொடியில் அவன் எச்சரிக்கையடைந்தான். பின்னால் பார்த்தான். உரத்துச் சிரித்தான். அதைப் பாட்டி கேட்டாள். அவனது சாட்டை நெளிந்தது, வண்டிக்கு நேராக அவன் கைகள் வீசினான். மகிழ்ச்சியும் பெருஞ் சிரிப்பும், அவனுக்கும் அவன் அம்மாவுக்கும் இடையில் உருவாகி வந்த பயங்கரமானதும் மர்மமானதுமான ஏதோ ஒன்றைத் துரத்திவிடும்.

பனி உறைந்த வழியில் வண்டி முனகிச் சென்றது. உயர்ந்த வரப்புகளில் மோதி அது குலுங்கியது. அவன் ஒரு காலால் முனையை அழுத்தி, வண்டியை நேராக வைக்க கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். உரம் கொண்டு போகும்போது இப்படிச் செய்வது வழக்கம். குதிரையைத் துரிதப்படுத்தினான்: “ஹைஞ் ஹைஞ் நோஞ்சான் குதிரையே” பிறகு அவன் அம்மாவைப் பார்த்தான்.

முன் காலத்தில் இருந்ததைப்போல அப்போது அவள் மகிழ்ச்சியாக இருந்தாள். அவள் சிறு வயதாக இருந்தபோது, அங்குமிங்கும் சென்று வந்துகொண்டிருந்தபோது இருந்த மகிழ்ச்சி.

மைகைத்தாவைப் பற்றிய செய்தியைப் பாட்டி கவனத்துடன் செவிமடுத்தாள். அவளுக்கு எதுவும் தெரியவில்லை. அறிந்ததையெல்லாம் பீங்கான் அலமாரியின் கீழே வைத்துவிட்டாளோ? மைகைத்தாவுக்கு ஒரு முறை பாட்டியின் மீது

காதல் இருந்தது. அவர் அவள் பின்னால் சுற்றினார்.

காட்டுக்கு வந்து சேர்ந்தது அவளுக்குத் தெரியவில்லை. போதாப்பு குதிரையைக் கட்டினான்.

"குளிர்கிறதா?" வண்டியிலிருந்து இறங்கி அம்மாவின் பக்கத்தில் வந்து அவன் கேட்டான்.

"இல்லை."

"சரி, நாம் வந்துவிட்டோம்."

பாட்டி எழ முயன்றாள். ஆனால் வீழ்ந்துவிட்டாள்.

"நேரமாகவில்லை. கொஞ்சம் படுங்கள்."

அவன் வண்டியிலிருந்து இறங்கி நடந்தான். ஒரு நல்ல இடத்தைத் தேடினான். ஓக் மரத்தடியில் மென்மையான ஒரு மண் திட்டைக் கண்டுபிடித்தான். உரக்கச் சொன்னான்:

"இது நல்ல இடம்!"

பிறகு அவன் சுற்றிலும் பார்த்தான்.

ஆழமான அமைதியில் மரங்கள், பனி படிந்த குச்சிகளாலும் கிளைகளாலும் வெள்ளை வலை உருவாக்கியிருந்தன. சொர்க்கத்தின் ஆழமான கடலில் வீசுவதற்காகத் தயாரித்ததைப்போன்ற ஒரு வெள்ளை வலை. அங்கே சொர்க்கத்தின் தங்க மீன்களின் செதில்கள்போல நட்சத்திரங்கள் மின்னின.

'தேவாலயத்தைவிட நல்ல இடம்.' அவன் நினைத்தான்.

அவன் அந்த இடத்துக்கு வைக்கோலைக் கொண்டு வந்தான். கவனமாக அவற்றைப் பரப்பினான். பிறகு பாட்டியை அதில் படுக்க வைத்தான். அவள் கால்களைப் போர்வையால் மூடத் தொடங்கினான். பாட்டி அதை எதிர்த்தாள்.

"அது தேவையில்லை. வீட்டுக்கு எடுத்துச் செல். அங்குதான் அது அதிகமாகப் பயன்படும்!"

'சரிதான்', அவன் நினைத்தான். போர்வையை எடுத்துவிட்டு அவன் மீண்டும் யோசித்துப்பார்த்தான். மறுபடியும் போர்வையை எடுத்து பாட்டியின் கழுத்துவரை மூடிப் போர்த்தினான். பாட்டி இசைந்தாள். அவள் தன் இரு கைகளையும் போர்வைக்கு வெளியே எடுத்தாள். நெஞ்சில் கோத்து வைத்துக்கொண்டாள். கோத்து வைத்த ஒரு பிணத்தின் கரங்கள்போல. அவன் மெழுகுவர்த்தி ஏற்றினான். அதைப் பாட்டியின் விரல்களுக்கிடையில் திணித்து வைத்தான்.

இனி என்ன? இனி செய்வதற்கு என்ன இருக்கிறது? அவன் சிந்தித்தான். மண்டியிட்டான். பாட்டியைத் தொட்டான். கோத்து வைத்த அவள் கரங்களை தன் நெற்றியால் தொட்டான். மெழுகுவர்த்தி எரிந்து உருகிக்கொண்டிருந்தது. மெழுகின் வெப்ப மணம் அவனுக்குள்ளே கொடூரமும் கலக்கமுமான, விவரிக்க முடியாத ஏதோ ஒரு உணர்ச்சியை எழுப்பியது.

இங்கே, இந்த அமைதியில் மரங்கள், தேவாலயத்து மெழுகுவர்த்திகள்போல செங்குத்தாக நிற்கின்றன. பாடுபட்டுச் சோர்ந்த அம்மாவின் கரங்களில் அவன் உதடுகளைப் பதித்தான். தன் பாடுகளை அவன் கடவுளுக்கு சாட்சிப்படுத்திக்கொண்டிருந்தான். தன் வாழ்க்கையைப் பற்றி, அது தனக்குச் செய்த அநீதியைக் கடவுளுக்கு உணர்த்த விரும்பினான். அவன் இதை மட்டுமே சொன்னான்:

"அம்மா, மன்னித்துவிடுங்கள்."

"கடவுள் மன்னிக்கட்டும்."

அவன் எழ முற்பட்டான். எல்லாம் முடிந்துவிட்டது. அப்போதுதான் அம்மாவின் மெல்லிய குரல் அவன் செவிகளில் பதிந்தது. அவன் அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அந்த முகம் நிழல்களில் கரைந்துகொண்டிருந்தது மெழுகுவர்த்தியின் மஞ்சள் மெழுகுபோல.

"என்னம்மா?"

பாட்டியின் உதடுகள் அசைந்தன. வாய் திறந்தபோது, நீல நிறமான ஈறுகள் தெரிந்தன. அவள் முனகியபோது அவளது பார்வை மங்கிய கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர் துளிர்த்தது.

"புள்ளிக்கோழியைக் கொல்லாதே அது இன்னும் முட்டையிடும்."

அவன் அதை ஏற்றுக்கொண்டான். "கோழியைக் கொல்வதா? கோழி ஒருபோதும் விவசாயியின் உணவு அல்ல. அதுதானே இருக்கிறது."

அவன் எழுந்தான். தலை குனிந்தான். வணங்கினான். பிறகு துகள் பனியை மிதித்து நடந்தான்.

வண்டியில் பாய்ந்து ஏறி சாட்டை வீசினான். வண்டி சென்றது. அது மரங்களில் மோதியது. பனி விழுந்த குழிகளில் சிக்கியது. வண்டி முன்னால் செல்லும்போது அவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். மெழுகுவர்த்தி தெரிந்தது. மரங்களுக்கிடையில் அது மெதுவாக எரிந்துகொண்டிருந்தது. பூமியில் இறங்கி பனியில் ஓய்வுகொள்ள வந்த ஏதோ நட்சத்திரம்போல.

அவன் நிம்மதியடைந்தான். தன் தோளிலிருந்த பாரத்தை இறக்கி வைத்திருக்கிறான் அவன்.

புத்துணர்ச்சியான காற்றைச் சுவாசித்தான். ஆயினும் தன் மனதின் உள்ளே ஒரு வெறுமையை உணர்ந்தான். அதைத் தவிர்ப்பதற்காக அவன் குதிரையிடம் கோபத்துடன், மிருகத்தனமாகக் கத்தினான்:

“ஹைஞ் ஹைஞ் நோஞ்சான் குதிரையே”

அந்தச் சறுக்கு வண்டியில், திருவிழாவிலிருந்து குடித்துத் திரும்புகிறவனைப்போல அவன் சாய்ந்தும் சரிந்தும் அமர்ந்திருந்தான். அதற்கிடையில் பலரையும் ஏற்றி இறக்கியிருந்தான். எல்லாவற்றின் மீதும் உதாசீனம் கொண்டிருந்தான். அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. வருவது வரட்டும்.

காட்டிலிருந்து வயலுக்கு வந்தது குதிரை. அதன் வேகம் மட்டுப்பட்டது.

திடீரென்று போதாப்புக்கு, குழந்தைப் பருவத்தின் ஒரு நாள் நினைவு வந்தது. அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. சூரிய வெளிச்சத்தில் குடில் ஒளிர்ந்தது. அவன் குடிலிலிருந்து வெளியே செல்ல முற்பட்டான். நண்பர்களுடன் செல்ல அவசரப்பட்டான். தன் அழுக்கான சட்டையை மாற்றக்கூட அவனுக்கு நேரம் இல்லை. அப்போது அம்மா அவனைப் பிடித்தாள். குளிர்ச்சியான ஒரு தூய வெள்ளைச் சட்டையை அவனுக்கு அணிவித்தாள். அவன் முடியைச் சீவினாள். வாயிலைக் கடக்கும் முன்பே அவன் சட்டைப் பையில் சூடான ஒரு பலகாரத்தை வைத்தாள். அது அவன் நெஞ்சைக் கதகதப்பாக்கியது. வெளியே வந்து நண்பர்களுடன் சேர்ந்தபோதுதான் அவன் அந்தப் பலகாரத்தை வெளியே எடுத்தான். அது அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது. நண்பர்கள் முழித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் பேராவலுடன் அதன் சுவையை ரசித்தான். அதன் நடுவிலிருந்த பிளம் பழத்தை விரல்களால் தோண்டி எடுத்தான்.

வேறு எதுவும் அவன் நினைவில் இல்லை.

அவன் அப்பாவின் மரணமும் அவனுக்கு மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. மரணச் சடங்கில் பெரிய மக்கள் கூட்டம் இருந்தது. அவர்கள் முட்டைக்கோசு உண்டார்கள். தேனில் ஊறிய அவித்த கோதுமையும் அதன் மேலே பதித்த, மொய்க்கும் ஈக்கள்போன்றிருந்த உலர் திராட்சையும் தின்றார்கள்.

நிச்சயமாக அவனும் அதை நிறையச் சாப்பிட்டிருக்க வேண்டும்.

வண்டி வயலுக்கு வந்தது. வயலின் உள்ளே சென்றது. வெள்ளை நிறக் குதிரை அது. அது பனியின் நிறத்துடன் கலந்தது. வானம் அவர்களுக்கு மேலே சாய்ந்து கிடந்தது. அவர்களுக்கு மேலே, கருப்பு ஆகாயம்.

ஒரு புறாச் சிறகின் நிழல்போல தனித்த ஒரு மேகத் துண்டு ஆகாயத்தில் மிதந்தது.

அவன் கண்களைத் தாழ்த்திக்கொண்டான். அவன் குன்றிப்போகிறானோ? நெஞ்சை உறையச் செய்கிற ஒரு சுமை. பார்த்தது ஒருக்கால் மேகம் அல்லாதிருக்கலாம். அது அம்மாவின் ஆன்மாவாக இருக்கலாம். உயரத் துடிக்கும் ஆன்மா.

அவன் சிந்தனைகள் பின்னோக்கிச் சென்றன. காட்டில் தனியே கிடக்கிறாள் அம்மா. உறைய வைக்கும் குளிர் விரிப்பில் காயம்பட்ட கிளியைப்போல. கண்ணீரினூடே சொர்க்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். அம்மாவுடன் சேர்ந்து அழுவதற்கு மெழுகுவர்த்தி மட்டும்தான் இருக்கிறது. அவளது மெலிந்த கரங்களில், மரணத்துக்காகக் கோத்து வைத்த கரங்களில், வெப்பமான மெழுகு உருகி வழிகிறது.

எதற்காக அவன் அம்மாவைக் காட்டுக்குக் கொண்டு வந்தான்? அப்படிச் செய்யும்படி அம்மாதான் சொன்னாள். அவன் அதன்படிச் செய்தான். ஆயினும் அதைத் தவிர்த்திருக்கலாம். அதை வேறொரு ரீதியில் செய்திருக்கலாம். ஒரு மாயத் தீண்டல் பட்டதுபோன்று, வயலும் வானமும் குதிரையும் சட்டென்று மறைந்தன. ஒரு காட்சி மட்டும் அவன் கற்பனையைத் தழுவியது. மற்றவை எல்லாம் மறைந்துபோயின.

அம்மாவை அவர்கள், சிலுவையும் பாதிரியும் உள்ள மயானத்துக்கு எடுத்து வந்தார்கள். அது கிறிஸ்தவ சம்பிரதாயம். அவர்களின் குடில் நிறைய ஆட்கள். வெந்த உணவின் மணம் பொங்கி வந்தது. “குடி, உறவே” “விட்டுச் சென்றவர்களின் ஆன்ம சாந்திக்காக” “கடவுள் அவர்களின் ஆன்மாவுக்கு நித்ய சாந்தியளிக்கட்டும்” தொண்டையிலும் வயிற்றிலும் எரிந்தது வோட்கா. ஆரவாரம் அதிகமானது. நல்லவர்களான ஊர்க்காரர்கள் அன்பு காட்டினார்கள். அவர்கள் ஆவி எழும் இறைச்சியைத் தட்டுகளில் பரிமாறினார்கள். “ஒரு மடக்கு குடி” “அவர்கள் நல்ல பெண்மணியாக இருந்தார்கள்” அவர்களின் சிறுகரண்டிகள் தட்டுகளுடன் சண்டையிட்டன. எண்ணெய்ப் பசையுள்ள உதடுகள் அசைந்து தட்டுகளின் ஓசைகளை ரசித்தன. பெருத்த வயிறு ஆன்மாவைக் காட்டுகிறது என்று தோன்றுகிறது. அழட்டும், பாடட்டும், “நாம் குடிக்கலாம், அன்பான நண்பனே, விட்டுப் பிரிந்த ஆன்மாவுக்காக நாம் குடிக்கலாம்”..

அவன் வியர்த்துக் களைத்துப்போனான்.

"நான் என் தோட்டத்தில் பாதியை பணயத்துக்குக் கொடுத்திருக்கலாம்."

அவன் உரக்கச் சொல்லிவிட்டான். அவன் நடுங்கினான்.

இதைச் சொன்னது யார்?

அவன் சுற்றிலும் பார்த்தான். குதிரை ஒவ்வொரு எட்டாக மெதுவாக எடுத்து வைத்தது. மூடுபனி திரும்ப வந்திருக்கிறது. அது வயலையும் வானத்தையும் கருப்பாக்கியது. அது இருளையும் வாட்டத்தையும் விதைத்தது.

இந்த அதி பயங்கரக் காட்சியை விரட்டியடிக்க வேண்டும். முன்பொருமுறை தேவாலயத்தில் பாதிரியார் சொன்னது அவனுக்கு நினைவு வந்தது. மக்கள் வெறுமனே மேம்போக்காகச் சொல்கிற விஷயங்கள். அவன் பாவத்தைக் குறித்து நினைத்தான். ஆத்மாவைப் பற்றி நினைத்துப்பார்த்தான். பிரார்த்தனைகளைப் பற்றியும் கிறிஸ்தவ ஆசாரங்களைப் பற்றியும் நினைத்துப்பார்த்தான். "உன் தாய் தந்தையை மரியாதை செய்." கற்பனை எழுப்பிய வெப்பமும் வசீகரமுமான காட்சிகள் அவனில் வெறுப்பை அகற்றின. "நமக்கு ஒரு அம்மாதான். மரணமும் ஒன்றுதான்."

அவன் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டான். பிறகு ஒரு குரலும் கேட்டது.

"நண்பா, உனக்கு உதவிக்கொள். இறந்தவரின் ஆன்மாவுக்காக நாம் குடிக்கலாம்." பேச்சின் வெப்பத்தில் ஆரவாரத்தில், அருமையான உணவுகளின் சுவையில் வாழ்வது எனும் பெருமகிழ்ச்சியில் அவன் மூழ்கிப்போனான்.



**வாழ்த்துகிறது கண்ணாமூச்சி**

பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற புத்தகரம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.இரா.கௌரி சங்கர் அவர்களின் அன்பு மகன் கௌ. முருகன்

தூரத்தில் குடில் தெரிந்தது.

திடீரென்று அவன் வண்டியில் நிமிர்ந்து நெட்டுயிர்த்தான். தொலை தூரத்தைப் பார்த்தான். வண்டியைத் திருப்பினான். சக்தியுடன் குதிரையின் போக்கைத் திருப்பினான். உரக்கக் கத்தினான் அவன்:

"ஹைஞ் ஹைஞ் நோஞ்சான் குதிரையே"

குதிரையின் குளம்படிகள் தெறித்துப் பறக்கடிக்கும் பனிச் சிதறல்களினூடே, மூடுபனியினூடே அவனும் குதிரையும் விரைந்தார்கள் காட்டுக்கு, அம்மாவிடம்.

1. மூடுகாலணி: Shoe
2. சறுக்கு வண்டி: Sledge
3. வெர்ஸ்ட்: 2/3 மைலுக்குச் சமமான ரஷ்ய அளவு

(என்.பி. முகமதின் மலையாள மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கப்பட்டது) •




**வாழ்த்துகிறது கண்ணாமூச்சி**

பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் இரண்டாம் இடம் பைங்காநாடு அரசுப் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் திரு. சா. தமிழ்ச்செல்வன் அவர்கள் அன்பு மகள் த. அட்சயபாரதி

சிறுகதை

# கலைநகரம்

## அன்பாதவன்

"ஸ்ரீ விக்கிரமாதித்திய சத்தியாச்ரைய ஸ்ரீ பிரித்திவி வல்லப மகாராஜா கச்சியும் கொண்டு ராஜசிம்மேஸ்வரத்தை கண்டு மகிழ்ந்து இறைவனுக்கு தானம் செய்தார். இந்த வார்த்தைகளை அழிப்பவர்கள் காஞ்சியில் உள்ள கல்வி நிலையத்தை அழித்த பாவத்தை பெறுவார்கள் இந்த தர்மத்தை காப்பவருக்கு புண்ணியம் கிடைக்கட்டும். இந்த எழுத்துக்களை எழுதிய அதிகாரிகள் ஸ்ரீமத் அநிவாரிபுண்யவல்லவன் மற்றும் வல்லப பதூர்ஜெயா"

இரண்டாம் விக்கிரமாதித்யனின்

கைலாசநாதர் கோயில் கல்வெட்டின் தமிழாக்கம்

•

சாளுக்ய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்யன் அரசவை கூடியிருந்தது!

அமைச்சரே படைத்தளபதிகளே பெருமக்களே நம் சாளுக்யசாம்ராஜ்யத்தின் பெருமைமிகு நகரான வாதாபியை எரித்து ஈடில்லா வெற்றி கொண்டதாக பல்லவன் நரசிம்ஹன் தாத்தா புலிகேசியின் செம்பாறைப்பெருமிதமான வாதாபிக்கோட்டைக்கு அடிவாரத்திலேயே செதுக்கியிருக்கும் கல்வெட்டுச்செய்தி அரசனென் மனதை உறுத்திக்கொண்டேயிருக்கிறது!

சாளுக்கியசாம்ராஜ்ய பலமென்னவென பல்லவரோடு மற்றவரும் அறியவேண்டும்! அதுவுமிந்த விக்ரமாதித்யனை வெல்வது அவ்வளவு சுலபமில்லை என்பதும் பல்லவதேசத்துக்குப் புரியவேண்டும்! உங்கள் ஆலோசனைகளைக் கூறுங்கள் சிறந்த யோசனைகளுக்கானப் பரிசில்களோடு என்னிருசெவிகளும் காத்துக் கொண்டிருக்கின்றன

அமைச்சர் அநிவாரிபுண்யவல்லவன் தொண்டையைச் செருமிவிட்டுத் தொடங்கினார்:

இரண்டாம் புலிகேசிக்குப்பின் ஆட்சிக்கு வந்த எங்கள் யுவராஜா விக்ரமாதித்தர். அவர் தம் நல்லாட்சியில் சாளுக்கிய நாட்டை மீண்டும் நிலைப்படுத்தி பல்லவர்களை முறியடித்தே தீர வேண்டும் ...மேலும் பல்லவர் பெருமிதங்கொள்ளும் பெரு நகராம் காஞ்சியையும் கைப்பற்றினார். பல்லவர்களிடம் தனது தந்தை அடைந்த தோல்விக்கு எம்மாமன்னர் விக்ரமாதித்தர் பழிதீர்த்துக் கொண்டே தீரவேண்டும், பல்லவதேசத்துத் தலைநகரான காஞ்சியைக்கைப்பற்றுவதைக் காட்டிலும் அவர்களின் துறைமுகநகரான மஹாமல்லபுரத்தை கைக்கொள்வதே சாலச்சிறந்ததெனக் கருதுகிறேன்

அடடே! செவிமடுக்கவே தனி ருசியானத் தகவலாக இருக்கிறதே! தலைநகரத்தைக்காட்டிலும் சிறுதுறைமுக நகரொன்றிற்குச் சிறப்புக்கூடுமோ?

சாளுக்யராஜனுக்கு சற்றே விரிவாக பகரவிழைகிறேன்! சுமார் இரண்டு நூற்றாண்டுகள் தக்காணத்தின் பெரும்பகுதியை ஆட்சி செய்தவர்கள் சாளுக்கியர்கள். பின்னர் இராஷ்டிரகூடர்களின் வலிமை பெருகியது. மேலைச் சாளுக்கியரின் வழிவந்தவர்கள் வெங்கியின் கீழைச் சாளுக்கியர்களும் கல்யாணிச் சாளுக்கியர்களும் ஆவார்கள். மேலைச்சாளுக்கிய மரபைத் தோற்றுவித்தவர் முதலாம் புலிகேசி. வாதாபி அல்லது தற்காலத்திய பாதாமியை தலைநகராகக் கொண்டு அவர் ஒரு சிறிய அரசைத் தோற்றுவித்தார். காஞ்சிபுரம் பல்லவத் தலைநகரமெனினும் அஃதோராலயங்கள் சூழ்ந்த அமைதிஸ்தலம்! சைவக்காஞ்சி.. ஜைனக்காஞ்சி.. புத்தக்காஞ்சி.. விஷ்ணுகாஞ்சியென பெயர்களால் பிரிந்துகிடக்கும் நகரம்! வெற்றியினவசரத்தில் சாளுக்ய வீரர்கள் எந்தக்கோயிலிலாவது நுழைந்து விபரீதம் விளைத்தாராயின் பொறுப்பேற்கவேண்டியது நாம்தான்..! விக்கிரமாதித்யருக்கது பெருமைச்சேர்க்காது..வரலாறும் மன்னிக்காது

மிகச்சரி..! மஹாமல்லபுரம் குறித்தேதோ குறிப்பிட்டீர்களே..!

மஹாமல்லபுரம் பல்லவத்துறைமுகப்பட்டினம்! காஞ்சிக்குக் கிழக்கே குடாக்கரையில் நரசிம்மப்பல்லவன் சமைத்த அழகியக்கடற்கரை நகரம்..! பாறைக்குடைவரைகள்.. ஒரேக்கல்லில் செதுக்கிய அற்புதச்சிற்பங்கள். முக்கியமாய் கடற்கரைக்கோயில்..! ஆகா..! எதிரிதேசந்தான்.. ஆனாலுமவற்றின் அழகின் பாவாயிரம் பாட நாவாயிரம் வேண்டும். சுருங்கச்சொல்லினஃது பல்லவக்கலைநகரமெனில் மிகையாகாது !

குடைவரைகளெனில் புலிகேசித் தாத்தாவின் புகழ்ப்பாடும் பாதாமிக்குகைச்சிற்பங்கள் போலவா..?

ஆஹா..! மன்னர்மன்னன் புலிகேசிச்சக்கரவர்த்தி கல்காதலன்..கலாரசிகன்.. சக்ரவர்த்திப் பெருமானின் பெரும்புகழ்க்குறித்து அறிவார்ந்த இவ்வவையில் கூறியே ஆகவேண்டும்

சாளுக்கிய மரபின் முக்கிய ஆட்சியாளர் இரண்டாம் புலிகேசி. ஐஹோலே கல்வெட்டு அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றிய விவரங்களைக் கூறுகிறது. பனவாசி கடம்பர்களையும், மைசூர் கங்கர்களையும் எதிர்த்துப் போரிட்டுத் தனது ஆதிக்கத்தை அவர் நிலைநிறுத்தினார். கங்க அரசர் துர்விநீதன் அவரது மேலாண்மையை ஏற்றுக்கொண்டு தனது மகளையும் இரண்டாம் புலிகேசிக்கு மணமுடித்துக் கொடுத்தார். நர்மதையாற்றங்கரையில் ஹர்ஷவர்த்தனரை முறியடித்தது இரண்டாம் புலிகேசியின் மற்றொரு மகத்தான சாதனையாகும். தென்னிந்தியாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஹர்ஷரின் எண்ணத்தைச் சிதைத்தவர் இரண்டாம் புலிகேசி. பல்லவர்களுக்கெதிரான தனது முதல் படையெடுப்பில் அவர் வெற்றிபெற்றார். ஆனால் காஞ்சிக்கருகில் முதலாம் நரசிம்மவர்மனிடம் படுதோல்வியைத் தழுவினார். பின்னர் சாளுக்கிய தலைநகரம் வாதாபி பல்லவர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. இரண்டாம் புலிகேசியின் ஆட்சிக் காலத்தில் சீனப்பயணி யுவான்சுவாங் அவனது நாட்டிற்கும் வருகை புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

பாதாமிச் செம்பாறைகளைக் குடைந்த சிற்பங்களுக்கு ஏழேழுலகங்களுமீடாகாது..! புலிகேசி கலைத்துவம்கண்டு மகேந்திரபல்லவப்பூனை அங்கங்கே சிறுக்குன்றுகளில் குடைவரைகளை உருவாக்கியதாய் உளவுத்தகவல்! ஆனாலெதுவுமே பாதாமியின் பிரம்மாண்டத்துக்கு முன்னால் நிற்க முடியாததனால்..

ஆர்வமிகுதியாகிறதே.. விரைவாக விவரியுங்களமைச்சரே..!

தலைநகரை தாக்குவதைவிட நாம் கலைநகரைக் கவர்வதேச்சிறந்ததென்பது அடியேனின் எளியக்கருத்து

தளபதி வல்லபபதூர்ஜெயா தங்களின் கருத்தையுங் கூறலாமே..!

அமைச்சர் பெருமான் கருத்திலிருந்து சற்றே மாறுபடுகிறேன் அரசர்க்கரசே !

இதுபுதிது..விளக்குங்கள்..

விக்கிரமாதித்யச் சக்ரவர்த்தியின் வீரபலம் உலகறிந்ததே,,! பல்லவக் கலைநகரத்தைக் கைக்கொள்வோம்.. முன்னதாகத் தலைநகரத்தையும் சாளுக்யசாம்ராஜ்ய வசமாக்குவோம் ஆணையிடுங்கள் வேந்தே! அடுத்தநொடியில் பன்றிக்கொடிப்பறக்கும்.. சாளுக்கியப்படை நடக்கும்.

தளபதி கருத்தே..என்கருத்தும்! சாளுக்கியப்படை புறப்படட்டும்! தேவியரிருவரோடும் காஞ்சிக்களத்துக்கு நானே தலைமையேற்பேன்!

அப்படியாயின் சாளுக்ய வெற்றி சாஸ்வதமானது..!

பாதாமியெனும் வாதாபிக்கும் பல்லவக்காஞ்சிக்கும் இடையில் பலகாதம்! சாளுக்யத் தேசத்தின் வெயில்தாண்டி, சித்திரதுர்காவின் கோட்டை கண்டு, கோலார்நகரின் குளிர்மையுணர்ந்து காஞ்சி புகுந்தது சாளுக்ய சமுத்திரம்!

ஆஹா! பல்லவத் தலைநகர் காஞ்சியினழகைக் கண்டவர் விண்டிலர்..! விண்டவர் கண்டிலர்..! மருதநிலங்களும் மாடமாளிகைகளுமாய் நிறைந்த ஆறுகள் பரப்பளவு மாநகரமிது! பாலாற்றங்கரையில் மேற்கிலிருந்து கிழக்கே தனுசைப்போல் வளைந்து மேற்கில் மேடாகவும் கிழக்கில் பள்ளமாகவும் அமைந்திருக்கிறது! ராஜவீதிகளோ தேரோட, படைசெல்ல ஏதுவாய் அகன்றவீதிகள்! பாதுகாப்பான கற்கோட்டை காஞ்சி மாநகரத்துக்குக் காவலரணாய் மதில்கள்! 'மதிற்கச்சி' எனத் தெரியாமலா புகழ்ந்தது தேவாரம் ..!

த்ரிலோக மஹாதேவி அன்றொரு பாடல் இசைத்தாயே நினைவிருக்கிறதா..?

மறக்கமுடியுமா எஜமானரே

'ஏறி இரண்டும் சிறகா, எயில்வயிறாக
காருடைய பீலி கடிகாவாநீர் வண்ணன்
அத்தியூர் வாயா.. அணிமயிலே போன்றதே
பெற்றோரான் கச்சிப் பொலிவு'

அடடாவோவடடா! பகைவரின் நகரங்களை விடவும் அவர்களது கலையும்இலக்கியமும் ஆகவொண்ணாவழகன்றோ!

உள்ளதரசே! அலங்காரமிக்கப் பாடலைத் தந்தது 'தண்டியலங்காரம்' எனுந்தமிழ்நூலே!

உண்மையுண்மை..! மிக்கத் தேர்ச்சியுடனும் கூர்ந்த அறிவுடனும் அமைக்கப்பட்ட நகர அமைப்பு! நாம்கூட வாதாபியில் இதுபோலொரு நகரை நிர்மாணிக்க வேண்டும் சரித்திரமதைப் புகழவேண்டும் ..!

கலைவேந்தர்தம் கனவு நனவாகட்டும்! ஏகாம்பரநாதர் கோயிலில் சேர்ந்த தேரோடும் வீதிகளும் காமாட்சியம்மன் கோயில் தேரோடும் வீதிகளும் ஒன்றுக்கொன்று இடர்ப்படாமல் அமைந்துள்ள முறை யாவரும் வியந்து பாராட்டத்தக்கது !

அதெல்லாம் ஏற்புடையதுதான்.. பட்டத்தரசிகள் இருவருக்கும் ஒரு பணி! பல்லக்கு ஏறுங்கள் காஞ்சியைத் தரிசியுங்கள்.. பல்லவத் தலைநகரின் முக்கியச் சிறப்புகளை முத்திரைகளாய்க் கூறுங்கள்.. லோகமஹாதேவி.. அதோ காண்பதென்ன..? ஆலயக்கோபுரம் போலுள்ளதே.. சரியான ஆட்களை அனுப்பி என்னவென்று விசாரிக்கச்சொல்!

எம்மவர் சிறந்த படைத்தலைவர் மட்டுமல்ல கலைரசிகன் என்பதையும் பட்டடக்கல் சிற்பங்கள் பறைசாற்றுகின்றனவே..! எஜமானருக்கு நற்செய்தி விரைவிலேயே வரும் !

நல்லது.. தளபதியெங்கே காஞ்சியைச்சுற்றி சாளுக்யப்படைகளை நிறுத்தச் சொல்லுங்கள்..! சிறாருக்கும் பெண்களுக்கும் சாளுக்யவீரர்களால் சிறுதீங்கும் ஏற்படலாகாது..! இது அரசக்கட்டளை..!

விக்ரமாதித்யன் மெய்மறந்து நின்றான்! ஆச்சர்யத்தில் தானொரு மன்னன்.. அதுவும் மகா சாளுக்கியப்பேரரசன் என்பதையும் மறந்து தன் கரமொன்றினை இன்னொன்றால் கிள்ளிப்பார்த்துக்கொண்டான்.

முதலில் சாளுக்கிய தேசத்து ஒற்றன் கூறியபோது அவன் நம்பவில்லை.. சற்றே கூடுதலாய் ஒற்றன் உயர்த்தி வர்ணிக்கிறானென்றே நினைத்தான்.. போர்க்களங்களுக்கும் பிரியாமலுடன் பயணிக்கும் பட்டத்தரசிகள் கூறியதும் கொஞ்சம் யோசித்தான் ..!

"பூக்களிலே மல்லிகை..புருஷர்களில் விஷ்ணு
பெண்களில் அரம்பை.. கரங்களில் காஞ்சி"

ஆஹா! வெறுமனே பாடி வைத்த கவிதையாயிது..? கூடுதலாயொரு வரியும் சேர்த்து இருக்கலாம்! 'ஆலயங்களில் இராஜசிம்மேஸ்வரம்'.. கற்களின் வழியாகக் கவிதை படைத்திருக்கும் பல்லவராஜசிம்மனை எவ்வளவு வணங்கினாலும் தகும்..!

'ஏலவார்க்குழல் இறைவிக்கும் எம்பிரான்தனக்கும் பாலனாகிய குமரவேல் நடுவரும் பான்மை என பிறையளவு சூடிய பித்தன் சோமாஸ்கந்தர் வடிவுடைச் சிற்பத்தைச் கண்ணுறும்போதே மயக்குகிறதே!

இந்தச்சிற்பங்கள் மஞ்சள் பாறைகளில் வடித்ததா..? அன்றி பொன்னைக் குழைத்துருக்கி வனைந்ததா..? விக்கிரமாதித்யனுக்கு இன்னமும் ஆனந்தமாச்சரியம் அடங்கவேயில்லை!

நீண்டமதில்களால் சூழப்பட்ட கோயில்! உயர்ந்த கோபுரமும் விமானமும் காணக் கண்கொள்ளாக்காட்சி! மல்லையின் கடற்கரைக்கோயில் தொடங்கிப் பல்லவரின் கல் கட்டுமானப்பணிகள் கச்சியின் பெருமிதமாய்த் தகதகக்கிறதே! அடடாவோவடடா! இஃது பூவுலகின் கைலாசமோ! அழகிய கந்தர்வவிமானமொன்று காஞ்சிமண்ணில் தரை யிறங்கிவிட்டதோ.. என்னதானிது? இராஜசிம்மேஸ்வரத்துச் சிற்பங்களுக்கும் ஓவியங்களுக்கும் கடும்போட்டி நிலவுகிறதே..!

ஓவியப்பாவையரைக் காவியம் பாடப் புலவரெவரும் பூமியில் பிறந்திருப்பாரோ..? துவாதச ஆதித்யர்.. ஏகாதச ருத்திரர்..! எங்கிருந்து வந்தன இத்தனை யாழிப்படைகள்..? சிங்கமுகத்தூண்கள்?

'புருவமசைந்தால் பார்த்திபர் குனிவார்
ஹர உருவம் அவன் புன்முறுவல் உருவம்
அதிமானம் அதி அற்புதம்
கைலாச எழிலைத் திருடி புகழுடை
ராஜசிம்மேஷ்வரத்தில் வித்தேன்
வானைத்தொடும் இச் சந்நிதானத்தில்
என்றும் வாழ்க விருஷாங்கன்

கல்வெட்டில் கவியெழுதி வைத்திருக்கும் கலைபிரம்மா விசித்திரசித்தன் மகேந்திரவர்மரே கலாசமுத்திரன் ராஜசிம்மா.. இது பிரம்மாண்டப் பிரமிப்பு..! மற்றெந்தக் கோயிலிலுமில்லாப் பல்புதுமைகளைக் கல்கவிதைகளை இக்கோயிலில் கண்டேன்..! படையெடுத்து வந்தவனையே ஜெயங்கொண்டப் பேரழகை எம்மொழியில் எவ்வெழுத்தில் வர்ணிப்பேன்! யாரந்தச் சிற்பிகள்..? எவரந்தக் கலைஞர்கள்..? எங்கேயந்த வித்தக விரல்கள்? கல்லில் செய்தாரோ..!? பொன்னில் செய்தாரோ..!?

"ஸ்ரீவல்லப விக்கிரமாதித்யன், நரசிம்மவர்மனின் புகழை அழித்தான், மகேந்திரனின் வலிமையை முறித்தான், ஈஸ்வரனை (பரமேஸ்வர வர்மனை) தன் அரசியல் அறிவால் வீழ்த்தினான், தென்னகத்தின் பேரழகியான காஞ்சிபுரம் என்னும் கன்னியின் ஒட்டியாணத்தை இறுகப் பிடித்து அவளைக் கைக்கொண்டான். 'ரணரஸிகனான' (போர்களில் விருப்பமுள்ள) அவன் தன்னுடைய வலுவான தோள்களால் பல்லவர்களை வென்றான், மாமல்லனின் குடும்பத்தைத் தோற்கடித்த அவனுக்கு 'ராஜமல்லன்' என்ற பெயர் பொருத்தமானதன்றோ. ஈஸ்வர போதிராஜனை (பரமேஸ்வரவர்மனை) தோற்கடித்துப் பெரும் கோட்டைச் சுவர்களை உடையதும் உடைக்கக் கடினமானதும் ஆழமான அகழிகளை உடையதுமான தென்னகத்தின் ஒட்டியாணமான காஞ்சி நகரைக் கைப்பற்றினான் என்று செப்பேட்டில் புகழாரம் சூட்டுகின்றனர். ஆனால் எனக்கதில் உடன்பாடில்லை லோகமஹாதேவி!

அதேநேரம் சாளுக்யத்தின் காலாதீதத்தாகம் ஜெயித்தது என் மூத்தோன் இரண்டாம் புலிகேசிமன்னரின் மங்கிய புகழ் காஞ்சியைக்கைக்கொண்ட வெற்றியால் இழந்த கண்ணியம் மிகுந்தது த்ரிலோஹா ! என் முன்னோரின் அவமானம் இந்தப்பாலாற்று நீரில் கரைந்தது.. இரண்டாம் விக்கிரமாதித்யன் இன்று புதிதாய்ப் பிறந்தான்.. மகா உற்சாகமாக உணர்ந்தான் என்னினிய தேவதைகளே உமக்கென்ன வேண்டும் கேளுங்கள்..!

வெற்றியை சுவைக்கும் விக்கிரமாதித்யர்க்கொரு நற்செய்தி! நம் சாளுக்ய சமுத்திர சண்டமாருதத்தின் வீச்சறிந்த பல்லவமன்னன் நந்திவர்மன் தலைநகரிலிருந்தே தப்பியோடிவிட்டதாய் ஒற்றர்செய்தி..

மாமன்னருக்கு மற்றுமொரு மகாசெய்தியுமுண்டு..!

கூறுங்கள் செவிகள் திகட்டாதவண்ணம் தித்திப்பாய்க் கூறுங்கள்..

பல்லவமன்னனின் மதிப்புமிக்க போர்முரசான 'கடுமுகா..' போரிசைப் பேரிகையான ' சமுத்திரகோஷா.. தண்டாயுதம்.. வெற்றியை மட்டுமே தருகின்ற வேழப்படை.. விலைமதிப்பில்லா நவமணிகள்.. பொற்குவியல் எனப் பொக்கிஷம் பலவும் சாளுக்யச் சக்கரவர்த்தியின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கப்படுகிறது

கொண்ட பொருளனைத்தும் இந்தக் கைலாசநாதருக்கே சேர வேண்டும். கடுகளவும் வேண்டாம்.

உத்தரவு அரசே..

தேவரீர் ராஜசமூகத்துக்கு லோகமஹாதேவியின் சிறுவிண்ணப்பம்.. இதுகாறும் இல்லாப் பெருவெற்றியைத் தாங்களடைந்துள்ள சிறப்பான தருணமிதில் தங்கள் பயணத்தில் நாங்களும் உடனிருப்பது எங்கள் இருவருக்கும் பெருமிதத்தருணம்..!

விண்ணப்பத்தை வெளிப்படையாகக் கூறு லோகமஹா..!

ராஜசிம்மேஸ்வரத்தை நிர்மாணித்த சிற்பி சூத்திரதாரிகுண்டா சாளுக்யப் படையின் பாதுகாப்பில் தானிருக்கிறார்..

சரி பிறகு..?

வித்தக கலைஞன் அவரை தாங்கள் விடுவிக்க வேண்டும்.. நம் கற்பனை கலைநகரமான பட்டடக்கல் கோட்டத்தில் இதே வடிவமைப்பில் விருபாக்ஷருக்கு ஒரு கற்றளி அமைக்க ஒப்புதல் தர வேண்டும்.

ஆகா நல்ல யோசனை..! திரிலோகமாதேவிக்கு ஏதும் தேவையுண்டா..?

அக்கைக்கு விருபாக்ஷா எனில் தங்கைக்கு மல்லிகார்ஜுனர் கற்றளி..! அதே சிற்பியின் தேர்ந்தகரங்களால் நிர்மாணிக்கப்பட வேண்டும்.. பட்டடக்கல் எம்மன்னவரின் புகழ்பாட வேண்டும்

ஆகச்சிறந்த யோசனைகள்..! காஞ்சியை க் கைக்கொண்டதன் நினைவாகப் பட்டடக்கல்லில் ஒரு விஜயஸ்தம்பம் அமைக்கலாம் அமைச்சரே..! பல்லவன் நந்திவர்மனுக்கும் செய்தியொன்றை அனுப்புங்கள் இழந்த தேசத்தைப் பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள்.. நமக்குத் தேவை சிற்ப விற்பன்னர்கள்தாம்..! யுத்தமென்பது படையால் வெல்வது அல்ல.. கலையால் வெல்வதும்தான் என்பதை வரலாறு புதிதாயெழுதட்டும்.. நாள் வரையிலான போர்களில் இதுவரை எந்த மன்னரும் கையாண்டிராத நன்னயப் பண்பை விக்கிரமாதித்ய சாளுக்யன் தொடக்கி வைத்தான் எனச் சரித்திரம் பதிவு செய்யட்டும்..

காஞ்சி மாநகரத்துக்கு காயமேதுமில்லை.. எளிய மக்களுக்கோ எவ்வித அழிவுமில்லை.. என்தந்தை கொள்ளையிட்ட பொன்மணிகளைக் கூட இவ்வாலயத்துக்கே திருப்பி அளிக்கிறேன்.. இல்லாதவர் யாவருக்கும் இப்பொருள்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும். குருதி குடித்து மட்டுமல்ல நன்னயம் செய்தும் ஜெயங்கொள்ள முடியும்.. கொலைகள் ஏதுமின்றி கலைகளால் ஜெயித்தான் விக்கிரமாதித்யன் என்ற செய்தியையும் கற்களில் பொறியுங்கள்.. காலம் வாசிக்கட்டும்.

தளபதி.. அந்த சிற்பியையும் அவரது குழுவினரையும் அரசமரியாதையோடு கௌரவத்துடன் பல்லக்கில் பட்டடக்கல் அழைத்து வாருங்கள் காஞ்சியைப்போல.. மாமல்லை போல.. பட்டடக்கல்லும் கலைநகரமாய் சிறக்கட்டும். ●

# 'வானாந்திரம்' எனும் பொதுமைப் பூரணம்

கோ. பாரதிமோகன்

"வானம் எனக்கொரு
போதிமரம்
நாளும் எனக்கது
சேதிதரும்"
என்றிருப்பார், கவிஞர் வைரமுத்து.

வானம் மிக உயர்ந்தது; அல்லது,

உயர்ந்தது எதுவோ அதுவே வானம் என்பதேயே சாலச்சிறந்தக் கூற்றெனக் கொள்கிறேன் நான்.

குறளினோர் அதிகாரத்தை, வான் சிறப்பு என விளிக்கிறது, வள்ளுவம்.

வானம் என்பது சொர்க்கத்தின் குறியீடு என்று முன்பொருமுறை எழுதியிருக்கிறேன்.

சொர்க்கம் என்பது காற்றைப்போன்ற ஓர் உணர்வுநிலையின் அரூப இருத்தல்!

அந்த அரூப இருத்தலை இறைமை என்றும் சொல்லலாம் வானம் என்றும் சொல்லலாம்.

எம்மதம் எனினும் இறைவணக்கமும் பிரார்த்தனையும் வான் நோக்கி இறைஞ்சுவது அதனால்தான்.

உண்மையில் வானம் என்பது என்ன?

அது விரிந்து பரந்த எல்லையின்மை.

வானமே எல்லை என்பதெல்லாம்,

அளவைக்குள் அடக்குகிற சொல்லாட்சி.

சொல்லைக் கடந்தும் பொருள் படரும்.

இக்கவிதைத் தொகுப்பு, வானத்தைப் பாடுபொருளாக்கிக் கொண்டு அதை சொற்களால் கொண்டாடியிருக்கிறது.

அதேசமயம் இதில் சொற்களைக் கடந்த பொருளிலும் வானத்தை விரித்துவைக்கிறார், கவிஞர் சுகபாலா. அது மொழிவழி வானாந்திரமாய் விரிந்திருக்கிறது.

வானம் எங்கிருந்து தொடங்குகிறது?

தரைக்கு மேலிருந்தா? அல்லது நம் தலைக்கு மேலிருந்தா?

பள்ளத்தில் வானம் இல்லையா?

இருக்கிறது! ஆனால் அது தட்டைப் பார்வைக்குப் புலப்படுவதில்லை.

பள்ளம் மேடு என்பதெல்லாம் வெறும் மாயை. அது ஒரு காட்சிப்பிழை.

உயரத்தில் பள்ளமும் பள்ளத்தில் உயரமும் ஒரு சமநிலைப் பூரணம்.

ஜென் பார்வை அதை சாத்தியப்படுத்துகிறது.

ஆழத்தின் உயரம் என்று ஒரு சொல்லாட்சியை தந்திருப்பான், லெபனானியக்கவி கலீல் ஜிப்ரான்.

அப்படியெனில் உயரத்தின் ஆழம் என்றும் சொல்லலாம்தானே..?




கவிஞர் சுகபாலாவும் அப்படி ஓர் ஆழத்தின் உயரத்தை தம் கவிதையில் கதைக்கிறார்:

நிலவைத் தேடி
கிணற்றுக்குள் குதித்தேன்
என்று.

பிறகென்ன.?

அவர் தொடர்ந்து சொல்கிறார்...

அங்கேயும் ஒரு
வானமிருந்தது

ஜென், முழுக்க முழுக்க இயற்கை.

இயற்கைக்கு மேலுமில்லை கீழுமில்லை;

பள்ளமுமில்லை மேடுமில்லை.

ஜென் ஒரு சமத்துவ விருட்சம்.

அதன் கிளைகள் வானத்தின் வேர்கள்!

அதன் வேர்கள் மண்ணுக்குள் விரியும் கிளைகள்!

அதன் பொதுமைப் பூரணம் ஒருபோதும் தேய்வதுமில்லை; வளர்வதுமில்லை.

தளிர் சருகு எனும் பேதமும் அதற்கு இல்லை.

அதனால்தான்,

**"உதிர்ந்த சருகிற்கும்
துளிர்க்கும் தளிருக்கும்
வெவ்வேறாய் இருப்பதில்லை
வானம்"**

என்று கவிஞரால் பேதமறு தரிசனம் கொள்ளமுடிகிறது.

**"கூரை எரிந்துபோனதால்
நன்றாகத் தெரிகிறது
நிலா"**

என்றொரு ஜென் ஹைகூ கவிதை உண்டு.

அது இயற்கையின் தரிசனத்திற்கு முன் எதுவும் பெரிதில்லை என்பது குறித்தானது.

ஒரு வேலை எரிந்துபோனது

நான் ஆகக் கூட இருக்கலாம்.

அகம்பாவம் அழிந்தால் ஆன்ம தரிசனம் கிட்டும் அல்லவா!

**"கவிஞர் சுகபாலாவோ,**
**கூரை வேய்ந்த பிறகுதான்**
**அந்நியமானது**
**வானம்"**

என்கிறார்.

ஆகப்பெரும் அரசியல் கவிதை இது.

இரண்டு கவிதையிலும் காணப்படுவது ஒரே கூரைதான். ஆனால் நிலைப்பாட்டளவில் பண்பும் கோணமும் வேறு வேறு

கூரை, வேலி, சுவர் எனத் தடுப்புகளை சுற்றி எழுப்பிக்கொண்டு, பிற மனிதர்களை அண்டவிடாது தனியனாகிவிட்ட மனிதனிடமிருந்து

வாழ்க்கை என்கிற வானம் விலகி அந்நியமாகிவிட்டது.

வாசகரின் மொழிப் புரிதலுக்கேற்ப கவிஞரின் கூரை, வானம் எனும் படிமங்கள் குறியீடுகளாகி கவிதையை பல்வேறு கோணங்களில் படர்த்திக் கொண்டேயிருக்கும்.

இது நகல்களில் உலகம்.

நகலை நிழல் என்றும் நவிலலாம்.

மனிதன் நிழல்களின் பிரதியாகி வெகுகாலம் ஆயிற்று.

அவன் ஆடையையும் ஆபரணத்தையும்

நிழலால் வரித்து நிஜத்தைத் தொலைத்து விட்டான்.

நிழலைத் போர்த்துக்கொண்டு நிம்மதியாய் உறங்கும் அவனுக்கு கனவுகூட நிஜமானதாக இல்லை.

திரையில் விரியும் நிழலை தலைமைப்படுத்தத் துடிக்கும் அவன்,

தன்னைக் கூட அசலாக வைத்துக் கொள்வதில்லை.

வானத்தைப்பற்றிய கனவில் அவன் மண்ணைக் குடைந்து கொண்டிருக்கிறான்.

சிறகை விரித்து விண்ணுயரும்

பறவையைச் சுட்டி,

**நிழலைத்**
**தூக்கிச் சுமப்பதில்லை**
**வானம் தொடும் பறவைகள்**

என்கிறார் கவிஞர்.

அந்த நிஜம் நம் நெஞ்சைச் சுடுகிறது.

அன்பு என்பது மூல நிஜம்.

அது முழுமுற்றாய் தாய்மையைக் குத்தகைக்குக் கொண்டிருக்கிறது.

காலக்கெடு என்பது கனவுக்குக்கூடக் கிடையாது.

தாய்மையின் நிழலும் கருணையைக் கசியவிட்டபடியே இருக்கும் என்பதைச் சொல்வதற்கு இங்கே அனேகம் உள்ளன.

தாய்வேடம் இட்டுவிட்டால்
ஆண் மார்பிலும் அமுதம் சுரக்கும்!
அம்மா என்று அழைத்த வாய்
ஒரு பிடி அன்னம் அடைவது திண்ணம்!
அன்னையுரு கொண்ட மேகம் ஒன்றை
வானத்தில் கண்டுவிட்ட கவிஞர்,

**குழந்தைக்குச் சோறூட்டும்**
**அம்மாவின் உருவம்போல்**
**தெரிந்தது மேகம்**
**அப்போது என் வாயிலும்**
**சில பருக்கைகள் ஒட்டியிருந்தன**

என்று சொல்கிறார்.

கவிதையை உச்சரித்துவிட்டுப் பாருங்கள். உங்கள் வாயிலும் அமுதம் வழிந்திருப்பதை உணரலாம்.

கண்கள் இரண்டுதான். ஆனால் அவை காணுகின்ற காட்சி எண்களுக்குள் அடங்குவதில்லை.

அடங்குவதில்லை என்றாலும் கூட பார்வைக்கான கோணங்கள் உண்டு.

யார் எந்தக் கோணத்தில் பார்க்கிறார்களோ அக்கோணத்தின் வடிவ பண்பில் அது, உயர்வு தாழ்வென காட்சியுருக்கொள்ளும்.

பூமியிலிருந்து வானத்தைப் பார்பவர்கள் மத்தியில் வானத்திலிருந்து வானத்தைப் பார்த்திருக்கிறார், கவிஞர் சுகபாலா.

தன்னை ஒரு வானம் என்று விளங்கிவைத்திருக்கிற அவரால்,

**"தொட்டுவிடும் தூரத்தில்**
**வானம் என்றார்கள்**
**என் உயரம்**
**அளந்து பார்க்கிறேன் நான்"**

என்று சொல்லமுடிகிறது.

இது ஒரு வகையில் தன்னைத் தானறிதலுமாகும்.

பொதுவெளி என்பது சுயத்தின் உள்ளே

ஒரு விதையைப்போல் கிழிபடவேண்டும்.

விதையின் கனவு முட்டித்தள்ளி முட்டித்தள்ளி விண்ணில் முளைத்துவிடுகிற நன்னம்பிக்கை வரிகள் அவை.

தன்னைத் தானறியும் துலாக்கோல் கொண்ட சுய மதிப்பீடு ஓர் உயரம்.

அது வ(ள)ரும் தலைமுறைகள் கவனங்கொள்ளத்தக்கது.

கவிஞர் சுகபாலாவின் இந்த வானந்திரம் கவிதைத் தொகுப்பை தத்துவச் சாயல் படர்ந்த கவியாந்திரம் என்றால், வானம் இன்னும் கொஞ்சம் விசாலப்படும் என்பதில் ஐயமில்லை. ●

வானாந்திரம் (கவிதைகள்)
ஆசிரியர்: சுகபாலா
9597595919
அறம் பதிப்பகம்
தொடர்புக்கு: 9150724997
முதல் பதிப்பு: மே 2025
பக்கம்: 64
விலை: ரூ.100/

**கவிதை**

# இயற்கை கவிதைகள்

## மலரும் காலம்

அப்ப
நானும் மீனாவும்
கை கோத்துக்குனு நிக்கசொல்ல
”ஒரு கொடம் தண்ணி ஊத்தி
ஒரே பூ பூத்தது
ரெண்டு கொடம் தண்ணி ஊத்தி
ரெண்டே பூத்ததுன்னு”
உள்ளப் பூந்து வந்து
ஒவ்வொருவாட்டியும்
நிமுந்து பாப்ப.

இன்னாத்துக்குனு தெரில
அது எனுக்கு புடிச்சிச்சி.

ட்ராக்டர் வண்டியில கூரப் பொடவயோட போவும்போது
புளியாமரத்தாண்ட மறஞ்சி நிக்கச் சொல்ல
அதேபோல நிமுந்துப் பாத்துட்டுப் போன

மரத்து மேல கையால அறஞ்சிக்குனு
அய்யோன்னு
கேவுன என்ன
நானேதான் தேத்திகினன்.

எம்மாங் கால ஆகிப் போச்சி...
ஒட்டுத் திண்ண கதியேன்னு பேரம்
பேத்திங்களப் பாத்துக்குனு
ஆஞ்சி ஓஞ்சி ஒக்காந்துங்குறன்.

தோ
செத்துட்டுதா
சேதி வந்து ஊரே கௌம்புது.

நொப்புரான என்னெல ஆவாது
நா வர்லன்னுட்டன்.

சாவற மொகமா அது.

ஒரு கொடம் தண்ணி ஊத்தி..

## நிலா கும்பல்

வர்லாமா
வெயிட்டிஸ்

வரலாமா...
ஜூட்டிஸ்...

மூல முடுக்கலாம் தேடிப் பாத்து
நெலாவ ஒன்னொன்னா
நாங்க எண்ணிப்பாத்து அழிக்கசொல்ல
மூஞ்சிலாம் இருட்டிக்கினு வந்துட்சி
ஓங்களுக்கு

கடக்கால் பள்ளத்துல,
பூசினிக் கொடிக்கி கீழனு
அங்கங்க கண்டுபுட்ச்சும்
அத நீதான் வெச்சிருப்பனு
கலைக்காம வந்துட்டன் நானு.

எங்க சைடு வந்து
நா வெச்ச நெலாக் கும்பல
நீ ஆக்காட்டி வெரலால வெட்டி
ஒன்னொன்னாச்
சுண்டித் தள்ளும்போது
அற நெலா,
கா நெலா,
தூள் நெலாவா செதறிம் போவுது.

கண்ல படற எடத்துல வெச்சதே
நாந்தான்ற நெனப்புல
சிரிச்சிக்குனு இருந்த என்னப் பாத்து,

”ஏ அவன் ஒனும்னேதான் செய்றானு”
சாந்தி ஓங்கிட்ட குசுகுசுன்னு சொன்னா.

ஓதட்ட பூவரசன் மொக்காட்டம் வச்சி
வடக்கு தெக்கா ஒரு இழு இழுத்து
ம்க்கும்னு
ஒரு வெட்டு வெட்டிட்டுப் போன பாரு

அதாண்டி மவராசி
மொதலும் கடசியும்
நெலாவுல மின்னி
நான் பாத்தது.



## நடவு

ரெண்டு கைலயும்
நாத்து முடிச்ச வச்சிக்குனு
ஈர வரப்புல
நான் தடுமாறும்போது

ஒன் நமுட்டு சிரிப்புல
சேடைல
அல்லி பூத்துச்சி.

"இன்னும் பாதி மென ஏறல
சக்காளத்திகளுக்கு சிரிப்பப் பாரு"னு
ஆயா சாட பேச
இந்தாவாட்டி சேடைல நெருஞ்சி
பூத்துக்குச்சி.

நாத்த
மருமவள நெனச்சி வெய்யி
ஆயா
நல்லா ஆழம் புடிக்குனு
அவங்களுக்குப் போக்குக் காட்டிட்டு
ஒன் மெனயாண்ட வந்து
மேல சேறு தெறிக்கறாப்ல
ஒரு கட்டப் போடவும்

இதுக்குனே இர்ந்தவளாட்டம்
நிமுந்துப் பார்க்காமலயே
சிரிச்சபாரு
அப்ப
பச்சக் கட்னதுதான் எல்லாம்.

•

# தீர்க்கதரிசி

பாலகுமரன் பரிதி



அப்பா வீட்டில் இருக்கும் போதெல்லாம் கையில் ஏதோ ஒரு புத்தகம் இருக்கும்.

தொலைக்காட்சியை விரும்பி பார்க்க மாட்டார் செய்திகள் பார்ப்பார், வடிவேலு நகைச்சுவையை ரசித்துப் பார்ப்பார், இரவு நேரங்களில் சாப்பிடும்போது ஏதாவது ஒரு தொலைக்காட்சித் தொடரை பார்த்துக் கொண்டிருப்பார் மற்றபடி புத்தகம்தான் அவருக்கு முதல் மனைவி. ஏனென்றால் திருமணத்திற்கு முன்பிருந்தே அவருக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கம் இருந்திருந்தது.

அப்பாவுடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா ஒரு அண்ணன் ஒரு தம்பி இரண்டு தங்கைகள். அப்பாவின் அண்ணன் ராணுவத்தில் இருந்தார். சிறுவயதில் இருந்தே தாத்தா உட்பட குடும்பத்தில் அனைவருக்குமே புத்தகம் படிக்கும் பழக்கம் இருந்திருக்கிறது.

அப்பாவின் இளம் வயதில் உறவினர் ஒருவர் வீட்டிற்கு வந்தாராம் அப்போது வீட்டு வாசலில் அப்பாவும் சித்தப்பாவும் புத்தகம் படித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் வீட்டிற்குள் அத்தை இருவரும் புத்தகம் படித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் அடுப்பங்கரையில் ஆத்தா கையிலும் புத்தகம் இருந்திருக்கிறது. அந்த உறவினர் கேட்டாராம்,

"நாளைக்கு என்ன உங்க குடும்பத்துல ஏதாவது பரீட்சையா எல்லாரும் படிச்சு கிட்டே இருக்கீங்க". இந்த சம்பவத்தை பலமுறை சொல்லி அப்பா சிரித்திருக்கிறார்.

வீடு நிறைய புத்தகங்களை வாங்கிச் சேர்த்து வைத்திருந்தார் அப்பா. அதற்கென தனியாக ஒரு ராக்கை செய்து வைத்திருந்தார். அந்தப் புத்தகங்கள் எல்லாத்தையும் நிச்சயம் படித்திருப்பார். ஏனென்றால் காலை ஒரு புத்தகம்; இரவு ஒரு புத்தகம்; விடுமுறை நாள் முழுவதும் புத்தகம். அனேகமாக நண்பர்களிடம் புத்தகங்களை கடன் வாங்கிப் படிக்கும் அளவிற்கு புத்தக தாகம் தீராமல் இருந்தது அப்பாவிற்கு.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் சாப்பிட்டுவிட்டு கிரிக்கெட் விளையாடக் கிளம்பினேன் வாசலில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார் அப்பா.

"வெயில்ல ஏண்டா போற இந்தப் புத்தகத்தை எடுத்துப் படி"என்றார்.

"இல்ல நான் விளையாடப் போறேன்" என்றேன்.

"இப்ப உனக்கு பிரண்ட்ஸ் இருக்காங்க ஜாலியா சுத்துற. ஒரு காலத்துக்கு அப்புறம் இந்தப் புத்தகம்தான்டா நண்பனாய் இருக்கும்" என்றார். நான் சிரித்தேன்.

"உண்மையாதான்டா, ஒருநாள் நீயும் புத்தகம் வாங்கி சேர்ப்பபாரு"என்றார்.

அவர் சொன்னது போலவே நானும் புத்தகங்களைச் சேர்க்க ஆரம்பித்து விட்டேன். அம்மாவுக்கு தான் வருத்தம்.

இவனுமா!!!

வார இதழ்கள் அனைத்தும் எங்கள் வீட்டில் இருக்கும். மாத இதழ்களும் இருக்கும்.

நான் பாபி டீ கடைக்குப் போயி டீ குடிக்காமல் ஆனந்த விகடன்,குமுதம், குங்குமம், ரிப்போர்ட்டர், ஜூனியர் விகடன் என எல்லா புத்தகங்களையும் வாங்குவேன். அங்கே வடை தின்று கொண்டிருப்பவர்கள் என்னை வினோதமாகப் பார்ப்பார்கள். தனியா கடை போடப் போறான் போல என எண்ணியிருப்பார்கள், அப்பாவுக்காகதான்!

நான் ஆனந்த விகடனில் சினிமா விமர்சனம் படிப்பதோடு சரி. எனக்குப் புத்தகங்களின் மீது அதிக நாட்டம் இல்லாததால் என்னிடம் இலக்கியம் பேச நினைக்க மாட்டார். ஆனால் கவிதை எழுதி வாசித்துக் காட்டுவார். எனக்கு ஏதோ ஒன்று புரியும். புரியுதா புரியலையா எனக் கேட்க மாட்டார். அவர் என்ன அர்த்தத்தில் எழுதி இருப்பார் என்பது எனக்கு புரிந்திருக்காது என அவர் நினைத்திருக்கக் கூடும்.

சில கவிதைகள் இன்னும் என் மனதில் அப்பா குரலில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது,

"நீங்கள் தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் முக்கியமானவர்கள் என்று இறந்து மூன்றாம் நாளில் மறந்து போவார்கள்" என விரியும் கவிதையை இப்படி முடித்திருப்பார்.

"முக்கியமான கிரிக்கெட் நாளில் இறந்து போகாதீர்கள், சபிக்கப்படுவீர்கள் உங்கள் மகனாலயே"

அப்பா மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருந்தார். மருத்துவர்கள் "இனி வாய்ப்பில்லை; நீங்கள் வீட்டுக்கு அழைத்து ப்போய்விடுங்கள்," என்றார்கள். அப்போது மருத்துவமனை வரவேற்பறை டிவியில் இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.



எனக்கு அந்தக் கவிதையை நினைவூட்டியது.

பல்வேறு இலக்கியக் கூட்டங்களுக்கு செல்வார், நண்பர்கள் யாரும் புத்தகம் போட்டால் உடனே பணம் கொடுத்து வாங்குவார். மற்ற நண்பர்களுக்கு பரிந்துரைப்பார்.

புத்தகம் போடுவதெல்லாம் ஈசி இல்லடா என்பார்.

அப்பாவின் நண்பர் ஒரு முறை புத்தக வெளியீட்டு விழா வைத்திருந்தார். அந்தப் புத்தகத்தில் பெண்களைப் பற்றிச் சில அருவருப்பான வார்த்தைகளை அவர் எழுதி இருந்ததாக தெரிகிறது. அந்த விழாவில் அப்பா பேசும்போது,

"இந்தப் புத்தகத்தை நான் வீட்டில் கொண்டு படித்தால், என் மனைவியும் என் மகளும் என்னை என்ன நினைப்பார்கள்? நான் இந்த புத்தகத்தைப் படிக்க மாட்டேன் நீங்களும் படிக்காதீர்கள்", எனப் புத்தகத்தை வீசி எறிந்து விட்டு வந்தாராம்! ஆமாம் அப்பாவிற்கு அது போன்ற நச்சு இலக்கியங்கள் பிடிக்காது. ஆனால் அதுதான் டிரெண்ட் என்கிறார்கள்.

நிறைய கவிதை எழுதுவார் ஆனந்த விகடன் சொல்வனத்திற்கு அனுப்புவார் ஆனால் வெளிவராது. வாரம் வாரம் வெளிவரும் பெரும்பாலான கவிதைகள் குப்பைகளாகவே இருக்கும். அவற்றுடன் ஒப்பிடும்போது அப்பாவின் கவிதை மேம்பட்டதாகவே இருக்கும். அந்த கவிதைகளுடன் அப்பாவின் கவிதைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே எனக்குக் கூசும்.

ஒருமுறை அப்பாவின் நண்பர் "ஆனந்த விகடனில் எனக்குத் தெரிந்த ஒருவர் இருக்கிறார் அவரிடம் சொல்கிறேன். நீங்கள் கவிதை அனுப்புங்கள்; போட்டுவிடுவார்", என்றார்.

சிபாரிசு பண்ணி வாங்குறதுக்கு இது என்ன கவர்மெண்ட் வேலையா? அப்படி ஒரு கீழ்நிலையில் என் கவிதை இல்லை", எனச் சொல்லி விட்டார் அப்பா.

அப்பாவின் மறைவுக்குப் பிறகு கடையைத் திறந்து பார்ப்பதற்குச் சென்றேன். அப்பா அமர்ந்திருந்த அந்த நாற்காலி காலியாக இருந்தது, பாதி குடித்துவிட்டு வைத்த தண்ணீர் பாட்டில் இருந்தது, மேசை மீது ஒரு பேப்பரில் கவிதை எழுதி பேனாவை மூடாமல் வைத்திருந்தார் எடுத்து படித்துப் பார்த்தேன்,

"அலைபேசி ஒலித்துக் கொண்டே இருக்கிறது யாராவது எடுத்து நேற்றிலிருந்து நான் இல்லை எனச் சொல்லிவிடுங்கள்"

அப்பா தீர்க்கதரிசிதான்...

•

# கட+உள்=கடவுள் (பகுதி-2)

இடங்காண்கோட்டை சிவகுமார்

**ஆ) உரு கடப்பு :**

உட்புறமாகக் கடந்து செல்வதில் முன்பு மறை கடப்பு பற்றிப் பார்த்தோம். இப்போது உரு கடப்பு. இது உருவமுள்ள ஒரு பொருளைக் கடந்து செல்வது. ஓர் ஆப்பிள் பழம், ஒரு நாற்காலி, மேசை, பெரிய மலை, இரும்புக் குண்டு.... இப்படி ஏதாவது ஒரு பருப்பொருள்.

நாம் ஒரு கருங்கல்லை எடுத்துக் கொள்வோம். அதை இரண்டு துண்டுகளாக உடைப்போம். பின்பு நான்கு துண்டுகள், எட்டுத் துண்டுகள், பதினாறு துண்டுகள் என உடைத்துக் கொண்டே செல்வோம். சிறு மணல்துகள் அளவுக்கு வரும். அதையும் உடைப்போம். அறிவியலின் மிக உயர்ந்த கருவியை வைத்துக்கொண்டு மேலும் உடைத்துக் கொண்டே செல்வோம். ஒரு அணுத்துகள் எஞ்சும். அதையும் உடைத்தால் எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் என்ற விண் துகள்களாக மாறும். அந்த விண்துகளையும் உடைப்போம்.

இதைத்தான் அறிவியல் உலகம் நாற்பது ஆண்டுத் தேடலுக்குப் பிறகு 2012 ஆம் ஆண்டில் செய்து பார்த்தது . சுவிட்சர்லாந்தின் ஜெனிவா என்ற இடத்தில் பூமிக்குக் கீழே, பல உலக நாடுகள் சேர்ந்து அமைத்துள்ள செர்ன் (CERN) ஆய்வகத்தில் உலகத்தின் மிகப்பெரிய இயந்திரம் உள்ளது. அதில் போட்டான் துகள்களை மோதவிட்டுச் சோதனை செய்தார்கள். அந்தத் துகள்களின் மோதலில் வெளிப்படும் வெப்பமானது சூரியனின் நடுப்பகுதியில் உள்ள வெப்பத்திற்கு ஈடானது. அது வெளியானால் பூமியே எரிந்து விடும் . அது ஆபத்து என்று எச்சரித்தும் மீண்டும் மீண்டும் சோதனை செய்தார்கள். ஆனால் அது தோல்வியிலேயே முடிந்தது. இறுதியாக பல நூறு துகள்களை ஒன்றாக மோத விட்டுப் பார்த்து அந்த ஒன்றை கண்டுபிடித்தார்கள். அது உலகம் அதுவரை அறியாத உண்மை. எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் ஆகிய மூன்று விண்துகள்களையும் ஏதோ ஒன்று இழுத்து பிடித்திருக்கிறது. அதுவே அணுவிற்கும் விண்துகளுக்கும் மட்டுமல்ல ஒட்டுமொத்த பிரபஞ்சத்திற்கும் மூலம். கடைசியாக அந்த மூலத்துகள் ஒன்று ஒரு நுண்ணொடி அளவில் தோன்றி கருப்பு நிற அலையாக மாறி மறைந்தது. முன்பே அது பற்றிக் கருத்துரைத்த பீட்டர் ஹிக்ஸ் என்பவரின் பெயரையும் இந்திய விஞ்ஞானி ஹிதேந்திரநாத் போஸ் என்பவரின் பெயரையும் இணைத்து "ஹிக்ஸ் போஸான்" என்று பெயர் வைத்தார்கள். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான லியோன் லெடர்மேன் எழுதிய தி காட்ஸ் பார்டிகிள் (The Gods Particle) என்ற நூலின் பிரபலத்தால் அது கடவுளின் துகள் (Gods Particle or Dust Particle) என்றே அழைக்கப்படுகிறது. ஆம் இந்த உலகம் கடவுளின் துகளைக் கண்டு விட்டது. எதை நாம் உடைத்தாலும் அது கடைசியாக அணுவாகி, விண்துகளாகி, கடவுளின் துகளாகி, கடைசியாகக் கருப்பு நிற அலையாகி மறைந்துவிடும். எதைக் கடந்து சென்றாலும் கடைசியாக அதுவே வரும். ஆம் அதுவே கடவுள்நிலை.

தற்போது சொன்ன கருத்தில் கருப்பாக மாறி மறைந்து விடும் என்ற கருத்து மட்டுமே வந்ததே. அங்கே எதுவுமே இல்லையே கடவுள் எங்கே..? என்று கேட்டால் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே கருத்தாகும். எனவே இன்னும் தேடுவோம்.

3) வெளிப்புறக் கடப்பு :

இப்போது நாம் வெளிப்புறமாகக் கடக்க வேண்டும். நாம் இருக்கும் இடத்தை விட்டுக் கடக்க வேண்டும். ஊரைவிட்டு, வட்டத்தை விட்டு, மாவட்டத்தை விட்டு, மாநிலத்தை விட்டு, நாட்டை விட்டு, உலகை விட்டுக் கடக்க வேண்டும். நாம் இருக்கும் சூரிய குடும்பத்தைத் தாண்டிப் பல்லாயிரம் விண்மீன் குடும்பங்களைத் தாண்டிப், பால் வீதி மண்டலத்தையும் தாண்டிச் செல்லவேண்டும்.

நமது பால்வீதி மண்டலத்தின் அகலம் ஐயாயிரம் ஒளியாண்டுத் தொலைவு, நீளம் ஒரு லட்சம் ஒளியாண்டுத் தொலைவு. ஒளியின் வேகம் ஒரு நொடிக்கு 3 லட்சம் கிலோமீட்டர். அதுவே ஒரு நிமிடத்திற்கு... ஒரு மணி நேரத்திற்கு... ஒரு நாளைக்கு... ஒரு மாதத்திற்கு எனக் கணக்கிட்டு, ஒரு ஆண்டிற்கு எவ்வளவு தொலைவு செல்லுமோ அதுவே ஒரு ஒளியாண்டுத் தொலைவு ஆகும். கிட்டத்தட்ட ஒன்பது லட்சத்து நாற்பத்து

ஆறாயிரம் கோடி கி.மீ தொலைவு வரும். பால்வீதி மண்டலத்தைப் போல பல லட்சக்கணக்கான மண்டலங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மொத்தமாக கடந்தால் ஒரு பிரபஞ்சம். அது ஒன்றுதான் என்று நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் பிரபஞ்சம் ஒன்றன்று; பல இருக்கலாம் என்பது விஞ் ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் அவர்களின் கூற்று. எத்தனை பிரபஞ்சங்கள் இருக்கின்றதோ..!? அவை எல்லாவற்றையும் கடந்தால்....?

என்ன எதுவும் சொல்லாமல் நிறுத்தியிருக்கிறாயே என்று நீங்கள் கேட்பது புரிகிறது. தற்போது வரை நான்கு பகுதிகள் பார்த்தோம்.

1) யார் மீதும் எதன் மீதும் இருக்கிற பற்றுதலைக் கடப்பது..

2 அ) உட்புற கடப்பில் நம் உள்ளே மறைந்திருக்கிற எல்லாவற்றையும் கடந்து செல்வது..

2 ஆ) உட்புற கடப்பில் ஏதோ ஒரு பருப்பொருளின் உள்ளே கடந்து செல்வது..

3) வெளிப்புறக் கடப்பில் பிரபஞ்சங்கள் எல்லாவற்றையும் கடந்து செல்வது..

இந்த நான்கு பகுதிகளில் எதைக் கடந்து சென்றாலும் கடைசியாக எதுவுமே இல்லாதது போல் தோன்றுகிறது. எல்லாவற்றையும் கடந்தால் கடவுளைக் காணலாம் என்று சொன்னாயே எல்லாவற்றையும் எல்லா வடிவங்களிலும் தன்மைகளிலும் கடந்து போனால் எதுவுமே தெரியவில்லையே ஏன்..? கடவுள் எங்கே..? என்று கேட்டால் அதற்கான விடை கடவுள் என்னவென்று சொல்லி விட்டேன்; இன்னும் நீங்கள் உணரவில்லை. உணர வேண்டுமானால் இன்னும் நிறைய விளக்கங்கள் தேவைப்படும் என்பதுதான்.

வரலாறு, வாழ்வியல் உண்மைகள் வழியாகக் கிடைக்கும் தகவல்களை ஒன்றிணைத்தால் கடவுளை ஒருவாறு புரிந்து கொள்ளலாம். புரிந்து, தெரிந்து, தெளிந்தால் நாம் நம்மை அதன் நிலைக்கு உயர்த்திக் கொண்டு போய் நிறுத்தினால் கடவுளை உணரலாம்.

**முதல் உண்மை :**

வேதாத்திரி மகரிஷி ஒரு முறை எல்லா சமையத்தவர்களையும் சமையத் தலைவர்களையும் ஒன்றிணைத்து சமைய மாநாடு ஒன்று போடலாம் என்று நினைக்கிறார். இயற்கை வழியில் இறை வழியில் மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்தி வழிநடத்தும் முறைக்குச் சமையம் என்று பெயர். ஆளாளுக்கு அழகழகாகப் பக்குவமாகச் சமைத்த சமையல் இங்கே கெட்டுப் போய் கிடக்கிறதே..! விதம் விதமாய் இருந்தும் இல்லாதது போல் அறியாமையால் ஆளாளுக்கு அடித்துக் கொண்டு பட்டினி கிடக்கிறார்களே..! எல்லாவற்றையும் எல்லோரையும் இணைத்து ஒரு விருந்து போடலாமே என்று நினைக்கிறார்.

சமையத்தவர்களுக்கும் சமையத் தலைவர்களுக்கும் வேதாத்திரி ஐயா அவர்கள் என்ன செய்யப் போகிறார் என்று தெரியாமல் தம் சமையப் பெருமையை நிலைநாட்டுவதற்காக வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். மாநாட்டில் மகரிஷி அவர்கள் எழுந்து 'மதம், மதம் என்று உலகம் முழுவதும் சண்டைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. மதத்தின் தலைவர் கடவுள்தான். கடவுள் ஒருவரா..? பலரா..? பலர் என்றால் எந்தக் கடவுள் சிறந்த கடவுள்..? உண்மையான கடவுள்..? கடவுள் ஒருவர்தான் என்றால் இத்தனை மதங்கள் எதற்கு..? எல்லாவற்றையும் கலைத்துவிட்டு ஒரே மதமாகவே ஆக்கி விடலாமே..!? நீங்களே விடை சொல்லலாம், ' என்பது போன்ற வினா அமைந்த ஒரு உரையை ஆற்றிவிட்டு உட்கார்ந்து விட்டார். நொடிகள் மிக மெதுவாக டக்கு... டக்கு... என்று நகர்ந்து கொண்டிருந்தது. சில மணித்துளிகளும் கடந்து விட்டது. யாரும் எழுந்திருக்கவில்லை. எதுவும் சொல்லவும் இல்லை.

பாபா திரைப்படத்தை தொடங்கி வைப்பதற்காக வந்திருந்தாரே சச்சிதானந்த சாமிகள் அவர் எழுந்து, ' இங்கே இருக்கிற யாரும் பதில் அளிக்க மாட்டார்கள். இறைவன் ஒருவன்தான் என்று இங்கே இருக்கிற எல்லாருக்கும் தெரியும். ஆனால் அதைப் பொதுவெளியில் பேசிவிட்டால் இவர்களுக்கு இப்போது இருக்கிற இந்த இடம் இல்லாமல் போய்விடும்.. எனவே இதை இத்தோடு முடித்துக் கொள்ளலாம், ' என்று கூறி, கூட்டத்தை முடித்து வைத்து விட்டார். எல்லா மதத் தலைவர்களும் மக்களும் ஒன்றாகக் கூடியிருந்த இப்படிப்பட்ட ஒரு மாபெரும் நிகழ்வு தமிழ்நாட்டில் நடந்தது என்று பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் நாம் விரும்புவதில்லை.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடிய தகவல் : மதம், மார்க்கம், வணக்கம், வழிபாடு, பூசெய் முறைகள் என எல்லாம் அவரவர்கள் வாழ்கிற நிலத்தில் அதற்குத் தகுந்த அறிவைப் பயன்படுத்தி, உருவாக்கிக் கொண்டவை. வழிமுறைகள் தான் வேறுவேறு. இறைவன் என்பவன் ஒருவன்தான்.

**...(வளரும்)**

# கடைசிப் புன்னகை

கலைபாரதி

நம்ப முடியவில்லை. ஏற்றுக்கொள்ள மறுக்கிறது மனம். சென்ற வாரம் திங்கட்கிழமை எங்கள் பள்ளியில் நடந்த கலைத் திருவிழாவில் சந்தித்தோம். இந்தத் திங்களில் காலத்தோடு கலந்து போனார். மரணம் இயல்பானது என்பது அறிவுக்குத் தெரிகிறது. உணர்ச்சிக்குத் தெரியவில்லை. அவரையே நம்பி இருந்த அந்தத் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு யார் ஆறுதலும் தேறுதலும் சொல்லுவது..?



அவர் கருவாக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் சோ. பொற்செல்வி. மாணவர் நலனில் தன்னை உணர்பவர். பள்ளி குழந்தைகளைத் தன் சிறகுகளுக்குள் அடைகாத்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்றவர். சந்திக்கும் ஒவ்வொரு பொழுதும் பள்ளிச் சூழல், வகுப்பறை மேம்பாடு,ஆசிரியர்கள்,தன்னிடம் படிக்கும் குழந்தைகள் என உரையாடிக் கொண்டே இருப்பவர். தனக்குக் கிடைத்த தலைமை ஆசிரியர் பணி மூலமாகப் பள்ளி குழந்தைகளுக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அழுத்தமாக நம்பியவர்.

அவரிடம், "தொடக்கப்பள்ளி எங்ளுக்கெல்லாம் தாய்மடி போன்றது," என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பேன். என் மீதும் எங்கள் ஆசிரியர்கள் மீதும் தனிப்பட்ட முறையில் அன்பு பாராட்டியவர். எப்போதும் பிள்ளைகள் குறித்து உரையாடிக் கொண்டிருப்பவர். காலநேரம் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருந்தவரை காலன் எடுத்துக் கொண்டான் என்றுதான் சொல்லவும் தோன்றுகிறது.

புன்னகை ததும்பும் அவரது முகத்தை இனி எப்போது பார்ப்போம்.

அந்தப் பள்ளியைக் கடக்கும் பொழுதெல்லாம் அவருடைய நினைவுகளை எவ்வாறு கடப்பது? பள்ளிக் குழந்தைகளிடம் அவர் காட்டிய அன்பு தாய்மையின் கரிசனம். பேரன்பின் கருணையூற்று.

சென்ற திங்களன்று மாலை எங்களோடு ஒரு தேநீரைப் பகிர்ந்து கொண்டு புன்னகைத்து விடைபெற்றுச் சென்றார். அதுதான் கடைசி விடைபெறுதல் என்பது அப்பொழுது எங்களுக்குத் தெரியவில்லை.

என்னைச் சந்திக்கும் போதெல்லாம் எப்பொழுதும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார். "தாங்கள் செல்லுகின்ற கூட்டங்களுக்கெல்லாம் சொல்லுங்கள். உங்கள் சொற்பொழிவைக் கேட்பதற்காகவே நானும் வருகிறேன்," என்று சொன்னவரை இனி எப்போது காண்பேன். மனம் பிசைகிறது. பள்ளி வளாகத்தின் ஏதோ ஒரு மூலையில் நின்று எங்களை எப்போதும் ஒரு காற்றைப் போல கவனித்துக் கொண்டே இருப்பார். பள்ளித் தோட்டத்தில் உள்ள ஒரு செம்பருத்திப்பூவின் மலர்தலில் எங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பார். உழைப்பின் மீது அழுத்தமான நம்பிக்கை அவருக்கு. மாணவர்களுக்காக உழைப்பதை நிறுத்திக் கொண்டார் என்றும் சொல்லலாம்.

"நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே..." என்பார் பட்டினத்தார். ஆனால் அவரின் நினைவுகளை அவ்வளவு சீக்கிரமாக மறக்க முடியாது.

ஒரு பிள்ளை தாயை இழந்து விட்டான். ஒரு குடும்பம் தலைமகளை இழந்து விட்டது. எங்கள் தொடக்கப்பள்ளி நல்ல தலைமை ஆசிரியரை இழந்துவிட்டது. எங்கள் கருவாக்குறிச்சி கிராமம் அறத்தோடு பணி செய்த உழைப்பின் மகத்துவத்தை இழந்து நிற்கிறது.

இன்னும் இன்னும் கூடுதலாக உழைத்து மாணவர்களது உயர்வுக்குத் துணை நிற்பதே அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாக இருக்க வேண்டும். அதைத்தான் அவரும் விரும்பி இருப்பார்.

எங்கள் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் சோ. பொற்செல்வியின் ஆன்மா இறைநிழலில் இளைப்பாறட்டும்.

•

# லேட்டா போயிட்டுருக்கேன்

சா. தமிழ்ச்செல்வன்

அலுவலகமோ அல்லது வேறெந்த வேலையோ, காலை நேர பரபரப்பு என்பது, கிளம்புவதும் கிளப்பிவிடுவதுமாக அவரவர்பாடு. பல நேரங்களில் அவசரம் என்பது ஆத்திரத்தைப் போல எப்போது, எப்படி தன் வேலையைக் காட்டும் என்பது சம்பந்தப்பட்டவரே அறியாதது. அதன் விளைவுகள் அளவில்லாதது மற்றும் அபத்தமானது. எதிரேவரும் நன்கு அறிந்தவரை கூட அறியாதது போல சில நேரங்களில் கடந்து போய்விடுவதுண்டு. எதிரில் வருபவரும் சில வேளைகளில் அப்படித்தான். இதனால் பழக்கத்திற்கு ஒன்றும் பங்கமில்லை. நேரத்தின் அவசரம் தான் இதற்கு காரணம். நேரமா நம்மை அவசரப்படுத்துகிறது? நாம் தானே தாமதம் செய்துவிட்டு நேரத்தின் மீது பழிபோடுகிறோம்.

இப்படித்தான் ஒருநாள் நேரேதிரே வந்த நண்பர், நண்பரென்றால் சிறுவயது முதல் அடுத்தடுத்த வீட்டில், சிறிது தள்ளி, தெருக்கள்தாண்டி, ஒரே பள்ளியில், வகுப்பறையில் டீக்கடையில், திரையரங்கில், திருவிழாவில் எங்கெங்கோ அவ்வப்போது சந்திப்புகள், அனைத்தும் ஒரே ஊரில் என்றால் அவருக்கும், அவர்நிலை எனக்கும் இதுநாள் வரை நன்கு தெரிந்து தொடரும் நீண்ட அறிமுகம் அல்லது நட்பென்றும் கொள்ளலாம். இவ்விடத்தில் நன்கு தெரிந்தவர், அறிமுகமானவர், நண்பர், நீண்டநாள் பழக்கம், என்னுடன் பணிபுரிந்தவர், இதற்கெல்லாம் நீள் விளக்கம் தேவையென நான் நினைக்கிறேன். நீங்கள்?

அன்றைய காலைப் பொழுதில் என்ன அவசரமோ எதிரே வந்தவர் சற்று புன்னகைத்து லேட்டா போய்ட்ருக்கேன் என சிரித்தவாரே வேகமாக நகர்ந்தார். அந்த ‘லேட்டா போய்ட்ருக்கேன்’ என்ற சொல் எனக்குள் பலவித லேட்களை நினைவூட்டியது.

அதில் முதலில் வருவது காலையில் தூங்கி எழுவது. இது அவரவர் நிலைக்குத் தக்கவாறு மாறுபடும். உழைத்து, களைத்து உறங்கச் செல்பவர்கள் தாமதமாக எழுவதில் தவறேதும் இல்லை. இவர்கள் பெரும்பாலும் காலையிலேயே எழுந்துவிடுவார்கள்.

இன்றைய இளைய தலைமுறையின் காலைப் பொழுதுகள்தான் நம்மை





கவலைக்கொள்ள வைக்கிறது. அலைபேசியில் தொடங்கி அதிலேயே உறங்கச்செல்லும் வாழ்வு அவர்களுடையது.

சிலபேரிடம் இந்த புலம்பலை நாம் கேட்டிருக்கலாம். எனக்கு மட்டும் ஏன் எல்லாமே லேட்டா நடக்குது. இதில் எல்லாமே என்பதில் வேலை, திருமணம், குழந்தை பிறப்பு, வீடு கட்டுவது இன்னும் வாழ்க்கையில் என்னென்னவோ இந்த லேட்டிற்கு யாரை காரணமாக்குவது. அல்லது எது காரணம். தெளிவான விடை உண்டா? பொதுக்காரணி ஏதாவது என்று யோசித்துப் பார்த்தால் அடுத்தவரோடு ஒப்பிடுதலே அது. அறிந்தவரோ, அருகில் உள்ளவரோ நம் வயதை ஒத்த, அதே நிலையில் உள்ள ஒருவருக்கு 'நல்லது' என்று பொதுவில் அழைக்கப்படும் ஒன்று நடந்து, நமக்கு அது காலம் கடந்து கிட்டும் போது எழும் எண்ணமே எனக்கு எல்லாம் 'லேட்' என்பது.

தாமதம் என்ற பொருளில் பயன்பாட்டில் இருக்கும் 'லேட்' என்பதற்கும், இறந்தவர்களின் பெயருக்கு முன்னால் போடப்படும் 'லேட்' என்பது காலத்தை கொன்றவர் அல்லது காலத்தைக் வென்றவர் என்று பொருள் கொள்ளலாமா?

எப்பப்பாரு 'லேட்டா' தான் கிளம்புவான். அவனைப் போய் கூப்டியா 'லேட்டா' தான் அவன் எப்போதும் 'லேட்' தான். இப்படி நிறைய அங்கலாய்ப்புகள் நம்மிடம் உண்டு. ஆனால் நமக்கே சந்தர்ப்பவசத்தால் சில நேரங்களில் 'லேட்' ஆகலாம். ஒரே ஓராயிரம் சமாதானங்கள் சொல்ல நியாயப்படுத்துவோம்.

சரியான நேரத்திற்கு வரவேண்டும் என்று எதிர்பார்ப்பவருக்கும், அந்த எதிர்ப்பார்ப்பை நிராசையாக்குபவருக்கும், நடுவில் எழுவதே இந்த லேட். அதுசரி சரியான நேரம் என்பதை யார் நிர்ணயிப்பது அல்லது நிர்ணயித்தது.

எல்லா 'லேட்டிற்கும்' அலுத்துக் கொள்ளும் நாம், அந்த 'இறுதி அழைப்பு' நமக்கு 'லேட்' ஆனால் மகிழ்ச்சியா, மன வருத்தமா? ●

**உழைக்கும் மக்களுக்கான ஒரு இலட்சம் பணமுடிப்பு வழங்கும் உழைப்புக்கொடை ப.பரிதிபாண்டியன் விருதுக்கு நன்கொடை வழங்குபவர்கள் 9659335462 எண்ணிற்கு ரூ.1000 மட்டும் *Gpay* செய்து அதே வாட்ஸ்அப் எண்ணிற்குத் தகவல் தெரிவிக்கவும்.**

கட்டுரை

# இறையியல்

கோபா



தமிழில் 'இறை' என்கிற சொல்லுக்கு அரசு என்று பொருள்.

அரசு என்றால் ஆட்சி என்று பொருள்.

அரசை ஆட்சியை கை கொண்டிருப்பது ஆண் எனில் அரசன், பெண் எனில் அரசி.

இறை' யில் உயர்திணை ஆண்பண்பு சேர்ந்து, இறைவன். பெண் எனில், இறைவி.

ஆட்சி என்றால் செல்லுதல், நடத்தல் என்றும் பொருள். அதாவது வழி என்று பொருள்.

அவ்வகையில் வழிநடத்துதல் என்பதே ஆளுதல் என்பதாகும்.

எல்லாவற்றையும் வழிநடத்துகிற பண்பே இறைமை. சீராக நடைபெறும் அப்பண்பையே நாம் இறையாண்மை என்கிறோம்.

தலைமைப்பண்பு உள்ள மனிதரை இறைவன் என்றும் இறைவி என்று அழைக்கலாம்.

இந்த இயற்கையை வழிநடத்துவது கட்புலனாகா ஓர் இறைப்பண்பு ஆகும்.

இப்பண்பையே நாம் கடவுள் என்றும் அழைக்கிறோம்.

கடவுள் தண்மை என்பதும் ஒரு பண்புதான்.

அப்பண்பே எல்லாவற்றினும் உயர்ப்பண்பாக உணரப்படுகிறது.

அப்பண்பையே நாம் மனிதம் என்கிறோம்.

மனிதன் என்பவன் உடலால் ஆனவன். அவனுக்குள் அன்பு, கருணை, இரக்கம், அறம், நெறி போன்ற உயர்ப்பண்புகள் இணைந்தே மனிதம் என்றாகிறது. மனிதம் என்பது குணபூரணத்துவம். அதாவது, முழுமை.

இம்முழுமை நிலையே இறைமை எனப்படுகிறது.

இவ்விறைமையைச் சொல்லும் தத்துவ உருவகங்களே கடவுளர் சிலைகள்.

சிலைகளல்லாத இறைத் தத்துவங்களும் உண்டு. இவை இறைமையடைதலின் வெவ்வேறு மார்க்கம் ஆகும்.

அதாவது, வழி ஆகும்.

நாம் இறைமை அடைய தத்துவத்தை உள்வாங்கிட வேண்டுமே தவிர அதன் விளக்க உருவகங்களிடம் சரணடைந்து, வழிபாடு என்கிற பெயரில் சடங்குகள் செய்து சண்டையிடக்கூடாது.

அப்படிச் செய்தோம் எனில் அது வழிகாட்டி மரம் சொல்லும் திசையில் பயணித்து இலக்கு அடைவதை விட்டுவிட்டு, வழிகாட்டி மரமே வழியாக வேண்டும் என சண்டையிடுவதற்கு ஒப்பானது ஆகும். .. **தொடரும்**

# செஞ்சி தமிழினியன் கவிதைகள்

1. பத்தும் எட்டும்
18 நாளும்
பகலில் பாரதப் பொழிவும்
ராத்திரியில் கூத்தும்.

முதல்நாள் ஜலக்கிரீடை
எங்கள் உபயம்.
கூத்தாடிகளுக்கு
ஒருவேளை சோறு மட்டுமே.
மற்ற உபயத்தில்
இட்லி
கறிச்சோறு
ரசத்தோடு
கூடவே சாராயமும்.

இன்னிக்கி
மூனாம் நாள்
துகிலுரி...
அபலையின் அலறல் கேட்டு
கூத்து மேடை உச்சியிலிருந்து
புல்லாங்குழல் தெரிய
புடவைகள் நீளும் .
இழுக்க இழுக்க.....
மலையாய் குவியும்.

கோவிந்தா .....
கோவிந்தா.....என
ஆங்காங்கே
மெறலு வந்தவர்களை
மேடை நோக்கி செல்லாமல் தடுத்து
கூந்தல் தெளித்து
மலை ஏத்துவார்கள்.

கதையோடு ஒன்றியவர்கள்
கண்கள் ஈரமாகும்.
புழுதியாய் பறக்கும்
வசவுச் சொற்கள்.
மயக்கத்தில் கிடப்பான்
துச்சாதனன்.

கூத்து முடிந்ததும்
புடவை முடிச்சிகளை
அவிழ்ப்பார்கள்.

இது கலையரசு வூட்டுது
இது சுப்பிரமணி வூட்டுது
இது நாட்டார் வூட்டுது
இது ஆனந்து வூட்டுது.

காலகாலமாய்
திரௌபதிகளும் புடவைகளும்
மாறவே இல்லை.

•

2. சங்கிலி வலையாய்
பின்னப்பட்ட கன்னிகளில்
மறைந்து
காத்திருக்கின்றன
உட்பகையும்,துரோகமும்.

ஆயுதங்களாய்
கூர் தீட்டப்படும் வார்த்தைகள்
மோதி மடிகின்றன.


சாமி ஊர்வலத்தின் முன்னே
அரங்கேறும் நாடகத்தில்
எல்லா கோமாளிகளும்
தலை வேஷம் தரிக்கிறார்கள்.

பம்பையும்
பறையும்
மேளமும்
அதிர்ந்து ஓய்கிறது.


புகைத்து எரிய துவங்கிய
வன்மம்
கை கலப்பில் முடியும்.
இதன் மீதம் உதறிகள்
எத்தனை வினாடிகள்
காவு வாங்குமோ.

கிராமம் மட்டுமல்ல
மனிதர்களும்
வறண்டு போய் கிடக்கிறார்கள்

•



# திரையிசைப் பாடல்களில் கவிதை நெசவு



சின்னப்பயல்

திரையிசைப் பாடல்களில் கவிதைகள் உண்டு. ஆனால் கவிதையையே பாடலாக்க ஒருவரால் முடியும் என்றால் அவர் அண்ணன் பழநிபாரதியாகத்தான் இருக்க முடியும். தமிழ் இலக்கியம் படித்து எழுத வந்தவர் அல்ல அவர். தமிழ் இலக்கியமாகவே வாழ்ந்து எழுத வந்தவர். எழுதிக் கொண்டிருப்பவர் என்பதுதான் சத்தியமான உண்மை.

கல்லூரி வகுப்பறைக்குள் நுழையாத அண்ணன் பழநிபாரதி கல்லூரி வகுப்பறையில் தான் என்னுடைய காதுகளுக்குள் நுழைந்தார். என்னுடைய பேராசிரியர் ச.அந்தோணிடேவிட் நாதன் பாடம் நடத்தும்போது அது சங்க இலக்கியமாக இருந்தாலும் வேறு எந்த இலக்கியமாக இருந்தாலும் புதுக்கவிதைக்கு என்று ஒரு தனித்த இடம் உண்டு. அதில் அண்ணன் பழநி பாரதியின் கவிதையும் உண்டு. இருபதுஆண்டுகளுக்கு முன்பு ஐயா அந்தோணி டேவிட் நாதன் அக இலக்கியம் நடத்தும்போது அண்ணன் பழநி பாரதியின் கவிதையை மேற்கோளாக்குவார். காதலியிடம் சம்மதத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் ஏக்கம் மிகுந்த தவிப்பின் வலி மிகுந்த வெளிப்பாடாக அந்தக் கவிதை அமைந்திருக்கும். அந்த இளங்காதலன் இப்படிச் சொல்கிறான்.

**"தண்டவாளத்தில்**

**தலை சாய்த்து பூத்திருக்கும்**

**ஒற்றைப் பூ**

**என் காதல்**

**நீ நடந்து வருகிறாயா..?**

**ரயிலில் வருகிறாயா..?"**

இது வெறும் வார்த்தைகள் என்றோ வரிகள் என்றோ நாம் கடந்து சென்று விட முடியாது. அந்த வரிகள் இளங்காதலின் ஏக்கம். ரயில் ஏறியவள் நடந்து வந்தால் அது உடன்படுதல். நடந்து வந்தவள் ரயிலேறினால் அது முரண்படுதல். தலை சாய்த்து வைத்திருக்கும் ஒற்றைப்பூவை எடுத்து தொலைத்தால் அவள் அவனுக்குள் தொலைந்து போவாள். எடுக்காமல் தொலைத்தால் அவன் தொலைந்து போவான். காதலுக்குள் தொலைந்து போனால் அழகு. தொலைத்து போனால் அவலம். தொலைதலும் தொலைத்தலும் கலந்து தானே காதல்.!

இந்த உணர்வுகளை கவிஞர் மீரா வேறு மாதிரி சொல்வார்.

**"காதல் கிணற்றுக்குள்**

**கால் வழுக்கி**

**விழுந்த எனக்கு**

**விழிக்கயிற்றை நீட்டினாள்**

**தூக்கி விடுவதற்கு..? தூக்கிலிடுவதற்காக..?"**

மீராவும் பழநிபாரதியும் இணையும் புள்ளி இது. நடந்து வருவாளா..? ரயிலில் வருவாளா..? என்பதும் தூக்கி விடுவாளா..? தூக்கி லிடுவாளா..? என்பதும் ஒன்றுதான்.நடந்து வந்தால் உடன்பாடு. ரயிலில் வந்தால் ஒரு தலை ராகம்.

அண்ணன் பழநிபாரதி புதுக்கவிதையில் எழுதிய ஆண் மன அவஸ்தையை அல்லது ஆழ்மன அவஸ்தையை அவரது திரை இசைப்பாடலிலும் காணலாம்.இசையும் காட்சியும் எதுவும் இல்லாமல் கவிதை வரிகளை மட்டும் பாருங்களேன்.

தாலாட்டுபவள் அம்மாவாகத்தான் இருக்க முடியும். ஆனால் அம்மாவுக்கு இணையான பேரன்பை காதலியிடமும் காண்கிறார். பாடல் இப்படி ஆரம்பம் ஆகின்றது..

**என்னை தாலாட்ட வருவாளா**

**நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளா**

**தங்க தேராட்டம் வருவாளா**

**இல்லை ஏமாற்றம் தருவாளா**

**தத்தளிக்கும் மனமே தத்தை வருவாளா**

**மொட்டு இதழ் முத்தம் ஒன்று தருவாளா**

என்று எதுவும் புரியாமல் காதலன் தவிக்கிறான். தனக்குள் உடைகிறான். உடைந்து அழுகிறான் என உணர்வுகளின் ஊர்வலமாகச் செல்கிறது. அடுத்த வரியில் அவனது வேட்கை, விருப்பம், விழைவு அத்தனையும்

கொஞ்சம் பொறு

கொலுசொலி கேட்கிறதே...

என்ற வரிகளில் தன் பதற்றத்தை,தவிப்பை, ஏக்கத்தை நெஞ்சோடு கிளத்தலாய்,நெஞ்சுக்கு சொல்வதாய், நெஞ்சுக்குள் சொல்வதாய்வெளிப்படுத்தி இருப்பார்.

இதனைப் போன்று தான் அழகியிலும்

**"ஒளியிலே தெரிவது தேவதையா**

**உயிரிலே கலந்தது நீ இல்லையா..**

**இது நெசமா நெசம் இல்லையா..**

**உன் நினைவுக்கு தெரியலையா.."**

என்ற பாடலிலும் ஒளியில், தேவதை உயிரில் பழநிபாரதியின் கவிச்சுடர் ஒளிர்வதை நம்மால் உணர முடிகிறது. கவிதையை அறிய வைப்பதை விட வாசகனுக்கு உணர வைத்து விடுகிறார். அறிதலைத் தாண்டிய உணர்தல் மனசுக்குள் ஐப்பசி மாத அடை மழையாய் அப்பிக்கிடக்கிறது.

இதனைப் போன்று

முன்பனியா

முதல் மழையா என்ற பாடலிலும் வழியில் இதயத்தை தொலைத்தவன்.. அவள் விழியில் அதனை கண்டடைந்தான் என்பதை,

**"என் இதயத்தை**

**என் இதயத்தை**

**வழியில் எங்கேயோ மறந்து தொலைத்து விட்டேன்**

**உன் விழியினில்**

**உன் விழியினில்**

**அதனை இப்போது கண்டுபிடித்து விட்டேன்"** என்கிறார்.

நாங்களும் கண்டுபிடித்து விட்டோம்.

கவிதைகளின் வழி அண்ணன் பழநி பாரதியை.

அவர் திரையிசைப் பாடலிலும் கவிதை நெசவு செய்பவர். ஆதலால் அவரை எங்களுக்கு நிரம்பப் பிடிக்கும்.

-பேசுவோம்

---



*1. ஒரு*
*விளக்கை ஏற்றிவைத்தேன்.*
*அது*
*சுடரலாம்*
*சுடராமலும்...*
*ஆனால்*
*விளக்கேற்றி வைப்பது*
*என் வேலை.*

•

*2. சிலநேரங்களில்*
*சன்னலுக்கு*
*வெளியே*
*கண்ணாடி கொத்தும்*
*அந்த*
*ஒற்றைக்குருவியாய்*
*இருந்துவிடத் தோன்றுகிறது...!*

•

*3. கணக்கின்றி*
*களவாடப்படுகின்றன*
*முல்லையும்*
*குறிஞ்சியும்.*

*வெறியாட்டு*
*நிகழ்த்தும்*
*வேலனுக்குக்*
*குவாட்டரும்*
*பிரியாணியும்.*

*சினத்தீ*
*பெருந்தீயாய்க் கொப்புளிக்க*
*பார்த்துக் கொண்டிருக்கிறாள்*
*கொற்றவை.*


•

*- கலைபாரதி*

**அன்பான வேண்டுகோள்!**

**கண்ணாமூச்சிக்கான ஆண்டுக்கட்டணம் சென்ற இதழோடு நிறைவடைந்தவர்கள் தாங்களாகவே ஆண்டுக் கட்டணத்தைப் புதுப்பித்துக் கண்ணாமூச்சி ஆட்டத்தில் பங்கேற்க அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.**

**- கண்ணாமூச்சி**



வெற்றி! வெற்றி! வெற்றி!
தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி
காமேஸ்வரம் – கிழக்கு, நாகை மாவட்டம், செல் : 6380763723
2024 - 25 ஆம் ஆண்டு
19 ஆவது முறையாக 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்விலும்
தொடர்ந்து 8 ஆவது முறையாக 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்விலும்
100% தேர்ச்சி
R.ஜீவிதா 496/500
A.லக்ஷண்யா 494/500
R.டேஸ்மா 477/500
Y.வில்சன் 576/600 Maths-Biology
P.ஜெப்ரின் ஜோன்ஸ் 551/600 Maths-Biology
V.தனஸ்ரீ 536/600 Maths-Biology
வெற்றிக்கு உழைக்கும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோருக்கும்
சாதனை படைத்த மாணாக்கர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களும்... வாழ்த்துக்களும்...
தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி ,
தூய செபஸ்தியார் கல்வி அறக்கட்டளை, காமேஸ்வரம்.


சிவா
போட்டோ பிரேம்ஸ்
வீடியோஸ் & டிஜிட்டல் ஸ்டுடியோ
மன்னார்குடி
அனைத்து விதமான கேடயங்களும்
ரூ.100 முதல் கிடைக்கும்
1 மணி நேரத்தில் தயார் செய்து தரப்படும்
செல்: 93440 10195 - 92620 74795